# களத்தில்

திருவள்ளுவர் ஆண்டு 2026 விடை 5 (19.05.95) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவருஞ் செய்தித்தாள் அன்பளிப்பு: 40p


**தமிழ் மக்களை ஐந்து சதத்துக்கும் கணக்கெடுக்க மாட்டேன்**

- சந்திரிகா

விபரம்:
12 ஆம் பக்கம் பார்க்க

# பெரும்போர் ஆயத்தங்களில் சிறீலங்கா

தமிழீழ மக்கள் மீது, முழு அளவிலான பெரும் போர் ஒன்றை நடாத்துவதற்கான இறுதி ஆயத்தங்களில் சிறீலங்கா இறங்கியுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் உறுதி செய்கின்றன. சமாதானப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில், இரகசியமாகப் படைப்பலத்தை பலப்படுத்திக் கொண்ட சந்திரிகாவின் அரசு, தற்பொழுது பகிரங்கமாகவே போர் நடவடிக்கைகளை வேகப்படுத்தத் தொடங்கியுள்ளது.

நவீன ஆயுதங்களின் கொள்வனவு முயற்சிகள் குறிப்பாக, விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு ஈடுகொடுக்கக் கூடிய கருவிகளைப் பெறுதல், மேலதிக விமானங்கள், கப்பல்களை வாங்குதல் போன்ற நடவடிக்கைகளில் சிறீலங்காவின் பாதுகாப்புப் படைஅதிகாரிகள் உலகெங்கும் பம்பரமாகச் சுழன்று வருகின்றனர். ஆயினும்சர்வதேசரீதியில் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான அங்கீகாரம் வளர்ந்து வரும் இச் சூழலில், சிறீலங்காவிற்குத் தனது இலக்கை முன்பு போல்அடையமுடியாத நிலை காணப்படுவதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## இரகசியமாகத் திட்டமிடுகிறாராம் ரத்வத்த

இதேவேளை, டெல்லியில் நடந்து முடிந்த தெற்காசியத் தலைவர்களின் சார்க் மாநாட்டில், முதல் தடவையாக விடுதலைப் புலிகளின் இராணுவ பலம் உணரப்பட்டதாக டெல்லிச் செய்திகள்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

## சலுகைகளைக் காட்டி ஏமாற்றமுடியாது

### மேதினக் கூட்டத்தில் தமிழ்ச்செல்வன் உரை

யாழ்ப்பாணத்தில் கடந்த மேதினத்தன்று நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்உரையாற்றினார்



கடலால் தனது ஆக்கிரமிப்புக்களைத் தொடர்ந்த சிறிலங்கா அரசிற்கு, தேசியத் தலைவரின் கூர்மையான வழிகாட்டலில் உருவாகியகடற்புலிகள் தங்கள் வீரதீரச் செயல்களால் கடலாதிக்கத்தைக் கட்டுப்படுத்தியமை பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியது. இது அரசாங்கத்தின் உறுதிப்பாட்டிற்கும் ஆக்கிரமிப்பு எண்ணப்பாட்டிற்கும் பலத்த அடியாகவும் அமைந்தது. இன்று,தனது வான்படையை முழுமையாக நம்பியிருந்த அரசிற்கும் இராணுவத்திற்கும், எமது தேசியத் தலைவரின் அயராத முயற்சியால் உருவாக்கப்பட்ட

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

**உள்ளே**



இலண்டனில் "யாழ்முரி" அறிமுக விழா



நெதர்லாந்தில் "சித்திரை மாலை"



ஜேர்மனியில் "மேதினம்"

## சிறீலங்காவே மோதல் தவிர்ப்பு முறிவின் காரணி

### -நவசமசமாசக்கட்சி பகிரங்க அறிக்கை

"மோதல் தவிர்ப்பு முறிவிற்கு முழுப்பொறுப்பும் சந்திரிகா அரசே. வடக்கு–கிழக்கு தமிழர் தாயகம் என்பதனை அங்கீகரிக்க தவறியதன் காரணமாகவே, விடுதலைப் புலிகள் இராணுவ நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்பது தெளிவு. விடுதலைப் புலிகள் தற்போது கிழக்கு மாகாணத்தில் செயற்படுவதைத் தெட்டத் தெளிவாகக் காட்டி நிற்கின்றனர். இவ் உண்மைகளை உணர்ந்து சிறீலங்கா அரசு பொருண்மியத் தடைகளை உடனடியாக நீக்கி, போர் முயற்சிகளைக் கைவிட்டு தமிழ்பேசும்மக்களின்சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து சுயாட்சியைவழங்கவேண்டும்" இவ்வாறு நவசமசமாசகட்சியின் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சிறீலங்காப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே

# தமிழீழமெங்கும் கடுஞ் சண்டை

தமிழீழத்தின் பகுதிகளெங்கும், விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்காப் படைக்ளுக்குமிடையே கடுஞ் சண்டை நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் சிறீலங்காப் படைகள், தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமிக்க முற்பட்டதையடுத்து மூண்ட சண்டைகள் தமிழீழமெங்கும் உக்கிரமாய்நடைபெறுகிறது. விடுதலைப் புலிகளின்வீராவேசமானதாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல், சிறீலங்காப் படைகள் திணறுவதாகவும் முற்றுகைக்குட்பட்டு முகாம்களில் முடங்கியுள்ளதாகவும், தமிழீழச் செய்திகள் தெரிவிக்கின்றன. வடபகுதியின் பெரும்பாலான முகாம்கள் வான், தரை, கடல் என புலிகளால் சூழப்பட்டு முற்றுகைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. சிறீலங்காஇராணுவத்தினருக்கான எல்லா விநியோகங்களும் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட நிலையில், இராணுவத்தினர் உளவியல் ரீதியாகவும் உடலியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்ட நிலையில்உள்ளனர். மேலும் பூநகரி முகாமானது மூன்றாம் ஈழப்போர் தொடங்கியகாலந்தொட்டுமுற்றுமுழுதாக முற்றுகைக்குள்ளானதாகவும், சுமார் இரண்டாயிரம் சிறீலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் சரணடையக் கோரியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதுமட்டுமன்றி அநுராதபுரம் பகுதியில் சிங்கள பொலிஸ் நிலையமொன்று விடுதலைப்புலிகளினால்தாக்கியழிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்...

## விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் தெற்காசியாவுக்கான அமெரிக்க அதிகாரிகளைச் சந்திப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் லோறன்ஸ் திலகர் வைகாசி நாலாம் நாள்வியாழக்கிழமை அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பதில் உதவிச் செயலாளர் திமோத்தி கார்னேயை வாசிங்டனில் சந்தித்தார்.

இச்சந்திப்பால் அதிர்ந்துபோன சிறீலங்காஅரசுவட்டாரங்கள், சிறீலங்காப் பாராளுமன்றம்வரை இதுகுறித்து ஆட்சேபம் எழுப்பியுள்ளதாகக் கொழும்புச்செய்திகள்தெரிவிக்கின்றன. அமெரிக்க அரச கரும திணைக்களப் பேச்சாளர் நிக்லஸ் பேண் இது குறித்து

தொடர்ச்சி 2 ஆம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# சிறீலங்கா கடற்படையுடன் இந்தியக் கடற்படை கூட்டு ரோந்து

## - மத்தியஅரசு தமிழக அரசுக்கு உத்தரவாதம்

பாக்குநீரிணையில் மீன் பிடிக்கும் தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு, இந்தியக் கடற்படையும் சிறிலங்காக் கடற்படையும்கூட்டு ரோந்தில் ஈடுபடுவதற்கு மத்திய அரசு உத்தரவாதம் அளித்துள்ளது.இத்தகவலைதமிழகமீன் வளத்துறை அமைச்சர் டி.ஜெயக்குமார் சட்டப்பேரவையில்தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், தனுஷ்கோடிக்கு அருகே அண்மையில் கடத்தப்பட்ட 65 மீனவர்களும் விடுவிக்க பட்டுள்ளதாகவும்தெரிவித்தார்.

# விஜயகுமாரதுங்காவை ஜே.வி.பி. கொல்லவில்லை

"விஜயகுமாரதுங்காவின் கொலை, சதி நடவடிக்கையே. இக்கொலையை ஜே.வி.பி செய்திருக்க முடியாது" என விஜயகுமாரதுங்கா கொலை குறித்து விசாரணைநடத்திவரும்ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த சட்டத்தரணி ரஞ்சித் அபயசூரிய தெரிவித்தார்.

இவர் தனது நீண்ட சாட்சியத்தில், "1983 வைகாசி18இல்விஜயகுமாரதுங்காவைக் கொல்ல முதலில் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இம் முயற்சியில் விஜயவிற்குஅருகிலிருந்தவர்பலியானார். இச்சம்பவம் குறித்து கைதான ஒருவர், பின்னர் சட்டமா அதிபர் அனுமதியின்றி விடுவிக்கப்பட்டார். இவரை விடுவிக்குமாறு பணிப்புரை விடுத்தது யார்என்றும்அவர்கேள்விஎழுப்பினார்.

விஜயவின் கொலைக்குத் தாமே பொறுப்பு என சந்தேக நபரான லயனல் ரணசிங்க ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்தார். 1988 மாசி16இல்விஜயவின்மீதுதுப்பாக்கிச்சூடு நடத்திய இரு மோட்டார் சைக்கிள் ஓட்டிகளைத்தம்மால்அடையாளம்காட்ட முடியும் என சம்பவத்தை நேரில் கண்ட ஐவர்கூறியுள்ளனர்.

படுகொலை குற்றஞ் சாட்டப்பட்ட லயனல் ரணசிங்க என்ற இச் சந்தேகநபர், குற்றப் புலனாய்வினரால் நான்காம் மாடியில் வைத்து 68 பக்கமுடைய ஒப்புதல் வாக்குமூலம்அளித்தார்.

படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களைத் தேடுவதற்காக ஆயுதம் தாங்கிய 12 காவல்துறை அதிகாரிகளுடன் மற்றுமொரு காவல்துறை வாகனம் பின்தொடர, பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்ட லயனல் ரணசிங்க பின்னர் எப்படி காணாமற் போனார் என்பதை அறிவது அவசியம். என்று தனது சாட்சியத்தில்குறிப்பிட்டார்.

# கரும்புலிக் கப்டன் சாந்தா நினைவுக்கல் நாட்டல்

திருமலைத்துறைமுகத்தினுள்புகுந்து எதிரியின் கடற்படைக் கலங்களை உடைத்தெறிந்து,வீரவரலாறுபடைத்த கடற்கரும்புலிகளில்கப்டன் சாந்தாவின் (சுப்பிரமணியம் விஜயதேவி 7ஆம் வட்டாரம் புங்குடுதீவு – தற்போதைய முகவரி: மின்சாரநிலையம் சுன்னாகம்) திருவுருவப்படம், அவர்களது இல்லத்தில் இறுதி வீரவணக்கத் திற்காக வைக்கப்பட்டு, சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்ல ப்பட்டு சுன்னாகம் பொதுச் சந்தை மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. அங்கு இறுதி வீரவணக்கக் கூட்டம் நிறைவுற, ஊர்தி பவனியாகக் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துச்செல்லப்பட்டு இறுதி இராணுவமரியாதையுடன் நினைவுக்கல்நாட்டப்பட்டது.

# மீன் பிடித்தலுக்கு முற்றாகத் தடை

வடக்கு–கிழக்குக்கடற்பிராந்தியத்தில் மீன் பிடித்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டிருக்கிறது. இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

# மீன் பிடிப் படகுகளுக்கு கடற்படையினர் தீவைப்பு

## - இரு மீனவரைக் காணவில்லை

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தாழையடி கடற்பகுதியில் வைத்து சிறிலங்காகடற்படையினர்மீனவர்களது இரண்டு படகுகளைத் தீ வைத்து நாசமாக்கியதாக அங்கிருந்து கிடைக்கும்செய்திகள்தெரிவிக்கின்றன. இக் கடற்பரப்பில் நடந்த இந்தச் சம்பவத்தின்போது, மீனவர்கள் இருவரைக் காணவில்லையென்றும் அறியப்படுகிறது.

# வடக்கு - கிழக்கில் இராணுவத்தினரால் 12,000 பேர் காணமற் போயினர்

வட–கிழக்குப் பகுதியில் கடந்த ஆறு ஆண்டுகளாக சிறீலங்கா இராணுவ த்தினரால் பன்னீராயிரம் பொதுமக்கள் காணாமல் போயுள்ளதாக, காணாமல் போனோர் தொடர்பாக அமைக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழுவிற்குப் புகார்கள் கிடைத்துள்ளதாக, இவ் ஆணைக்குழுவில் இருந்து கிடைக்கும் தகவல்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

இவர்கள் சிறீலங்கா இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு ள்ளனரா அல்லது இவர்களுக்கு என்ன நிகழ்ந்துள்ளது என்பதைக் கண்ட றிந்து கூறுமாறு மேற்படி சனாதிபதி ஆணைக்குழுவிடம் காணா மற்போனோரின் பெற்றோரும், பொது அமைப்புக்களும்கோரியுள்ளன.

இதுவிடயத்தில் வெளிநாடுகளைச் சேர்ந்த மனிதஉரிமைகள் பேணும் அமைப்புக்களும் கவனம் செலுத்தி வருவதாகமேலும்தெரியவருகிறது.

# நடுகல்

திருமலைத்துறைமுகத்தினுள்புகுந்து எதிரியின் கடற்படைக் கலங்களை உடைத்தெறிந்து,வீரவரலாறுபடைத்த கடற்கரும்புலிகளில்கப்டன் சாந்தாவின் (சுப்பிரமணியம் விஜயதேவி 7ஆம் வட்டாரம் புங்குடுதீவு – தற்போதைய முகவரி: மின்சாரநிலையம் சுன்னாகம்) திருவுருவப்படம், அவர்களது இல்ல த்தில் இறுதி வீரவணக்க த்திற்காக வைக்கப்பட்டு, சகல அணிவகுப்பு மரியாதைகளுடன் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப் பட்டு சுன்னாகம் பொதுச் சந்தை மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது. அங்கு இறுதி வீரவணக்கக்கூட்டம்நிறைவுற, ஊர்தி பவனியாகக் கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் எடுத்துச்செல்லப்பட்டு இறுதி இராணுவ மரியாதையுடன் நினைவுக்கல்நாட்டப்பட்டது.

# மற்றுமொரு போர்க்கப்பல் மயிரிழையில் தப்பியது

கடந்த மாதம் திருமலை துறை முகத்தில்புலிகளால் சூரயா, ரணசுறு ஆகிய போர்க்கப்பல்கள் தகர்க்கப்பட்ட போது, அருகே நங்கூரமிட்டிருந்த 'ஜகதா'எனும்சீனத்தயாரிப்புகடற்படைக் கப்பல் மயிரிழையில் தப்பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சுற்றி வளைத்து தேடுதல்

மட்டக்களப்பு மாவட்டம் காரைதீவுப் பகுதியில், சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த மாதம் 19 ஆம் திகதி முதல் தேடுதல் வேட்டைகளில் இறங்கியு ள்ளனர். இவர்கள் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது டன், தேடுதல் வேட்டையின் போது அப்பாவிப் பொதுமக்களைத் துன்பு றுத்துவதாகவும் அறிய வருகிறது மேலும் செங்கலடி, வாழைச்சேனைப் பகுதிகளிலும் இராணுவத்தினர் வீதியோரக்கடமைகளிலும் தேடுதல் நடவடிக்கைகளிலும்ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை படுவான்கரைப் பகுதிகளிலும் கவச வாகனங்கள் சகிதம் இராணுவத்தினரின் அட்டகாசங்கள் தொடர்வதாக அங்கிருந்து வரும் செய்திகள்கிடைக்கின்றன.

# விடுதலைப்புலிகளின்..

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்க அரசு சமாதானமான ஒரு அரசியல் தீர்வைத்தான் வலியுறுத்தி வருவதாகக் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உண்மைநிலையைக் கண்டறிய சர்வதேச நாடுகளும், சர்வதேச அமைப்புக்களும் அதிக அக்கறை காட்டத் தொடங்கியுள்ளதையடுத்து, சிறீலங்கா எதிர்ப்பிரச்சாரங்களை வேக மாக்கி வருகின்றது. ஐரோப்பிய சமூக நாடுகளின் அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் சர்வதேச அமைப்புக்கள் மூலம் உண்மை நிலைகள் பற்றிய தெளிவைப்பெறக்கூடும் என்ற மனப்பய த்துக்கு சிறீலங்கா அரசு ஆளாகியுள் ளமையே,எதிர்ப்பிரச்சாரங்களைமுடுக்கி விடத்துடிப்பதன் அடிப்படைக் கார ணம் என கொழும்புச் செய்தித்தாள்கள் கருத்துதெரிவித்துள்ளன.

# மாணவருக்கு ஆக்கபூர்வ ஊக்குவிப்புத் தேவை

## பரிசு பெற்ற மாணவரை பாராட்டித் தலைவர்

எமது மாணவ சமூகம் துறைசார் கல்வியுடன் நின்றுவிடாது பொது அறிவுத் திறனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஆக்க பூர்வமான ஊக்குவிப்புக்கள் அவ ர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்.இந்த வகையில்,தமிழீழவிடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு ஆண்டு தோறும் நடத்திவரும்பொதுஅறிவுத்தேர்வுஒரு சிறந்த தூண்டுதலாக அமைகிறது. இப்பொதுஅறிவுத்தேர்வைதற்கொடை யாளி அன்னைபூபதி நினைவாக நடத்துவதுசாலப்பொருத்தமாகும்"

இவ்வாறு அன்னைபூபதி நினைவு பொதுஅறிவுத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றமாணவர்களைவாழ்த்திதமிழீழத் தேசியத்தலைவர்வே.பிரபாகரன்விடுத்த செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் செய்தியை முழுமையாக இங்கே தருகிறோம்:

இன்றைய உலகம் மாறிவருகிறது. துரித கெதியில் முன்னேறி வருகிறது. அறிவியல் வளர்ச்சிப் போக்கில் வியக்கத்தகு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. மாறிவரும் இந்தப் புதிய உலகையும், அதற்கு அடிப்படையாக அமைந்துள்ள அறிவியல் வளர்ச்சிப் போக்கையும் எமது இளம் சமூகம் அறிந்து கொள்வது அவசியமாகும். இன்றைய உலகின் வளர்ச்சிக்கேற்ப எமது சமூகத்தின் நிலையைஉயர்த்திக் கொள்வதற்கு இந்த அறிவு இன்றியமையாதது. இது காலத்தின் தேவையுமாகும்.

மனித ஆற்றலுக்கும், ஆளுமை வளர்ச்சிக்கும் பொது அறிவு ஆதாரமானது. பொது அறிவு வாயிலாகவே மனித வாழ்வு பற்றியும், உலகநடப்பியல்பற்றியும்நாம்ஆழமாகப் புரிந்து கொள்ளலாம். வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்வதற்கு இதுஅவசியமானது.

எமது மாணவ சமூகம் துறைசார் கல்வியுடன் நின்றுவிடாது பொது அறிவுத்திறனையும் வளர்த்துக் கொள்ளவேண்டும்.அதற்குஆக்கபூர்வ மான ஊக்குவிப்புக்கள் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும். இந்த வகையில்,தமிழீழவிடுதலைப்புலிகளின் மாணவர் அமைப்பு ஆண்டு தோறும் நடத்திவரும்பொதுஅறிவுத்தேர்வுஒரு சிறந்த தூண்டுதலாக அமைகிறது. இப்பொது அறிவுத் தேர்வை தற்கொடையாளி அன்னைபூபதி நினைவாக நடத்துவது சாலப் பொருத்தமாகும்.

இன்றைய இடர்மிகுந்த காலத்திலும், பொது அறிவைப் பெறும் ஊடகங்கள் அருகிவிட்ட சூழ்நிலையிலும், ஒரு இலட்சத்திற்கும் கூடுதலான மாணவர்கள் இப்போது அறிவுத் தேர்வில் தோற்றியுள்ளனர். பொது அறிவுத்திறனை வளர்த்துக் கொள்வ தில் மாணவரிடையே பெருகிவரும் ஆர்வத்தை இது எடுத்துக் காட்டுகிறது.

இத்தேர்விலே தோற்றிய அனைத்து மாணவர்களுக்கும், இத்தேர்வு சிறப்புற நடைபெறத் துணைநின்ற அனைவரு க்கும் எனது பாராட்டுக்கள். இத்தேர்விலே சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கும் எனது நல்வாழ்த்து க்கள். பொது அறிவுத் துறையில் வியக்கத்தகு ஆற்றலைத் தொடர்ந்து வெளிப்படுத்திவரும் மாணவன் செல்வன் வி. கோகுலனுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மக்களின்உணவையும் கடற்படைகொள்ளை

வடபகுதியில் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் வாழும் 56,000 மக்களுக்கு வழங்கவென, 'லங்கா முதித்த' கப்பலில் அத்தியாவசியத் தேவைகள் ஆணையாளர் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட 30 ஆயிரம் தொன் அரிசி, மா, பருப்பு, சீனி, பால்மா, என்பன சிறீலங்காக் கடற்படையால் தனது பாவனைக்கென பறிக்கப்பட்டுள்ளது.


சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்பார்வையில் அனுப்பப்பட்ட இக்கப்பல், கடற்படையினரின் தலைமீட்டால் ஊர்காவற்றுறைக்கு, கொண்டுசெல்லப்பட்டது.

இவ்வாறே மண்ணெண்ணெயுடன் சென்ற 'மாகோ' கப்பலில் இருந்து 4500 பரல்களைப் பட்டப்பகலில் சிறீலங்காக் கடற்படை தரையிறக்கி கொள்ளையிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கொழும்பில் பணம் செலுத்தி இவற்றை யாழ்ப்பாணத்துக்குத் தருவித்தன என்பதுகுறிப்பிடத்தக்கது.

# யாழ் நகரில் மேதினம்

மேதினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண த்தில் மேதின எழுச்சி ஊர்வலம் பேரணியாக நடைபெற்றது. புலிகளின் விமான எதிர்ப்புப் படைப்பிரிவினர் பாதுகாப்பு வழங்க, கடற்புலிகள், தமிழீழக் காவல்துறையினர், மாணவர் அமைப்புக்கள், வெகுசன அமைப்பு க்கள், தொழிற் சங்கங்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மதகுருமார்கள் உட்பட பெருந்திரளானமக்கள்கலந்துகொண்ட ஊர்வலம் மேதினப் பேரணி மருதனாமடத்திலிருந்து தொடங்கி காங்கேசன்துறை வீதி வழியாக யாழ் பல்கலைக் கழகத்தை வந்தடைந்தது. தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகர னினது முழு அளவிலான உருவப்பட மும், தமிழீழத் தேசவரைபடமும், ஊர்வலத்தில் எடுத்துச்செல்லப்பட்டன. கடற்கரும்புலிகள் நினைவாக கப்பல் பவனியும் இடம்பெற்றது. ஊர்வலம் தொடங்கி கூட்ட மைதானத்தைச் சென்றடைய இரு மணிநேரங்கள் எடுத்தது.



# எங்கள் கைகளில்

இலங்கைத்தீவில் சந்திரிகாவின் நெறியாள்கையில் நடாத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை நாடகம், "தமிழர்களுடைய பிரச்சினைக்குச் சிறீலங்கா அரசால் ஒருபோதும் தீர்வினைக் காண இயலாது. தமிழர்களுடைய பிரச்சினைக்கு விடிவு காண வேண்டிய பொறுப்பு தமிழர்களுடைய கைகளிலேதான் உண்டு" என்ற முடிவுரையுடன் முற்றுப் பெற்றுள்ளது.

"தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு காணும் வலிமை தமிழர்களுக்கு உண்டு" என்பதை உலகுக்கு உறுதி செய்யக்கூடிய வகையில் தமிழீழ வான்வெளியில் நுழைந்த சிறீலங்காவின் ஆட்கொல்லி விமானப்படையின் இரு விமானங்கள், தமிழீழத் தேசியத் தலைவரால் உருவாக்கப்பட்டுள்ள விமான எதிர்ப்புப் படைப்பிரிவின், விமான எதிர்ப்புப் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காகி வெடித்துச் சிதறியுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முதற்தடவையாக தமிழீழ விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட இத் தாக்குதல், சிறீலங்கா அரசின் படைபலத்தைக் கேள்விக்குறியாக்கி உள்ளது.

இதுவரை காலமும், "கிழக்கை எமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறோம்" என வெற்றுப் பேச்சுப் பேசிவந்த சிறீலங்கா அரசு, திருகோணமலைத் துறைமுகக்கடற் பகுதியில் தொடங்கி- கட்டுமுறிவு இராணுவ முகாமைத் தகர்த்து மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை, அநுராதபுரம் என பரந்துபட்ட நிலையில் விடுதலைப் புலிகள் நடாத்திய, நடாத்தும் சிறீலங்காப் படைகளின் மீதான வெற்றிகரத் தாக்குதல்களால் நிலைகுலைந்து போயிருக்கின்றது.

தமிழீழ வான்வெளிகளில் பறப்பதற்குச் சிறீலங்காவின் விமானப்படையினரால் இயலாதநிலை தோன்றிவிட்டதைச் சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் உணர்கின்றன. கடலை வலம்வந்து காவல்புரியும் புலிகள், வானையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த நிலையில் சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள், வடக்கு-கிழக்கிலுள்ள தமது முகாம்களுக்கான உணவு வழங்கல்களைக்கூட நிறைவேற்ற முடியாத இக்கட்டான நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இதனைச் சமாளித்துப் படைகளை உற்சாகப்படுத்தும் நோக்கில் சிறீலங்கா அரசு, இராணுவ தொழில்நுட்ப சக்திவாய்ந்த போர்க் கருவிகளை வாங்கிக்குவிக்கக் கடும் முயற்சியில் இறங்கியுள்ளது. புதிதாக ஐயாயிரம் பேரை ஆளணிப் படைகளில் சேர்த்துள்ளது. ஆயினும் இத் தொழில்நுட்ப வலிமைவாய்ந்த சாதனங்களையும் ஆளணிகளையும் விடுதலைப் புலிகளிடம் இழந்தோ, பறிகொடுத்தோ நிற்கும் சூழ்நிலைதான் இறுதியில் உருவாகும். இதையே இதுவரை காலப் போராட்ட வரலாறு உறுதி செய்கிறது. எனவேதான் வீணான அழிவுகளையும், இழப்புக்களையும் விடுத்து, சமாதானவழியில் தீர்வு காணவேண்டும் என இலங்கை மக்கள் பகிரங்கமாக வற்புறுத்தி, வலியுறுத்தி வருகின்றனர்.

இருந்தபோதிலும் சிறீலங்காவின் சனாதிபதி சந்திரிகா, தன்னைத் தெரிவுசெய்த மக்களின் குரலுக்கு மதிப்பளிக்காது, இராணுவவாதிகளின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து, போரை வேகப்படுத்தி, பெருமளவிலான பாரிய தாக்குதல் ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகளைப் பலம் இழக்கச் செய்துவிட்டு, பின்னர் சிறீலங்காவின் படைக்கலன் தாங்கும் தமிழ் ஆயுதக் குழுக்களுடன் ஒரு தீர்வினை வெளிப்படுத்தி, இதுவே தமிழர் சிங்களவர் இருபாலாரும் ஏற்கும் தீர்வுத்திட்டம் என உலகுக்குப் பறைசாற்ற முனைகிறார்.

எது எப்படியிருப்பினும், "தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டிய பொறுப்பு, தமிழர் கைகளில்தான் உண்டு"என்பது உறுதியாவதற்குச் சந்திரிகாவின் சமாதான நாடகம் உதவியுள்ளது. மேலும், "தமிழர்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான விடுதலைப் புலிகளுக்கு அங்கீகாரமும், ஆதரவும் அளிப்பதன் மூலமே, இலங்கைத்தீவில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும்" என்பதை அனைத்துலக சமூகமும் தெளிவாக உணர்வதை, சமீபகால அனைத்துலக அணுகுமுறைகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இவ் அனைத்துலக அங்கீகாரத்துக்கு உழைப்பதும், தமிழீழ விடுதலைப் புலிகள் எமது தேசிய விடுதலை இயக்கம் என்பதை உறுதியுடன் வெளிப்படுத்தி நிற்பதும், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்ய வேண்டிய பொறுப்பும் அனைத்துலகிலும் வாழும் தமிழர்களாகிய எங்கள் கைகளில்தான் உள்ளது.

# திருமலை துறைமுகத்தினுள் புலிகள் அதிரடி

## ■ 5 பொலிசார் பலி ■ 6 பேர் காயம்

திருமலைத் துறைமுகப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில், சிறிலங்காப் பொலிசார் ஐவர் கொல்லப்பட்டனர். ஆறு பேர் காயம் அடைந்தனர். ஒருவரைக் காணவில்லை எனச் சிறிலங்காப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. கடந்த மூன்று தினங்களுக்குள் திருமலைத் துறைமுகப் பகுதிக்குள் விடுதலைப் புலிகள் நடத்திய இரண்டாவதுதுணிகரத்தாக்குதல்இதுவாகும்.

இத்தாக்குதல் பற்றித் தகவல் வெளியிட்டுள்ள பாதுகாப்பு அமைச்சு,வீதித்தடைகளை அகற்றிக் கொண்டிருந்த பொலிசார் மீதே புலிகள் இத்தாக்குதலை நடத்தியதாகத் தெரிவித்தது.

19.04.95 புதன்கிழமை அதிகாலை திருமலைத் துறைமுகத்தில் கடற்கரும்புலிகள் இரண்டு அதிவேகப் பீரங்கிக் கப்பல்களை மூழ்கடித்ததைத் தொடர்ந்து, இத்தாக்குதல் இடம் பெற்றுள்ளது. மிகவும் பாதுகாப்பு ஏற்பாடுகள் நிறைந்த பகுதியில் நிகழ்ந்துள்ள இத்தாக்குதல் படை அதிகாரிகள் மட்டத்தில் அதிர்ச்சியையும்,குழப்பத்தையும்ஏற்படுத்தியுள்ளது.

# செயற்திறன் மிக்க பிரிவாய் கடற்புலிகள் உருவாகியுள்ளனர்

## கொழும்பு பி.பி.சி. செய்தியாளர்

"கடற்புலிகள் எனும் விடுதலைப் புலிகளின் கடற்படைப்பிரிவு, கடந்த சில ஆண்டுகளில் அந்த இயக்கத்தில் மிகவும் செயற்திறன் மிக்கதாய் உருவெடுத்துள்ளது. சிறிலங்காப் படையிடமிருந்து கைப்பற்றிய விரைந்து சென்று தாக்கும் பல கடற்படைக் கலன்களைக் கடற்புலிகள் பயன்படுத்துகின்றனர். திருமலையில் இரு போர்க்கப்பல்களைத் தகர்த்தவர்களும் கடற்புலிகளின் அடிநீர்கடற்படைவீரர்களே.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சிறிலங்காக் கடற்படையினர்,யாழ். குடாநாட்டில் தாக்குதல் நடத்தினர். கடற்புலிகளின் தளத்தைத் தாக்கியதாகவே இவர்கள் கூறினர்.எனினும் தனிப்பட்ட முறையில் பேசிய இராணுவ அதிகாரிகள், பீரங்கிப் படகுகளைத் தகர்த்தமைக்குப் பதிலாகவே யாழ்குடாநாட்டில் தாக்குதல்நடத்தப்பட்டதாகக்கூறுகின்றனர்"

இவ்வாறு பி.பி.சி. யின் கொழும்புச் செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னிதெரிவித்தார்.

மீன்பிடிப் படகுகள் கரையில் நிற்கும் நிலையில், கவலைப்படாமல் சிறிலங்காக் கடற்படை எதையும் தாக்கலாம். இது இப்போது நடந்துள்ளது, வடகடலில் இரு படகுகளை சிறிலங்காக் கடற்படை தாக்கியுள்ளது எனவும்அவர்தெரிவித்தார்.

# சிறீலங்காப் படைகளுக்கும் - விடுதலைப்புலிகளுக்கும்...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி..)

## திருகோணமலையில் புலிகளின் தொடர்த் தாக்குதல்கள்

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கும்புறுப்பிட்டி காட்டுப் பகுதியில், சிறீலங்கா இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியுள்ளதாகச் சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 13.05.95 தொடக்கம் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்தினருக்கும் இடையில், மிகஉக்கிரமான சண்டை நடைபெறுவதாய் பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. இதே வேளை இம் மோதல்களின்போது 5 இராணுவத்தினர்கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயமடைந்துள்ளதாகவும் சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. மேலும் போர்நடவடிக்கைகள் தொடர்ந்து மும்மரமாக நடைபெறுவதால், விடுதலைப் புலிகள் தரப்பிலான உத்தியோக பூர்வமான செய்திகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

15.5.95 காலை 6 மணியளவில் திருகோணமலையின் இன்னொரு பகுதியில் ரோந்துவந்த இராணுவ அணியை விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியுள்ளனர். இவ் அதிரடித் தாக்குதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். ரோந்து வந்த அனைத்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டதுடன், அவர்களிடம் இருந்த அனைத்து ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. சிறீலங்கா அரசு இது தொடர்பாக விடுத்த செய்தியில் 13 இராணுவத்தினர் இறந்துள்ளனர் எனத் தெரிவித்தது. தாக்குதல் நடந்த இடத்திற்கு விரைந்த மேலதிக படையினர், போகும்வழியில் பொதுமக்கள்மீது வெறித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இப்பயங்கரவாதத்திற்குப் பல பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இவ்வாறு, கிழக்கில் படையினரின்தோல்விக்குப்பழிவாங்கும் விதத்தில் பொதுமக்கள் வேட்டையாடப்பட்டு வருகின்றனர். இம்மோதலின் போது இடையில்சிக்கி 3 பொதுமக்கள் பலியானதாகவும், பல புலிகள் கொல்லப்பட்டனர் எனவும் சிறீலங்கா அரசு முன்னைய ஆட்சியாளர்களை விஞ்சும் வகையில் பொய்யான செய்திகளைவெளியிட்டுள்ளது.

மேலும், சிங்களமக்களையும், படையினரையும் மனப்பாதிப்புக்குள்ளாக்கும் செய்திகள் பரவியிருக்கும் இவ்வேளையில், புலிகள் பெருமளவில் கொல்லப்பட்டிருப்பதாய் அரசு செய்திகளை வெளியிட்டு பதட்டநிலையைத் தணிக்கமுற்படுகின்றது.

## மட்டுநகரிலும் பல தாக்குதல்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெண்டுகள்சேனை என்னுமிடத்தில் ரோந்து செல்ல முற்பட்ட சிறீலங்கா இராணுவத்தினர் மீது, விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர். 03.05.95 அன்று நடந்த இத்தாக்குதலில் 4 படையினர் தலத்திலேயே கொல்லப்பட்டனர்.காலை9.30மணியளவில்4ஆம் முச்சந்தி இராணுவ முகாமில் இருந்து 100 க்கு மேற்பட்ட படையினர் பெண்டுகள்சேனை நோக்கி முன்னேறினர். இவர்களைப் பெண்டுகள்சேனையில் வைத்துப் புலிகள் தாக்கினர். இத்தாக்குதலில் கொல்லப்பட்ட நால்வரின் சடலங்கள் புலிகளால் ஆயுதங்களுடன் கைப்பற்றப்பட்டன. பலர் காயப்பட்டனர். மீதி அனைவரும் தப்பி ஓடினர். மேலும் காயமடைந்தவர்களில் இருவர் பின்னர் மரணமடைந்ததாகக் கொழும்பில்சிறீலங்காபாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை. 60எம்.எம்.எறிகணைகள்10,ஏ.கே.எம்.ஜி 4, தோட்டாக்கள்120, ஏ.கே.எல்.எம்.ஜி 2 ஆகியஆயுதங்கள்கைப்பற்றப்பட்டன.

இதே நேரத்தில் ஏறாவூர் ஐயம்பதி என்னுமிடத்தில் ரோந்து சென்ற சிறீலங்காக் காவல்துறை மீது, விடுதலைப் புலிகள் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியதில் காவல்துறையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். இன்னுமொருவர்படுகாயமடைந்தார்.

6.5.95 சனிக்கிழமையன்று, சிறீலங்கா இராணுவத்தினர் ஆறு பொது மக்களைச் சுட்டுக் கொன்றுள்ளனர். சுப்பிரமணியம்(18) முறக்கொட்டாஞ்சேனை, நவரத்தினம் நாதன் (25) சாந்தவெளி, மதுசுதனம் தங்கவேல், தியாகராஜா (25) ஆகியோர் அவ்விடத்திலேயே பலியாகினர். மேலும் இருவர் காயமடைந்து பின் மரணமாகினர்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி மட்டக்களப்பு வாகரைப் பகுதியில்,

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்...

**ஒருபுல்லாங்குழல்....**

ஒற்றைத் தென்னையில் சாய்ந்து வெள்ளைத் தங்கச்சிதன் வருகைக்காய் காத்திருப்பதையும் தன் பிணந்தான் அங்கே போகுமென்றும் தான் நிச்சயமாய் நம்புவதாகவும் குழல் பாடியது– கனித்தது–அழுதது–

வெகுநேரமாய் அங்கே இசையின் இனிமையே சொரிந்தபடியிருந்தது. மெல்லிய அமைதி நிலவியது. குழல் தவிர வேறொன்றுமில்லை. இசை– இசை–சபைகலங்கிக்களித்திருந்தது. திடீரென்றுஅமைதிகுலைந்தது.

"என்ன சட்டநாதர் எப்பிடி வாசிக்கிறான்? பிழையில்லைஎன்ன?

ஓமோம்நல்லஇடத்திலைவந்துபாத்தம் இனிப்போவம் கொஞ்சமெண்டாலும் பாத்திட்டம்தானை".

"அதுதானை,போவம்இனியேன்–?

"அப்ப உங்களுக்குப் பிடிச்சுதெண்டு சொல்லுங்கோ"

"பின்னை" எனக்கெங்கை உந்த இசையளிலை அக்கறை உவன் கண்ணன்தான் புல்லாங்குழல் பழகப்போறனெண்டு நாண்டுகொண்டு நிக்கிறான்.சரி பழகுறது தான் பழகுறான் நான் வாத்தியாரிட்டைப் பழகட்டுமன் எண்டு நினைச்சன். குழல் மாஸ்டர் கோவிந்தன் எப்பிடியெண்டு பாத்து அறியவந்தன்".

"உதென்ன பெரிய இசை. உங்கட மகனைப் பழகவிடுங்கோ. பெரிய மேதையா வருவான்.உவங்களிண்டை பாட்டிலையெங்கை ஒரு சினிமாப் பாட்டையும்காணேல்லை".

"மெய்தான் பாருங்கோ என்ரை மகன் பழகீட்டு சினிமாப் பாட்டு வாசிச்சால், இஞ்சை உள்ள சனம் முழுக்க அவனுக்கு ஆவெண்டு காவலிருக்கும்."

"ஓமோம் கெதியாய் நடவுங்கோ போவம்" புல்லாங்குழல் அழுதது. புரிந்து கொள்ளவே மாட்டீர்களா? அறியாமைத்துயில் கலைத்து, மக்களை எழுப்பவென்று புல்லாங்குழல் பூபாளம் பாடியது.

சட்டநாதரும் சங்கரப்பிள்ளையும் எட்டி நடந்துகொண்டிருந்தனர்.

# இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் தமிழக அரசு மனித உரிமைகளை மீறுகிறது

**பி. பி. சி. முகவர்**

இலங்கைத்தமிழ்அகதிகள்விடயத்தில் தமிழக அரசின் செயற்பாடுகள் மனித உரிமைகளைபுறக்கணிக்கிறது

தமிழ் நாட்டில் இன்னமும் சுமார் 54,000 இலங்கைத் தமிழ் அகதிகள் 120 முகாம்களில் தங்கவைக்கப்பட்டு இருக்கின்றனர். அண்மைக்காலத்தில் இரண்டு கப்பல்கள் 14 முறை பயணம் மேற்கொண்டதன் மூலம் சுமார் பத்தாயிரம் பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வாறு சென்னையிலுள்ள பி.பி.சி. முகவர் சாம்ராஜப்பா கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இந்திய நடுவண்அரசு சிறப்பு முகாம்களிற் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 1200 பேரையும் இலங்கைக்கு விரைவிற் திருப்பி அனுப்ப வேண்டுமென மாநில அரசுகோரிக்கைவிடுத்துள்ளது.இந்தச் சிறப்பு முகாம்களில், இருப்போர் பெரும்பாலும் தீவிரவாதிகள் என முத்திரை குத்தப்பட்டவர்கள். இவர்களில் 370பேரை விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறி இலங்கை அரசு ஏற்கமறுப்புத்தெரிவித்துஇருக்கிறது.

நாட்டில் அமைதி திரும்பவேண்டுமெனில் இலங்கை அகதிகள் அனைவருடன், தீவிர வாதிகளும் திருப்பி அனுப்பப்பட வேண்டுமென மாநில முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார். இதுகால வரையில் யு. என். எச். சி. ஆர் மற்றும் அகதிகள் நலவாழ்வு அமைப்பு ஆகியவற்றின் உதவியுடன் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுவந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள காங்கேசன்துறைக்கு அகதிகள் வந்து இறங்குவது சாத்தியமானதெனில் மேலும்மேலும்பலர்திரும்பிவரக்கூடும்.

இவ்வாறு வேறு எந்த நாட்டிலும் இருந்து தமிழ் அகதிகள் தாயகத்திற்கு திரும்பி வந்துவிடவில்லை. தமிழ் நாட்டிலிருந்து இந்த அகதிகள் திரும்ப வருகின்றமைக்குவசதியற்ற சூழ்நிலையும் எவ்விதமான பராமரிப்பு ஒத்துழைப்பும்அற்றதன்மையுமேகாரணமாகும்.

மேலும் தமிழகத்தில் இலங்கைத் தமிழ் அகதிகளின் குழந்தைகளின் கல்விக்கான வாய்ப்பும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. கல்லூரி மேற்படிப்புகளுக்கு முட்டுக்கட்டை வேறு போடப்பட்டிருக்கிறது. பெரும்பாலான முகாம்களிற் சுகாதார வசதிகள் கூட இல்லை. அவசரம் அவசரமாக் கட்டப்பட்ட முகாம்கள் மீண்டும் செப்பனிடப்படாத நிலையிற் தற்போதும் பராமரிக்கப்படுகிறது. இலங்கைத்தமிழ் அகதிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தமிழக அரசிடம் புகார் கூறப்பட்டாலும் அரசியற் பண்பாகவே கருதி அது மத்திய அரசுக்கே திருப்பி அடிக்கப்பட்டு அங்கிருந்து மீண்டும் மாநிலத்திற்கு அனுப்பப்பட்டு அங்கும் இங்கும் உதைபடும் நிலைதான் காணப்படுகிறது. இதே வேளை வைகாசி மாதத்தின் பின்னர் சுதந்திரமாக நடமாடுவதற்கும்பலத்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் விளைவாக அகதிகள் தாமாகவேநாடுதிரும்புவதைவிரும்பும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அகதிகளுக்குப் பொதுவாக அனைத்துலக அரசியல், மனித நேயம், சர்வதேச சமூக பொருளாதார உரிமை இவைகள் அனைத்தும் அடங்கிய மனித உரிமை நெறிமுறைகள்யாவும்தமிழக அரசினால் முழு அளவில் மீறப்பட்டுள்ளது. இவை அனைத்தினதும் ஒரே குறிக்கோள், இலங்கை அகதிகளைக் கூடிய விரைவில் திருப்பி அனுப்பி விட வேண்டும் என்பதே ஆகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழீழமின்றி நம் உரிமைகளை ஒருபோதும் மீட்டெடுக்க முடியாது

**தந்தை செல்வா**

"எமது தலைமுறையிற் கைகூடாவிடினும் நாம் இப்போரை நடத்தி எமக்குப்பின் வரும் சந்ததியினர் கையிற் கொடுப்பது எமது கடன். எமக்குப் பின்னே அரும் பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில் அவர்களுக்கு அணிவகுப்பவர்களாகவாவது நாம் இருப்போமாக".

தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாட்டு தலைமையுரையில் தந்தை செல்வாவின்உரைஇது.

தமிழ் மக்களின் உரிமைகளை எந்த நிலையிலும் விட்டுக்கொடுக்காது வாதாடிய இந்தத் தமிழினத் தந்தையின் 97வது பிறந்த தின நினைவாக வெளியானகட்டுரை.

சுயலாபங்களுக்குத் தம்மைத்தாமே பலியிட்டுக்கொண்ட தமிழ் அரசியல் வாதிகளின் மத்தியிற் தமிழனுக்கென்று தன் கொள்கையில் விடாப்பிடியாக இருந்தவர்தலைவர்தந்தைசெல்வா.

தனது சிறு வயது முதலே தமிழ்ப் பாரம்பரியத்தில் மிக்க ஆர்வமுடையவராகத் தந்தை செல்வா வளர்ந்தார். சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்ற இயற்பெயரைக்கொண்ட இவரை எஸ். ஜே. வி. செல்வநாயகம் என்றும், தந்தை செல்வா என்றுமே மக்கள் அறிந்திருந்தனர். சட்டத்துறையிற் தனது கல்வியை அவர் தொடர்ந்தாலும் அரசியல் வாழ்க்கையில் அவர் வெகு தீவிரமாக ஈடுபட்டார். ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையின் கீழ்த் தமிழர் உரிமைப் போராட்டத்தை இவர் முன்னெடுக்க விரும்பியிருந்தாலும்ஜீ.ஜீ.யின்அரசியல் வழிமுறை தவறானதென அவர் கருதியதால் தனியான அரசியல் இயக்கத்தைஅவர்ஆரம்பிக்கவேண்டி வந்தது.

சிங்கள அரசாங்கங்களுடன் அவர் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்ட போதெல்லாம் அவரதுஅரசியல் இலக்குத் தமிழீழம் என்ற தனியரசை நோக்கியதாகவே இருந்தது.

1976ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் ஒன்பதாம் திகதி சிறீலங்கா பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய இறுதியுரைகூட அதனைத் தெளிவாக உணர்த்தியது.

அவ்வுரையில், தமிழ்பேசும் மக்களின் இழந்த உரிமைகளை மீட்பதற்காக நாங்கள் ஒரு காலத்தில் கூட்டாட்சி இயக்கத்தை அரம்பித்தோம் ஆனால் கூட்டரசு மூலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவது சாத்தியப்படாது என்பதைக் கடந்த கால அனுபவங்களின் மூலம் இப்போது நாம் அறிந்து கொண்டோம். இந்த அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் தனியே பிரிந்து வாழ வேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டோம். இதைநாம் செய்யாவிட்டால்தமிழினம்தமது உரிமைகளை ஒருபோதும் மீட்டுக் கொள்ள முடியாது. எங்கள் முன்னோர்கள் புத்திசாலிகளாக இருந்தனர் அவர்கள் தங்களுக்கெனத் தனியாட்சி வைத்திருந்தனர். இலங்கையின் வரலாற்றில்எங்களுக்கென ஓர் இடம் இருக்கின்றது. எங்கள் இயக்கம் நாட்டைப் பிரிக்கும்படி கோரவில்லை இழந்த உரிமையான அரசை மீள அமைக்கவேண்டும் என்பதே எங்கள் நிலையாகும்.

தனித்தமிழ் ஈழத்தை நிறுவும் இலட்சியத்தை நோக்கி எங்கள் இயக்கம் முன்னேறுகின்றது.தனிஈழம்நிறுவுவது சுலபமான காரியமல்ல என்பதும், மிகவும் கடினமானதென்பதும் எங்களுக்குத் தெரியும். எமக்குள்ள நிலை இரண்டு ஒன்றில் சிங்களவர்களின் அதிகாரத்திலிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும் அல்லது அழிந்து போகவேண்டும். எனவே நாங்கள் போராடித்தனித் தமிழ் ஈழத்தை நிறுவியே தீருவோம்.

ஈழத்தமிழினம் தனது தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளவும் – சுதந்திரமான தாயகத்தில் எவருக்கும் அடிபணியாத வகையில்வாழவும்தந்தை செல்வா கனவு கண்டார். இன்று அந்தக் கனவு நனவாகி வரும் சூழ்நிலையில், அந்தத் தமிழினத்தின் தந்தையை நினைவு கூறுவது சாலப்பொருத்தமானது.

# வருங்கால சந்ததியினர் தேசப்பற்றுள்ளவராகத் திகழவேண்டும்

**□ தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் உரை**

"வருங்காலச் சந்ததி அறிவு, ஆற்றல், வீரம் உள்ள சந்ததியாக எமது சமூதாயத்தில் மிளிர்வதுடன், தேசப்பற்றுள்ளவர்களாகவும் வளர வேண்டும்.எமதுமண்ணில்வாழுகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த மண்ணை மீட்கும் பொறுப்பு உண்டு. எத்தனையோ இடங்களில் இராணுவ நடவடிக்கைகளினாற் கல்வியை, தொழிலை, வீடுகளை இழந்து அகதி என்ற பட்டம் சூட்டப்பட்டு வாழ்கின்ற மக்களைக் காண்கின்றீர்கள். இத்தனையையும் இழந்தும் மக்கள் தளராத துணிவோடு நின்றார்கள். இந்த வகையில் கல்வியை இழந்து நிற்கின்ற மாணவர்களை மிளிரப்படுத்தும் வகையில்தான் நாம் இப்படிப்பட்ட நிகழ்வைநடாத்துகின்றோம்".

இவ்வாறு, இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மின்னொளியில் நடாத்தப்பட்ட, கரபந்தாட்டப்போட்டிப் பரிசளிப்பு விழாவிற் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தென்மராட்சி அரசியற் பொறுப்பாளர் வெற்றிச்செல்வன் தெரிவித்தார்.

வளர்மதி சனசமூக நிலையத்தினரால் இந் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது. சனசமூகநிலையத்தின் உறுப்பினர் திரு. எஸ். கிருஷ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மங்கள விளக்கினைத் தமிழீழ இசைக்குழுப்பொறுப்பாளர் ஈஸ்வரநாதன் ஏற்றிவைத்தார்.கிராமஅலுவலர்திரு.க. வாமதேவன், சமூக மேம்பாட்டுத்துறையைச் சேர்ந்த திரு. கலைவாணன் ஆகியோரும் உரையாற்றினார்கள். வெற்றியீட்டிய கழகங்களுக்குச் சமூகமேம்பாட்டுப் பொறுப்பாளர் திரு.கி. பாப்பா பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். பழைய முறையிலான கரபந்தாட்ட நிகழ்வில், முதலாம் இடத்தை வல்வை தேசேகரா விளையாட்டுக் கழகமும், இரண்டாம் இடத்தினை நாவற்குழி லவனீதா விளையாட்டுக்கழகமும்பெற்றன.புதிய முறையிலான கரபந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தை நாயன்மார்கட்டு விளையாட்டு க்கழகமும், இரண்டாம் இடத்தினை ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்தினை மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகமும்பெற்றன.

இதேவேளை, கரபந்தாட்ட விளையாட்டிற் சிறந்த விளையாட்டு வீரர் என்ற முறையில் பாரதி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த நவநீதன் என்பவருக்குப் பரிசு வழங்கப்பட்டது. இறுதியில் தமிழீழ இசைக்குழுவினரும் தமிழீழப் பாடகர்களும் இணைந்து நடாத்திய இசைநிகழ்வு இடம்பெற்றது. அத்தோடு விடுதலைப்புலிகளின் கலைபண்பாட்டுக்கழகத்தின் இனி ஒரு விதி செய்வோம் என்னும் நாடகமும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் முன்னாள்த் தென்மராட்சிக் கோட்டச் சிறப்புத்தளபதி லெப். கேணல் குணா அவர்களின் நினைவாகவும், வீரவேங்கை வினோத் நினைவாகவும், மரணித்த பொதுமக்கள் நினைவாகவும் கேடயங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாக். அணு உலக அமைப்பு இந்திய அரசு கடும் சீற்றம்

கதிரியக்கப் பொருளை உற்பத்தி செய்யக் கூடிய அணுஉலை ஒன்றைத் தமது நாடு அமைத்து வருகிறது என்று பாகிஸ்தான் பிரதம மந்திரி கூறியிருப்பது, அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தினால் இரகசியமாக அணுஆயுத தொழில் நுட்பத்தைப் பிறருக்கு வழங்குவதைத் தடுக்க முடியவில்லை என்பதை உறுதி செய்திருக்கிறது என்று இந்தியா கூறியிருக்கிறது.

இந்த அணுஉலை பாகிஸ்தானின் இராணுவ தாக்குதல் ஆற்றலை வலுப்படுத்தக்கூடும் என இந்திய வெளியுறவு அமைச்சர் கூறியிருக்கின்றார். பாகிஸ்தானில் குஜாத் எனுமிடத்தில் இத்தகைய அணு உலை ஒன்று உருவாக்கப்படுவதாகப் பெனாசீர் பூட்டோ கூறியதாக வெளியான செய்தி குறித்து கேட்கப்பட்ட போதே, வெளியுறவு அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# நிலையான நினைவாகிச் சென்றோன் நினைவோடு தமிழீழம் வெல்வோம்

## "தமிழீழம்"

இது தனித்த ஒன்றுதான், பிரிந்த இரண்டின்சேர்க்கையல்ல.

ஒரே இனம், ஒரே மொழி, ஒரே நிலம், ஒரே வானம், ஒரே கடல், ஒரு தமிழீழம்: தமிழீழம் தனியொன்றே அல்லாமல், இரு வேறுதுண்டுகளின்கூட்டல்ல.

வல்லிபுரக்கோயில் மணற்காட்டில்– அலைகளாய் விழுந்து உவகையோடு எழுகின்ற இந்துமா ஆழி, "எங்கள் கடல்!" என்றால்–'குமணக்' கரையின் மணலினில் உருண்டு, கண்களை எரித்துச் சுகம் விசாரிப்பதும் "எங்களோடது" தான், 'கருவேலன் காட்டு' ஓரத்தில் மோதி பாறையோடு, சுறாவும் திருக்கையும் தருவதும், 'நம்மடது' தான்–தமிழீழம்ஒன்றுதான்! வானேந்திய சிங்கம்' தானேந்திடும் வாளால் துண்டாக்கிப் போட்ட பின்பு, கூட்டாகிச் 'சங்கம்' அமைக்க–இது சோவியத் சாம்ராட்சியமும் அல்ல, துகள்களாகிப் பிளவுபடுத்தி சீரழித்துச் சிதைத்துவிட–இது 'பொசுனியா'வும் அல்ல.

கரந்தனாற்றில்' கால் நனைத்துக் கொண்டு தமிழீழம் என்றால், வரண்டுபோய்க் கிடக்கின்ற வழுக்கியாறும்' தமிழீழம்தான். மன்னாரை ஈரமாக்கும் 'பறங்கியாறும்' அதுதான்.'மணலாறும்'எங்களதேதான்!

இலங்கையில்–

ஆசியாக்கண்டத்தின்தெற்கே,இந்துமா சமுத்திரத்தின் தாலாட்டில் மிதக்கும் அந்தமாங்காய்வடிவச்சிறுதீவில்–

அதன் வடமேற்கு,வடக்கு,வடகிழக்கு, தென்கிழக்கு பிரதேசங்களில்– தமிழர்கள் காலாதிகாலமாக வேரோடி வாழ்ந்த 20,000 சதுர கிலோ மீற்றர் கடற்பரப்பு:இவற்றின் மேலாக கூரையாய் விரியும் தமிழர் சரித்திரத்தின் மூச்சுக்கலந்திருக்கும்வான் பரப்பு:இந்த மூன்றுக்கும் ஒரே பெயர், அதுதான் தமிழீழம்.

வடக்கையும்– கிழக்கையும் எ'இணையக்கூடாது!இணைக்கக்கூடாது!' என்று கொழும்பிலிருந்து கத்திக் கொண்டிருக்கிறார்கள். அது எமக்குப் புரியவும் இல்லை: புரிந்து கொள்ள நாம் விரும்பவுமில்லை. விரும்பவேண்டிய அவசியமும் இல்லை. ஏனெனில், இணைப்பது அல்ல நமது பிரச்சினை. தமிழீழத்தை (வடக்கையும்–கிழக்கையும்) "பிரிக்கக் கூடாது" என்பதுவே நமது பிரச்சினை, தேசம் பிரியக் கூடாது,யாரும்பிளக்கவேகூடாது என்பதற்காகவே நாங்கள் செத்துக் கொண்டிருக்கிறோம்: விடவே மாட்டோம்.

ஓரங்களில் அரிக்கப்படாத–நடுவினில் பிரிக்கப்படாத–நிறைவு குறைக்கப்படாத, உருக்குலைவற்ற தமிழீழத்தை மீட்டெடுத்து, தமிழனின் சுதந்திர தனியரசைப் பிரகடனப்படுத்தும் வரை, விடவேமாட்டோம்.

கொக்குவில் புயலாகும், கொக்குத் தொடுவாய் களமாடும், கொம்மாந்துறை அனலாகும், தனியரசு எமக்காகும் வரை தமிழீழம் போராடும். பலாலி வீதியிலிருந்து புனானை வீதிமீறாக விடுதலைப் போர் நீளும்!! விடவே மாட்டோம்.

தமிழீழம் ஒன்றேதான் ஒரு நாடு, ஒருகொடி,ஒருதலைவன்.

ஒரு ஆவணி மாதத்து அதிகாலை. கச்சான் காற்றின் மெல்லிய வருடல். வைகறைப் பொழுதில் சூரியக் குளியல், எழுவான் கரையின் உளமெல்லாம் உற்சாகம். சாளைவலைத் தோணிகளில் கரை திரும்பிக் கொண்டிருந்தது தேசத்தின் மீனவ சமூகம். "கெதியாய் போயிடவேணும் குமார்... கச்சான் வலுத்துதெண்டா மறுகா தண்டு வலிக்கிறது கஸ்டமா போயிடும்..." இவ்விரண்டு ஆட்கள், சிலதுண்டு வலைகளோடு பிடித்தெடுத்த மீன்கள், கரைநோக்கியவள்ளங்கள்.

பதினைந்து வயதேயான இளம் பராயம், தேவைக்கும் அதிகமாகத் துளியும் பெருக்காத தேகம், தோள்கள் திரண்டு, நெஞ்சு அகன்று, இடுப்பு ஒடுங்கி, கால்கள் வலுத்து – உடலை வருத்தி, வருத்தி உழைத்ததால் இறுக்கமாகிய அழகுமேனி, சுருள் சுருளாகப் படரும் தலைமுடிகள், முழு நிலவாக ஒளிரும் முகம், சதா புன்னகைக்கும் கண்களின் ஆழத்தில் உற்றுப் பார்த்தால் மட்டுமே தென்படும், அந்த சோகத்தின் மெல்லிய கீறல். நெற்றியில் சிந்தனையின் சுருக்க வரிகள், துடுப்பை வலித்து குமார் நிமிர்ந்து நிலத்தைப் பார்த்தான். மேற்புறத் தொடுவானில் 'குடும்பி மலை'யும் 'தொப்பிக்கல்'லும் பனி மூட்டங்களினூடு மெல்லிய நீல முகடுகளாய்...கண்குளிர்ந்தகாட்சி.

தோணி கரையொதுங்கியது. கடலுக்குள் இறங்கியவன் குனிந்து வள்ளத்திலும் தண்ணீரிலும் தொட்டு இரண்டு கைகளையும் நெஞ்சில் வைத்து கண்களை மூடினான். வலைகளை இழுத்து, பட்டிருந்த மீன்களை எடுத்து, கூடையில் நிறுத்து, விலைபேசி...கச்சான் பலமாக ஊதத் தொடங்கிற்று.இரவு தொழிலுக்குப்போய் வந்தவர்கள் கண்ணாப் பற்றை யோரங்களில் ஓய்வாக அரட்டையடிக்க, விற்போரும், வாங்குவோரும் நிறைய, களைகட்டிக் கலகலத்தது கடற்கரை. குமாருக்கு அவசரம், நேர நெருக்கடி, மிதிவண்டியை உருட்டிக்கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். "குமார் சாப்பிடாமல் போறான்... அவனைச் சாப்பிடச்சொல்லுங்கோ..."மீன் வாடிக்குப் பக்கத்திலிருந்த குடிலுக்குள்ளிருந்து ஒரு உடன் பிறவாச் சகோதரியின் பாசக் குரல், "குமார்சாப்பிட்டுப்போவன்தம்பி..."

"தங்கச்சிக்குப் பள்ளி துவங்கிற நேரமாயிற்றுதண்ணை... ஏத்திப் போய் விடணும்... நான் பிறகு வாறன ண்ணை..." குடிலுக்குள் எட்டிப் பார்த்து–"அக்கா வாரனுங்க... சைக்கிளைஉருட்டினான்.

"ம்..." குடிலுக்குள்ளிருந்து ஒரு நீண்ட பெருமூச்சுகச்சானோடகலந்தது.

கல்குடா ஒரு பூர்வீகத் தமிழர் நிலம், கல்மடு அங்கொரு சிற்றூர், அண்ணார்ந்து பார்த்தாலும் வறுமைக்கோடு தெரியாத ஆழத்தில் வாழ்ந்த மக்கள், வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கும் சுந்தரபுரியாக மாறிவிட்ட தங்களூரில், மண்ணின் பண்பாடுகளையும், இனத்தின் உன்னதங்களையும் கறைபடியாமல் காத்தார்கள் அவர்கள், அதிலொருகுடும்பம்அவனுடையது.

சிங்களத்தைச் சரளமாகப் பேசியவன், உல்லாசப் பிரயாணிகளுக்கு வழி காட்டக்கூடியளவிற்கு ஆங்கிலமும் பேசினான்.பகலில் அவனுக்கு அதுதான் வேலை. பக்குவமாய்ப் பாதுகாக்கும் இரண்டொரு நல்ல உடைகள் அவனுக்குத் துணை. சின்னவன், நல்லவன், பண்பானவன், ஏழை. விடுதிச் சொந்தக்காரர் நாளாந்தம் அவனுக்கென ஊர்பார்க்கும் வெள்ளைக்காரர்களை வைத்திருப்பார். கூட்டிக்கொண்டு அவன் பகலெல்லாம் திரிவான். மானிடப் பண்புகளும்,சீரிய ஒழுக்கங்களும்மலிவு விலைக்கு ஏலம் போன உல்லாச விடுதிகளில், உடலாலும் உள்ளத்தாலும் சேதப்படாமல்வாழ்ந்தவன்.

மாலையானதும் மீண்டும் ஓட்டம், மிதிவண்டியில்களைக்கக்களைக்கஓடி பள்ளிக்கூட வாசலில் காவலிருப்பான். பள்ளிவிட்டதும்–அக்காவையும் தங்கையையும்திரும்பவீட்டிற்குஏற்றிப் போவான். வீட்டு வேலைகளில் சின்ன ஒத்தாசைகள் செய்துவிட்டு, இரவானதும் கடற்தொழிலுக்குப் போகப் புறப்படுவான்.

இருள் கவிந்த அந்தி நேரம். மிதிவண்டியை உருட்டிக் கொண்டு அவன் படலைக்கு வர பின்னாலே ஓடிவந்த தங்கச்சி கைகளில் பிடித்தாள். திரும்பினான். அக்கா அவனையே பார்த்தபடி வாசல் கதவோடு சாய்ந்திருந்தாள். தங்கை ஏக்கமாய்ப் பார்த்தாள்.

"இண்டைக்கு மட்டும் தொழிலுக்குப் போக வேணாமண்ணா...எங்க கூடவே இருங்கண்ணா..." அவள் கேட்டது தங்களது மகிழ்வுக்காக அல்ல, அவனது ஓய்வுக்காக மட்டுமேதான். இரக்கமாய்க் கேட்டவளைப் பார்க்க பாவமாய் இருந்தது. தொண்டைக்குள் எதுவோ அடைக்க, குரலுக்குப் பதில் கண்ணீர்தான் வந்தது. தங்கையைக் கட்டி அணைத்துக் கொண்டான். கட்டுப்படுத்த முடியாத கண்ணீர் அவனுக்கும் வந்தது, அவளுக்கும் வந்தது. துன்பச் சிலுவைகள் சுமந்தனர் பிஞ்சுகள். துயரமே வாழ்வான வாழ்வு. தங்கையின் தலையில் தடவிக் கொண்டே அவன் சொன்னான், "இண்டைக்கு நான் போகலேண்ணா... நாளைக்குநாம்சாப்பிடமுடியாதம்மா!" மிதிவண்டி அவனோடு உருளத் தொடங்கியது.

எதிர்பாராமல் ஒரு நாள் கண்களை மூடிக்கொண்டு துடிக்கவிட்டுச் சென்றுவிட்டார் அன்பு அப்பா! அடுத்து வந்த நாளொன்றில், தனியாகத் தவிக்கவிட்டுக் காணாமல் போனாள் அம்மா! துயரக்கடலில் தூக்கி வீசப்பட்டனர் பச்சைக் குழந்தைகள். துடுப்பற்ற படகாய் மிதந்தவர்களுக்கு துணையாகி வாழ்ந்தான் குமார், அவன்தான் எங்கள் லக்ஸ்மணன். தோழர்களில் அன்புக்குரிய பொம்மரண்ணன், சகோதரிகளைத் தனது நெஞ்சுக் கூட்டுக்குள் குடியிருத்தி வைத்திருந்த அன்புச் சகோதரன், சகோதரர்களில் ஒரு அசாதாரணமான பாசத்தைக் கொண்டிருந்தவன் அவன், தங்கச்சியில்தான் தனது உயிரையே வைத்திருந்தான். எல்லையற்ற அன்பால் பாதுகாத்து, எத்தனையோ கனவுகளோடு அவளை வளர்த்தான்.

அன்னையாகவும், தந்தையாகவும், அண்ணனாகவும், தம்பியாகவும் அவர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றஆதங்கத்தோடுஅவன் பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல, அனுபவித்த கஸ்டங்கள் சொற்பமல்ல, அவர்களுக்காக, சுமைகளில் அழுந்தியவனைப் பார்த்து, அவன் அறியாமல் அவர்கள் அழுவார்கள், கடுங்குளிருக்குள் அலைகளோடு மாரடித்துவிட்டு வருபவன், பகல் வெயிலுக்குள் வெளிநாட்டுக் காரர்களோடு அலைந்தான், பாவம் ஓய்வேஇல்லை...ஓய்வேஇல்லை....!

ஆனையிறவுச் சமரில் உலகம் கவனம் செலுத்திக்கொண்டிருந்தது. எங்கும், எதிலும் அதே பேச்சு, அதே சிந்தனை, விடுதலைப் புலி வீரர்களை ஈன்ற தாய்மார்கள் மட்டுமல்ல, திருகோணமலையிலும், மட்டக்களப்பிலும் இருந்த தோழர்களும் தவித்துக் கொண்டு தானிருந்தார்கள். பெரும் சமர்க்களம் ஒன்றில், இயக்கத்தின் ஒரு பெரிய தொகுதி வீரர்கள் போரிட்டுக் கொண்டிருக்கும் போது, அந்தக் களத்திற்கு அப்பால் நிற்கும் ஒரு போராளியாலும் கூட அமைதியாக இருக்கவே முடியாது. இந்த மனப் போராட்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், நீங்கள் விடுதலைப் புலிகளின் போராளியாக இருக்கவேண்டும். சந்திவெளித் திடலிலிருந்த 'கிலோ வண்' முகாமின் போராளிகளும் இதே தவிப்போடுதான் தகவல் தொடர்புச் சாதனத்தைச் சூழ குமுறுவார்கள். ஒவ்வொரு காலையிலும் வரும் களநிலைச் செய்திகள், வீழ்ந்தவர்களின் நீண்ட பட்டியலைத் தருகின்றபோது–ஆன்மா துடிக்கும். அந்த ஒரு காலை, அவர்கள் காத்திருந்த வேளை –தரையிறங்கி நகர்ந்த படையினரை எதிர்கொண்ட சண்டையில் களப்பலியானோர் பெயர்கள்...வரிசையாய்...ஒன்றன் பின் ஒன்றாய்... அதிலொன்றாய்...!

"லெப்ரினன்ற் சுனேத்ரா!–வேலாயுதபிள்ளை ஜெயந்தி, கல்மடு, கற்...! மட்டக்...!..."அவன் அதிர்ந்ததை...முகம் இறுகியதை... நிலை குலைந்ததை... அருகிலிருந்தவர்கள் கவனிக்கவேயில்லை. "அம்மான்!... என்ர தங்கச்சி..." என்று விம்மியபோது, பக்கத்திலிருந்த தோழனின் கைகளில் விழுந்து குலுங்கிக் குலுங்கி அழுதபோது, நண்பர்கள் விக்கித்துப் போனார்கள்.

கெட்டிக்காரி, கல்வியில் சிறந்து விளங்கியவள், விவேகமானவள்– 'ஸ்டெதஸ்கோப்' வளைந்து தொங்கும் தோள்களோடு அவள் ஒய்யாரமாக நடந்து வருவதைக் கண்நிறையப் பார்க்கக் காத்திருந்தவன், காலம் அவளது தோள்களில் துப்பாக்கியைத் தொங்கவிட்டுக் களத்திற்கு அனுப்பிய போதும்வருத்தப்படாதவன்–

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...



லெப். கேணல் லக்ஸ்மணன்
வேலாயுதபிள்ளை ஜெயக்குமார்
கல்மடு. கல்குடா. மட்டக்களப்பு
23.05.1968 - 28.11.1994

**அற்புதமான போராளி, அசாதாரணமான வீரன், கிடைத்தற்கரிய நண்பன், மாண்பான மனிதன். வாழ்க்கையை அவன் கற்றுத் தரவில்லை, வாழ்ந்தவனைப் பார்த்து நாங்கள் கற்றுக் கொண்டோம்.**

# சலுகைகளைக் காட்டி..

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

"விமானஎதிர்ப்புப்பிரிவு" முற்றுப்புள்ளிவைத்தது. இப்பிரிவானது, குறிப்பிட்ட சில மணித்தியாலங்களுக்குள்ளேயே தனது இரு பெரு வெற்றிகரமான தாக்குதல்களைநடாத்திப்பலகோடி பெறுமதியான விமானங்களையும் பல ஆக்கிரமிப்பாளர்களையும் அழித்துள்ளது. இந்த இரு இராட்சத விமானங்களும் எம்மண்ணில் பீப்பாய்க் குண்டுகளைவீசிப் பல கோடி சொத்துக்களையும், பல்லாயிரக் கணக்கான எம்மக்களின் உயிர்களை யும் பறித்ததை நாம் நேரிலேயே பார்த்தோம். பல்லாயிரக்கணக்கான மக்களை ஊனமுற்றவர்களாக்கியதை யும் நாம் அறிவோம். ஆனால் இன்று எமது மண்ணிலேயே இந்தவிமானங்கள்சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளன.

வரலாற்றில், எப்படியெப்படியெல்லாம் இனவாதத்தைக் கண்டோமோ, அதே மாதிரிச் சற்று மாறுபட்ட வடிவமுள்ள தொரு ஆபத்தான இனவாதத்தை இன்று காண்கிறோம். சந்திரிகா, உலகுக்கும் சிங்கள மக்களுக்கும் புத்திசாலித்தனமான தலைவியாகக் காட்டிக்கொள்ள முயல்கிறார். வெளிப்படையாகக் குருட்டுத்தனமான இனவாதப் பேச்சுப் பேசாமல், செயலில் எந்தளவிற்குத் தமிழ்மக்கள் மீது இனவாதத்தைத் தொடுக்க முடியுமோ அந்தளவிற்குத் தனது திறமையைக் காட்ட முயல்கிறார்.

இதுஒன்றைஎமக்குத்தெளிவாகக்காட்டுகின்றது. அதாவது உண்மைக்காகவும், நேர்மைக்காகவும், போராடுகின்ற எமது இனத்திற்கு எந்தச் சக்தியை எதிர்த்து நின்றாலும், அதை அடிபணியவைக்கும் ஆற்றல் எப்போதும் இருக்கும் என்பதையே, இந்த வெற்றிகரமான தாக்குதல் காட்டி நிற்கிறது. எமது தேசியத்தலைவர் அவர்களினால் எமது உரிமைப்போர் வடிவம் மாற்றப்பட்டு, புதியதோர் முறையில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தமிழினத்தை இனி எவராலும் ஏமாற்றமுடியாது என்ற நிலை தோன்றியுள்ளது. கடந்த காலத்தில் சிங்கள அரசாங்கம் சமாதானம் என்று வந்தபோதெல்லாம் தலை வர் எமது நேசக்கரத்தை நீட்டி வந்துள்ளார். இதுவரை ஓர் அரசியல் மாற்றம் என்றுசந்திரிகாஅரசுஆட்சிக்குவந்தபோதுநாமும் நம்பினோம்.ஆனால்சந்திரிகா அரசுபதவியேற்றபின், அனைத்துநம்பிக்கைகளும்அவர்நடத்தையினாற் தகர்த்தப்பட்டுவிட்டன.

வரலாற்றில், எப்படியெப்படியெல்லாம் இன வாதத்தைக்கண்டோமோ, அதே மாதிரிச் சற்று மாறுபட்ட வடிவமுள்ளதொரு ஆபத்தான இனவாதத்தை இன்று காண்கின்றோம். சந்திரிகா, உலகுக்கும் சிங்கள மக்களுக்கும் புத்திசாலித்தனமான தலைவியாகக் காட்டிக்கொள்ள முயல்கிறார். வெளிப்படையாகக் குருட்டுத்தனமான இனவாதப் பேச்சுப் பேசாமல், செயலில் எந்தளவுக்குத் தமிழ்மக்கள் மீது இனவாதத்தைத் தொடுக்க முடியுமோ அந்தளவுக்குத் தனது திறமையைக் காட்ட முயல்கிறார். தற்காலிகமாக இது சற்று எடுபடலாம். ஆனால் நீண்டகாலத்தில் சந்திரிகா அரசு ஒரு ஆபத்தான நிலைக்குத் தள்ளப்படும் என்பதே உண்மை. இன்று தமிழ் இனத்தின் உறுதியான, பலமான தேசியத்தலைமையிலான போராட்டச்சக்தியை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்துவது அல்லது சிறிது சிறிதாக நசுக்கி அழித்து விடுவதுதான் சந்திரிகா அரசின் திட்டம்.சந்திரிகாஒன்றைச்சரியாகப்புரிந்துகொள்ள வேண்டும். அதாவது பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாடும், சமாதானத்தீர்வு என்ற நிலைப்பாடும் விடுதலைப்புலிகள் பலவீனமான நிலைமையில் எடுத்த முடிவுகள் அல்ல. அவ்வாறு கருதியமையினாலேயே நிலைமை மிகவும் துர்ப்பாக்கியமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. பேச்சுவார்த்தைகள் அனைத்துமே தமிழ் மக்களின் உரிமைகள் என்ற நிலையிலும், பலத்தின் அடிப்படையிலும், சமநிலையிலும் நடைபெறவேண்டுமே தவிர, தமிழ் மக்கள் பலவீனமானவர்கள், சிறிலங்கா அரசிற்கு அடிபணியவேண்டும் என்ற நிலைப்பாட்டோடு நடைபெறுவது மிகவும் முட்டாள்த் தனமானது. ஆகவே போராடி எமது உரிமைகளை மீட்டெடுக்கவேண்டும் என்ற நிலைக்கு மீண்டும் வந்துள்ளோம்.

இரண்டாங்கட்டப்பேச்சுவார்த்தையில்அரசதரப்புப் பிரதிநிதிகள், மோததற்றவிர்ப்பு நிலையைக் கொண்டுவருவதற்கு மிகவும் அக்கறை காட்டினார்கள். நாம் அப்போர் நிறுத்தத்தைக் கொண்டுவரும்போது, அவர்களோ புதியதொரு சொற்பதத்தோடு புதியதொரு நடவடிக்கையாகத் "தாக்குதல் நடவடிக்கை நிறுத்தம்" என்ற ஒப்பந்தத்தைக் கைச்சாத்திடுவோம் எனக் கூறினார்கள். அது தேவையற்றதென்றும் ஒரு முழுமையான யுத்தநிறுத்தத்தைக் கொண்டுவருவோம் எனவும் நாம் கூறினோம். இதுதான், பேச்சுவார்த்தையை எதிர்காலத்தில் முன்னேற்றகரமானதாகக் கொண்டு செல்ல ஒரு வாய்ப்பாக அமையும் என்றுங் கூறினோம்.அவர்கள் இதற்கு இணங்கவில்லை. ஒரு மோதற்றவிர்ப்பு நடவடிக்கையை இரு வாரகாலத்திற்குக் கொண்டுவருவோம் என்றும், அது திறம்படச் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது அதை நிரந்தர யுத்தநிறுத்தமாகக் கொண்டுவருவது பற்றித்தீர்மானிக்கலாம்என்றும்கூறினார்கள்.நாமும் அரசின் இந்த வேண்டுகோளுக்கிணங்கினோம். இது நடைமுறையில் இருந்தபோதே, அரசாங்கம் பல முறைகளில் இதை மீறியது. நிபந்தனைகள் விதித்தது. இவ்வாறான நிபந்தனைகள் பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கு உதவாது என்று சுட்டிக்காட்டி, இந்த அத்துமீறல்களுக்குச் சரியான விளக்கத்தைத் தருமாறு கேட்டிருந்தோம். அவர்கள் அதைத் தட்டிக்கழித்தார்கள். நாங்கள் பொறுமையாகவே இருந்தோம். இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்த மிகப்பெறுமதியான ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதன்பின்பும் எமது ஆதரவாளர்கள் அரசின் கைக்கூலிகளாற் கொல்லப்பட்டனர்.

சந்திரிகாவின் ஒருதலைப்பட்சமான பிரச்சாரங்கள் இன்று உலகநாடுகளில் ஒலிக்கின்றன. இது எம்மைப் பொறுத்தவரையில் தற்காலிகமானதே. இந்த நாடுகள் ஒருதலைப்பட்சமான பிரச்சாரங்களை மட்டும் நம்பிக் கொண்டு விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டையும், செயற்பாடுகளையும் கண்டிக்கமுற்படுவது தற்காலிக-மானது. ஆனால் உண்மை நிலை என்றோ ஒருநாள் வெளிவரத்தான் போகின்றன.

இவ்வாறு, நூற்றுக்கணக்கான யுத்த மீறல்கள் தொடர்ந்தும் நடைபெற்றன. இவை அனைத்தையும் சகித்துக்கொண்டு சமாதானத்துக்காக நல்லதொரு தீர்வு எமது மக்களின் உரிமைகளோடு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் விட்டுக்கொடுப்புகளும் செய்தோம். ஆனால் சந்திரிகா அரசு எமது மக்களின் பிரச்சனைகளில் கவனம் செலுத்தாது, அவர்களுக்கு உரிமை வழங்குகின்றேன்– யுத்தத்தால் அழிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைக்கின்றேன்– அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளுகின்றேன் என்று புதியதொரு பிரச்சாரத்தை மட்டுமே இந்தப்பேச்சுவார்த்தையினூடாக மேற்கொண்டார். இந்த நிலைமை எமது தேசியத்தலைவரினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில், "நீங்கள் நேர்மையான முறையில் எங்கள் மக்கள் பிரச்சனைகளை அணுக முற்படாவிடில், அன்றாடப்பிரச்சனைகள் முழுமையாகத் தீர்க்கப்படாவிடில், உங்கள் வாக்குறுதிகளையும், அறிவிப்புக்களையும் தமிழ் மக்களுக்கு வழங்கிய சலுகைகளாகக் காட்டி நிற்பதை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே நேர்மையான முறையில் எமது மக்களின் வாழ்க்கைப் பிரச்சனைகளைத் தீர்த்துவைத்துப் பேசுவதற்கு நீங்கள் முன் வரவேண்டும்," எனக் குறிப்பிட்டு அதற்குரிய கால அவகாசத்தையும் கொடுத்திருந்தார். ஆனால் அவ்வாறு வழங்கப்பட்ட அவகாசத்தினை அரசு நடைமுறைப்படுத்தவில்லை. நான்காம் கட்டப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட அரசப் பிரதிநிதிகள், சந்திரிகா அரசு மக்களாற் தெரிவுசெய்யப்பட்டது: மக்களால்த் தெரிவு செய்யப்பட்ட சனாதிபதிக்கு நீங்கள் காலக்கெடு கொடுத்து அச்சுறுத்துவது என்பது ஏற்க முடியாததொன்று என்றார்கள். "உங்கள் சனாதிபதிக்கோ, அரசுக்கோ நாங்கள் அச்சுறுத்தலோ எச்சரிக்கையோ விடவில்லை. நாம் பேச்சுவார்த்தையில் பங்குகொள்ளும் ஒரு தரப்பின் பிரதிநிதிகள்என்றவகையில்இந்தப்பேச்சுவார்த்தை மீதும், சனாதிபதி மீதும், உங்கள் மீதும் நம்பிக்கையற்ற நிலையில் நாங்கள் இந்தப்பேச்சுவார்த்தையிலிருந்தும், யுத்த நிறுத்தத்திலிருந்தும் விலகிக்கொள்வ தற்கான முடிவை எடுத்திருக்கின்றோம். அது எமது உரிமை. அதை நாம் எடுத்திருக்கின்றோமே தவிர உங்களை எச்சரிப்பதற்கான முடிவல்ல", எனக் கூறினோம். அப்பொழுது 19ஆம் திகதி விடியாமலேயே இருக்க வேண்டும் என்று பேச்சுவார்த்தைக்குவந்தபிரதிநிதிகள்கூறினார்கள். ஏனெனில் அவர்களால் முடிவெடுக்க முடியவில்லை. எதற்குமே அவர்களால் முடிவெடுக்கமுடியவில்லை. மீண்டும் பொருளாதாரத் தடைநீக்கம் பற்றியும், மீன்பிடித்தடைநீக்கம் பற்றியும் பேச வந்தார்கள். "இவைபற்றி நாங்கள் பேச என்ன இருக்கிறது. மக்கள் சுதந்திரமாகப் பொருட்களை எடுத்துச்செல்லலாம் என்று நீங்கள் அறிவியுங்கள்" என்று நாங்கள் கூறினோம். "இதைப்பற்றி நாங்கள் மீண்டும் மீண்டும் கதைக்கத்தேவையில்லை. தயவுசெய்து முடிவுகளை எடுங்கள், அதை நடைமுறைப்படுத்துங்கள். முடிவெடுக்கப்படாத, நடைமுறைப்படுத்தப்படாத பேச்சுக்களில் அர்த்தமேயில்லை. இது உங்கள் சனாதிபதிக்கும், உங்கள் அரசாங்கத்திற்கும் ஏற்புடையதாக இருக்கலாம். ஆனால் எங்களுடைய மக்களைப் பொறுத்தவரையில் மிக ஆபத்தானதொன்றாகும்" எனவும்எடுத்துரைத்தோம்.

இங்கு கருத்து ரீதியாக ஒரு சிலர் மத்தியில் சில குழப்பங்கள் இருக்கிறது. விடுலைப்புலிகள் மிக அவசரப்பட்டு முடிவெடுத்துவிட்டார்கள் எனவும் கூறக்கூடும். நாம் ஏனிந்தமுடிவை எடுக்கவேண்டும்? யுத்தம்எங்களுக்குஅவசியமா? அதற்கான விளக்கங்கள் பல உள்ளன. காலங்காலமாக எம்மைஏமாற்றியதலைவர்கள்தான் இருக்கின்றனர். இன்றைய இந்தப் பேச்சுவார்த்தை, சாமாதானம் என்ற இந்த காலநீட்டுவிப்புக்கூட, ஒரு வகையில் சந்திகா அரசின் அரசியற் திறத்தையும் இராணுரீதியான பலத்தையும் நாங்கள் ஏற்றுக்கொள்வதாகவேமுடியும்.

சந்திரிகாவின் ஒருதலைப்பட்சமான பிரச்சாரங்கள் இன்று உலக நாடுகளில் ஒலிக்கின்றன. இது எம்மைப்பொறுத்தவரையில் தற்காலிகமானதே. இந்த நாடுகள் ஒருதலைப்பட்சமான பிரச்சாரங்களை மட்டும் நம்பிக்கொண்டு விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டையும், செயற்பாடுகளையும் கண்டிக்கமுற்படுவது தற்காலிகமானது.ஆனால்உண்மைநிலைஎன்றோ ஒரு நாள் வெளிவரும். எமது மக்களின் நேர்மையானதும், உண்மையானதும், நியாயமானதுமான உரிமைப்போர் காலதாமதமாக அவர்களுக்குத் தெரியவரும்போது, அவர்கள் இந்த வேதனையான முடிவிலிருந்து நிச்சயமாக மாற்றம் பெற்று, தங்கள் முடிவுகளை மாற்றிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. எமது உறுதியான போராட்டம் தேசியத் தலைவரின் வழிகாட்டலில் வெற்றிபெறும் என்றநம்பிக்கையும்இருக்கிறது.

## சிறீலங்காப்படைகளுக்கும்...

சிறீலங்கா இராணுவத்தினரால் விடு தலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கை கடும் மோதலின் பின் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. 13.5.95 இல் இடம்பெற்ற இம்மோதல் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக நீடித்தது. இம்மோதலில் பெரும் இழப்புக்களைச் சந்தித்த இராணுவத்தினர் தமது இராணுவ நடவடிக்கையைக் கைவிட்டு முகாம்களுக்குள் முடங்கிக் கொண்டனர்.இதில்பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் காயமடை ந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.இக்கடும் சண்டையில் விடுதலைப் புலிகள் தரப்பில் 8 போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள்வீரவணக்கத்தைசெலுத்துகின்றனர்.

கிழக்கில் தமது பாதுகாப்பிற்கென சிறீலங்காப் படையினர் பொது மக்களைத் தமது கேடயமாகப் பயன் படுத்தி வருகின்றனர். தாம் செல்லும் பாதைகளில் கண்ணிவெடிகள், பொறி வெடிகள் உள்ளனவா? எனக் கண்டறிய பொதுமக்களைப் படையினர் தம்முன் னால் செல்லவிடுகின்றனர். இதுபோன்ற சம்பவமொன்றில் முறக்கொட்டாஞ் சேனை தேவபுரத்தைச் சேர்ந்த 35 வயதுடைய கணபதிப்பிள்ளைஅருள்மணி என்றபெண் 14.05.95 அன்றுதனதுகாலைஇழந்துள்ளார் 30வயதுடைய பூமணி, 38 வயதுடைய சிவபாக்கியம் ஆகிய இருவர்காயமடைந்துள்ளனர்.

ஆனையிறவுப் பகுதியில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண்கள் மீது,14.05.95 அன்று விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலின் போது எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 14 இராணுவ த்தினர் காயமடைந்ததாகவும் யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்காவ லரண் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் போராளியொருவர் வீரச்சாவ டைந்ததாகவும் அச்செய்திமேலும்தெரிவிக்கின்றது.

யாழ்மாவட்டத்தில்கட்டுவன்பகுதியில்நடந்தநேரடி மோதலில் 3 போராளிகள் வீரச்சாவடைந்தனர். லெப்.சங்கிலியன் (முத்துலிங்கம்–அம்பாறை), 2ஆம் லெப்.கருணதாஸ், வீரவேங்கை சாந்தகுமார் (சந்திரன் ராஜ்) ஆகியோரே வீரச்சாவடைந்த விடுதலைப் புலிகள் ஆவர். 13.5.95 அன்று நடந்த இன்னொரு நேரடி மோதலில் லெப். வைரமுத்து, லெப். தீபன்(அம்பாறை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். இவ் வீரவேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# "அமெரிக்கா வியட்னாமில் தோற்ற வரலாறு சிறீலங்காவுக்கு தமிழீழத்தில் ஏற்படும்"

## - 'ராவய' ஆசிரியர் விக்ரர் ஐவன்

அண்மையில் யாழ்.குடாநாட்டுக்குப் பயணம் செய்த 'ராவய' என்ற சிங்களப் பத்திரிகையின் ஆசிரியரான விக்ரர் ஐவன், யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த போது கண்டு கிரகித்தவைகளைக் கொழும்பு திரும்பியதும் பின்வருமாறு கூறினார்:

"யாழ்ப்பாணத் தில் வாழும்மக்கள்யுத்தத்தின் அழுத்தத்தில் வாழ்ந் தாலும், ஒரு மகிழ்ச்சியான வாழ்க் கையினையே வாழ்கின்றார்கள்" என்றே

**ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரையேனும் இழந்து நிற்கும் யாழ். மக்கள், தங்களைப் பாதுகாத்து வைத்திருப்பவர்கள் விடுதலைப் புலிகள்தான் எனக் கூறுகின்றார்கள். சண்டைக்கு என்ன காரணமாக இருந்தாலும், அதனால் எத்தனை கோடி ரூபாக்களை இழந்தாலும் மக்கள், விடுதலைப் புலிகள்பக்கம்தான் நிற்கின்றார்கள்.**

என்னால் எண்ணத் தோன்றுகின்றது. காரணம், அந்த வாழ்க்கைக்கு அவர்கள் பழக்கப்பட்டுவிட்டார்கள்.

வானத்தில் இருந்து படைகளால் கொட்டப்பட்ட குண்டுகளின் தாக்கத்தால் அழிந்த வியாபார நிறுவனங்களையும்,வீடுகளையும்கண்டோம்.

வானத்தில் இருந்து கொட்டிய குண்டுகள் யாழ்ப்பாணத்தைப் பொரு ண்மிய ரீதியில் மிகவும் நலிவடையச் செய்துள்ளது என்பதையும் யாரும் மறுக்க முடியாது. மற்றும் ஒரு சம்பவத்தையும் நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். அதுதான் பூநகரியைப் பிடிக்க விடுதலைப் புலிகள் மேற்கொண்ட யுத்தமும், அவ்வேளை அவர்கள் இழந்த போராளிகள் தொகையுமாகும். இச் சண்டையில் மொத்தமாக அவர்கள் இழந்ததாகக் கூறும்போராளிகள்தொகை485பேர்.இது அவர்களால் நிரந்தரப்படுத்தப்பட்ட பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் கணிக்கப்பட்டது. 33 வீதமானோர் யாழ்பாணத்தைச் சேர்ந்தோர் எனவும், 33 வீதமானோர் வன்னியைச் சேர்ந்தோர் எனவும்,இவ்விகிதாசாரத் தொகைக்குச் சமமாகக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தோரும் இறந்திருக்கிறார்கள். இறந்தவர்களை விட பலத்த காயங்களுக்கு உட்பட்டவர்கள், கை, கால் இழந்தவர்கள் தொகையும் கணிசமாக இருக்கின்றது.

நாங்கள் கொழும்பு நோக்கித் திரும்பும் போது எமக்குப் பாதை காட்டுவதற்காகவும், பாதுகாப்பு வழங்குவதற்காகவும் எம்முடன் வந்த ஒரு இளஞனின் பெயர் மோகன். இவர் ஒரு பாடசாலை அதிபரின் மகன். இவரின் வயது22.

இவர் பூநகரிச் சண்டையின் போது ஒரு காலைஇழந்தவர்.

எனினும் இவருடைய குறையை இழகுவில் எம்மால் கண்டு கொள்ள முடியவில்லை. காரணம், அங்கம் இழந்தவர்களுக்குச் சிகிச்சை அளிக்க விடுதலைப்புலிகளால் திறக்கப்பட்டுள்ள நிலையத்தின் சிறந்த சேவையும், தொழில்நுட்பமுமேயாகும்.

விடுதலைப் புலிகளிடம் ஒரு அமைச்சரவையும் உண்டு. அதில் அங்கம் வகிப்பவர்கள், யுத்தத்தின் அனர்த்தங்களினால் உடல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அங்கவீனர்கள் எனவும் கூறலாம். இவர்களிடையே நிதி, பொருளாதாரப் பொறுப்புக்களை வகிப்பவர் ரவி என்னும் ஒரு போராளி.இவர் யுத்தம் காரணமாகத் தன் கால்களை இயங்க முடியாமற் போனவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் அரசியற் பொறுப்பு வகிக்கும் தமிழ்ச்செல்வன், இரு ஊன்றுகோலின் உதவியுடனேயே தன்பணியைப் பொறுப்புடன் செய்கின்றார். இவருக்கு ஏற்பட்ட பாதிப்பு, பூநகரிச் சண்டையில் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

**தமிழ்மக்கள் விரும்புவது கௌரவமான, சுதந்திர மான ஒரு நல்வாழ்க்கையே. அவர்கள் தங்கள் தலைவனாக மதிப்பது, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை மட்டுமே. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மேல், மக்கள் விசுவா சமும் ஆழ்ந்த நம்பிக்கையும் வைத்திரு க்கின்றார்கள். "தலை வணங்காத் தனிப்பெரும் தலைவர் பிரபாகரன்தான், எங்களின் தலைவர்" என்னும் எண்ணத்தை எந்தக் காரணியாலும் மாற்ற முடியாது என்பது மட்டும் வெளிப்படை**

ஒவ்வொரு முக்கிய பொறுப்பு வகிப்பவர்களும், அவர்களின் கீழ் பணிபுரிபவர்களும் ஏதோ ஒரு விதத்தில் அங்கவீனர்கள்தான் என்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

தம்முடைய மக்களைக் காக்கும் போரில் பாதிக்கப்பட்டவர்கள், தங்களுக்குக் கொடுக்கப்படும் எந்தவொரு பணியையும் திறம்படச் செய்யக் கூடியவர்கள். இவர்களின் மேம்பட்ட பணிகளில், இவர்கள் செய்யும் அதி உன்னத தொண்டு என வர்ணிக்கக் கூடிய ஒன்று, ஈழப்போரில் உயிரிழந்த போராளிகளின் குடும்பங்களை "மாவீரர் குடும்பம்" என அழைப்பது. அவர்களுக்காக இலவச சேவைகளையும்அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

விடுதலைப் புலிகளின் ஒரு விளையாட்டுத் திடலில் ஒரு குழந்தைகள் கூட்டத்தைச் சந்தித்தேன்.அவர்கள் போரினால் தம் பெற்றோர்களை இழந்தவர்கள். இவர்களுக்கு நல்ல கல்வியும், அன்பான பராமரிப்பும் விடுதலைப் புலிகளால் வழங்கப்படுகின்றது.

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவரையேனும் இழந்து நிற்கும் யாழ். மக்கள், தங்களைப் பாதுகாத்து வைத்திருப்பவர்கள் விடுதலைப் புலிகள்தான் எனக் கூறுகின்றார்கள். சண்டைக்கு என்ன காரணமாக இருந்தாலும், அதனால் எத்தனை கோடி ரூபாக்களை இழந்தாலும்மக்கள்,விடுதலைப்புலிகள் பக்கம்தான் உறுதியாக நிற்கின்றார்கள்.

**சர்வ வல்லமை பொருந்திய அமெரிக்கா தோல்வியுற்ற காரணம் வியட்னாம் மக்களின் மன உறுதியே. இழப்புக்களுக்கு மத்தியிலும் வியட்னாம் தலைநிமிர்ந்து வெற்றி பெற்றதை, யாழ்ப்பாணத்தின் கோலம் எனக்கு நினைவூட்டுகின்றது. நீண்ட காலப்போரின் பின் அமெரிக்கா வியட்னாமில் தோற்ற வரலாறு, சிறீலங்காவிற்கு தமிழீழத்தில் ஏற்பட நீண்டகாலந் தேவையில்லை.**

அவர்களைத் தங்களின் நண்பர்களாகவே எண்ணுகிறார்கள். விடுதலைப் புலிகள் மேல், யாழ் மக்களுக்குத் துளியேனும் விரோதமோ பயமோ கிடையாது. உறவினர்கள்போலவே நெருங்கிப்பழகுகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் வாகனத்தட்டுப்பாடு என்பது உண்மைதான். எனினும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தட்டுப்பாடுஇல்லை.விடுதலைப்புலிகள் வாகனத்தில் பயணம் செய்யும் போது மக்கள் பயந்து ஒதுங்குவதில்லை. அவர்களும் சாதாரணமாகவே பயணம் செய்கின்றார்கள். ஒரு நாள் நாங்கள் விடுதலைப் புலிகளின் வாகனத்தில் பயணம் செய்யும்போது, சைக்கிளில் வந்த ஒருவர் வாகனத்தில் அடிபட விருந்தார்.விடுதலைப்புலிகளின் வாகன ஓட்டுனர்தன்னுடையதிறமையால் இந்த விபத்தைத்தடுத்துவிட்டார்.அத்துடன் தாங்கள் அதிகாரம் படைத்தவர்கள் என்பதைக்காட்டிக்கொள்ளவேயில்லை. அவர்கள் நினைத்திருந்தால் அவரைத் திட்டியிருக்கலாம் அல்லது அடித்திருக்கலாம்.ஆனால்,அவர்களும் சாதாரண மக்கள் போல் விலகிப் போய்விட்டார்கள்.

இன்னும் ஒரு சம்பவத்தில், குழந்தை ஒன்று வீதிக்குக் குறுக்கே வந்தது. ஓட்டுனர் வாகனத்தை துரித கதியில் நிறுத்திவிட்டார்.

"நாங்கள் விடுதலைப் புலிகள் என்றாலும், தவறு இழைக்கும் பட்சத்தில் அது குற்றம் என நிருபிக்கப்பட்டால் எமக்கும் தண்டனை வழங்கப்படும்" என்றார்.

விடுதலைப் புலிகளின் நீதி நிர்வாகம் பாரபட்சம் அற்றது என, வாகனத்தின் ஓட்டுனரான அந்த விடுதலைப்புலி குறிப்பிட்டார்.

எம்முடைய சட்டங்களுக்கமைய 12 வயதுக்குக்குறைந்தவர்களேகுழந்தைகளாகக் கணிக்கப்படுவார்கள்.16 வயது தொடக்கம் அவர்கள் முழு மனிதர்களாகவே கணிக்கப்படுவார்கள்.எனவே 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் செய்யும் பாரதூரமான குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படுவது தவிர்க்கமுடியாதது ஆகும்.

தேச வழமைகளை மாற்றி அமைத்துள்ள விடுதலைப் புலிகளின் நிர்வாகம், பெண்களுக்குப் பூரண சுதந்திரமும், உயர்ந்த மதிப்பும் வழங்குவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

யாழ். அரச அதிபரின் கணக்குப்படி அநாதைக் குடும்பங்கள் 58,000 இருப்பதாகக் கூறப்படுகின்றது. யாழ். நகரில் வசிக்கும் குடும்பங்கள் எல்லோரையும் அநாதைகள், அகதிகள் எனக்குறிப்பிட்டாலும் குடியிருக்க வீடு, நிலங்கள்இல்லாதவர்களையேஅகதிகள் எனக்கணிக்கலாம்.

யாழ் மக்களில் கூடுதலானவர்கள் இராணுவ ஆக்கிரமிப்பு இல்லாத பிரதேசங்களில் வசிப்பதையே விரும்புகின்றார்கள்.

யாழ்ப்பாணத்தை உற்றுநோக்கும்போது, நான் இப்பொழுது கூறும் சம்பவங்களை விட, ஒரு உயர்ந்த சம்பவம் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அது வியட்னாமில் அமெரிக்கா தோல்வியுற்றமையாகும். சர்வ வல்லமை பொருந்திய அமெரிக்கா தோல்வியுற்ற காரணம் வியட்னாம் மக்களின் மன உறுதியே. இழப்புக்களுக்குமத்தியிலும்வியட்னாம் தலைநிமிர்ந்து வெற்றி பெற்றதை, யாழ்ப்பாணத்தின் கோலம் எனக்கு நினைவூட்டுகின்றது. நீண்ட காலப்போரின் பின் அமெரிக்கா வியட்னாமில் தோற்ற வரலாறு, சிறீலங்காவிற்கு தமிழீழத்தில் ஏற்பட நீண்டகாலந் தேவையில்லை.

பல தொன் நிறையுள்ள குண்டுகள் போட்டும் அமெரிக்காவால் வியட்னாமியரை அசைக்க முடியவில்லை. அது போலவே தான், யாழ்ப்பாணத்தில் குண்டு மழை பொழிந்த சிறீலங்கா அரசும். இவர்களின் வெற்றிக்குக் காரணம் ஆயுதபலம் அல்ல, அசைக்க முடியாத அவர்களின் மனோபலமும், மக்களின்ஆதரவுமே.

தற்போது வடக்கின் பொருண்மியத்தையும், மக்களையும் சிறீலங்கா அரசு முடக்கித்தான் வைத்திருக்கின்றது. தமிழ் மக்கள் விரும்புவது கௌரவமான, சுதந்திரமான ஒரு நல்வாழ்க்கையே. அவர்கள் தங்கள் தலைவனாக மதிப்பது, விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை மட்டுமே. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் மேல், மக்கள் விசுவாசமும் ஆழ்ந்த நம்பிக்கையும் வைத்திருக்கின்றார்கள். "தலை வணங்காத் தனிப்பெரும் தலைவர் பிரபாகரன்தான், எங்களின் தலைவர்" என்னும்எண்ணத்தை எந்தக் காரணியாலும் மாற்ற முடியாது என்பது மட்டும்வெளிப்படை.

# உலக வரலாறு...

மேலும் மூன்றுமாதகால அவகாசம் கொடுத்திருக்க வேண்டும் என்று உபதேசம் செய்கிறார்கள்.

1987இல் மட்டுமல்ல, 1990 இல் சனாதிபதி பிரேமதாசாவுடன் 13மாதகாலம் இழுத்தடிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் முறிந்தபோதும் இவர்களே விடுதலைப் புலிகள் அவசரப்பட்டு விட்டார்கள் என்று புலம்பினார்கள். உலகநாடுகளின் நல்லெண்ணத்தை விடுதலைப் புலிகள் இழந்துவிட்டார்கள் என்ற பல்லவியை மீண்டும் மீண்டும் பாடினார்கள்.

இதே புலம்பலையும், இதே பல்லவியையும்தான் இப்போதும் இவர்கள் பாடுகிறார்கள்.

சனாதிபதி சந்திரிகாவிற்கு இனப்பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்த்துவைக்க வேண்டும் என்ற அரசியல் வைராக்கியம் (Political will) இருந்திருந்தால் காத்திரமான நடப்புக்களை நடைமுறைப் படுத்த அவருக்கு ஆறு மாதங்கள் தேவையில்லை. ஆறுவாரங்களே போதுமானதாக இருந்திருக்கும் அந்த அரசியல் வைராக்கியம் இல்லாவிட்டால் இன்னும் மூன்றுமாதம் அல்ல மூன்று வருடங்கள்கூட போதுமானதாக இருக்காது.

எனவே இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வேண்டியது கால அவகாசம் அல்ல அரசியல் சாணக்கியம். விடுதலைப் புலிகள் சமாதானத்துக்கான கதவுகள் இன்னும் மூடப்படவில்லை திறந்தே இருக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள்.

இதன்மூலம் சனாதிபதி சந்திரிகாவிற்கு விடுதலைப் புலிகள் மற்றுமோர் சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இதற்கு மேல் சமாதானமா, போரா என்பதை முடிவுசெய்யும் பொறுப்பு சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தது.

உலக வரலாறு புகட்டும் பாடத்தை சனாதிபதி சந்திரிகா இனிமேலாவது படித்துப் புரிந்து கொள்வாரா இல்லையா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

செய்திக் கண்ணோட்டம்

# உலக வரலாறு புகட்டும் பாடத்தை சந்திரிகா இனிமேலாவது புரிந்து கொள்வாரா?

- சேரன்மாதேவி

ஒரு நாடு இன்னொரு நாட்டை இராணுவ பலம் ஒன்றைமட்டுமே முதலாக வைத்து போரில் வெல்லவும் முடியாது அந்த நாட்டை ஆளவும் முடியாது என்ற அரசியல் நிதர்சனத்திற்கு உலக வரலாற்றில் ஏராளமான எடுத்துக் காட்டுக்கள் இருக்கின்றன.

அமெரிக்க வல்லரசு வியட்னாமுக்கு எதிரான எட்டு ஆண்டுகாலப் (1965-1973) போரில் (1965-73) 58,000 போர்வீரர்களை இழந்து தலைதப்பியது தம்பிரான் புண்ணியம் என்று வீரத்தை தெருக் களத்தில் போட்டுவிட்டு ஒரு மூன்றாவது நாடான வியட்னாமினால் மூக்குடைபட்டு, தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு மானம் பறிபோன நிலையில் அந்த நாட்டைவிட்டு வெளியேறியது.

அமெரிக்க வல்லரசு போரின் உச்சக் கட்டத்தில் 500,000 போர்வீரர்களை யுத்த களத்தில் இறக்கி யிருந்தது. இராணுவ ஆலோசகர்கள் தொகை மட்டும் 50,000 த்தையும் தாண்டியிருந்தது.

ஆறு ஆண்டுகாலம் (1939-45) நீடித்த இரண்டாவது உலகப்போரில் ஜெர்மனி, யப்பான் மீது வீசிய குண்டுகளைவிட பலமடங்கு அதிகமான குண்டுகளை அமெரிக்க விமானப்படை வியட்னாமில் போட்டுத் தள்ளியது.

இருந்தும் அமெரிக்கா, உலகத்தினை பெரிய வல்லரசு தோல்வியைத் தழுவியது. இன்று இருபது ஆண்டுகள் கழித்து தனது தோல்விக்கான காரண காரியங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்க வல்லரசு போலவே அன்றைய சோவியத் வல்லரசு ஆப்கானிஸ்தானின் உள்நாட்டுப்போரில் தலையிட்டு மூன்றாண்டுகளுக்குப் பின் பலத்த ஆள், ஆயுத இழப்பின் பின் வெறுங்கையோடு, தனது மானத்தை ஆப்கானிஸ்தான் பனிமலைகளில் தொலைத்து விட்டு வெளியேறியது.

இந்து சமுத்திரத்தின் பிராந்திய வல்லரசான இந்தியாவும் 1987-90 ஆம் ஆண்டுகளில் தமிழீழத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வீரம், மரணம் இரண்டையும் தமிழீழ மண்ணில் தொலைத்துவிட்டு முகத்தில் முக்காடு போட்டுக்கொண்டு வெளியேறியது.

உலக வரலாறு ஒரு படிப்பினையை உணர்த்துகிறது. அதாவது வரலாற்றில் இருந்து யாரும் படிப்பினை எதனையும் படிப்பதில்லை என்பதே அப்படிப்பினையாகும்.

அமெரிக்காவின் வியட்னாம் அனுபவத்தை வைத்துக் கொண்டு சோவியத்நாடு படிப்பினை படித்திருக்கலாம் ஆனால் படிக்கவில்லை. அமெரிக்கா சோவியத்நாடு இந்த இரண்டு நாடுகளது போர் அனுபவத்தை வைத்துக் கொண்டு பாரதம் பாடம் படித்திருக்கலாம் ஆனால் படிக்கவில்லை.

இப்போது ஸ்ரீலங்கா அமெரிக்கா-வியட்நாம், சோவியத்நாடு-ஆப்கானிஸ்தான், இந்தியா-தமிழீழம் இந்த வரலாறுகளில் இருந்து படிப்பினை படித்திருக்கலாம் ஆனால் படிக்கவில்லை.

கடந்த ஏப்ரல் 19ம் திகதி இருபத்து ஐந்து நிமிட இடைவெளியில் ஸ்ரீலங்கா கடற்படைகளும் புலித்தாக்குதலுக்கு இரண்டு பீரங்கிப் படகுகளை பலிகொடுத்தது.

இப்போது இருபத்துநாலு மணித்தியால இடைவெளியில் ஸ்ரீலங்கா விமானப்படை இரண்டு அவரோ இராணுவ போக்குவரத்து விமானங்களை புலிகளது விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதலுக்குப் பறி கொடுத்துள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் முதல் விமானம் விடுதலைப் புலிகளது ஏவுகணைகளால் அல்ல, இயந்திரக் கோளாறினால் விழுந்து விட்டது, என்று அறிவித்துவிட்டு, அதைப்பற்றி விசாரிக்க இரண்டு அதிகாரிகளை ஏற்றிச் சென்ற இரண்டாவது விமானம் விடுதலைப் புலிகளது ஏவுகணைக்கு இலக்காகி அழிக்கப்பட்டுள்ளது.

இரண்டு பீரங்கிப் படகுகள், இரண்டு விமானங்கள் இவற்றை இழந்தபின்பாவது ஸ்ரீலங்கா அரசு ஏதாவது பாடம் படிக்குமா என்பதற்குரிய விடையை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இப்போது மட்டுமல்ல எப்போதுமே ஸ்ரீலங்கா அரசுக்கு தமிழர்-சிங்களவர் இடையிலான இனப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இரண்டு வழிகள் இருந்து வந்திருக்கின்றன.

முதலாவது வழி இனப்பிரச்சினைக்கு விடுதலைப் புலிகளுடன் சமாதானமுறையில் பேச்சுவார்த்தை நடாத்தி தமிழினத்தின் தேசிய அபிலாசைகளை பூர்த்திசெய்யக் கூடிய அரசியல் தீர்வு.

இரண்டாவது வழி இனப்பிரச்சினைக்கு முற்றுமுழுதான இராணுவத் தீர்வு.

1977ஆம் ஆண்டுமுதல் 1994ஆம் ஆண்டுநடுப் பகுதிவரை ஆட்சியில் இருந்த ஐ. தே. கட்சியும் அதன் தலைவர்களுமான ஜே. ஆர், பிரேமதாசா, விஜயதுங்காவும் இரண்டாவது வழியை அதாவது இராணுவ வழியையே பின்பற்றினார்கள்.

1994 ஆகஸ்டில் பொதுசன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்று சந்திரிகா குமாரணதுங்கா பிரதமராக பதவியேற்றபோது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்போவதாக அறிவித்தார். 1994ம் ஆண்டு நொவம்பரில் இனப் பிரச்சினைக்கு அரசியல்த் தீர்வுதான் சரியான வழி என்று மீண்டும் பகிரங்கப்படுத்தி சனாதிபதித் தேர்தலில் அமோக வெற்றி பெற்றதன்மூலம் அதற்கான மக்கள் ஆணை கிடைத்துவிட்டதாக சனாதிபதி சந்திரிகா அறிந்தார்.

சமாதானத்துக்கு வெள்ளைக் கொடி காட்டுவதுபோல் வடக்கு மீதான பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்டது. தடைசெய்யப்பட்ட 44 பொருட்களில் 28பொருட்களுக்கான தடை நீக்கப்பட்டது.

அப்போது பிரதமராக இருந்த சந்திரிகாவின் சமாதான நல்லெண்ண சமிக்ஞைகளை வரவேற்பதற்கு அறிகுறியாக விடுதலைப் புலிகள் தங்களால் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்த 10 யுத்தக் கைதிகளை விடுவித்து சந்திரிகாவின் அரசுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என்பதையும், பிரதமர் சந்திரிகா யாழ்ப்பாணம் வரும்பட்சத்தில் அவரை வரவேற்கத் தயார் என்பதையும் விடுதலைப்புலிகள் அறிவித்தார்கள்.

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வுபற்றி ஆராயப்படுமுன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் நடைபெறுவதற்கு ஏதுவாக விடுதலைப் புலிகள் 4 கோரிக்கைகளை முன்வைத்தார்கள்.

1. முழுமையான பொருளாதார கடல்வலையத் தடைநீக்கம்.

2. பொதுமக்கள் பாவனைக்கு பூனகரி இராணுவ முகாமை அகற்றி கேரதீவு-சங்குப்பிட்டிப்பாதையை திறந்து விடல்.

3. நிரந்தர போர் நிறுத்த உடன்பாடு.

4. வட-கிழக்கு மாகாணங்களின் பொருளாதார புனர்நிர்மாணம்.

இந்த நான்கு கோரிக்கைகளையும் மையமாக வைத்து நான்கு சுற்றுப் பேச்சுவார்த்தைகளும், நாற்பதற்குமேலான கடிதங்களும் முதல்க் கட்ட பேச்சுவார்த்தைகள் தொடங்கிய ஒக்டோபர் 13ம் திகதி தொடக்கம் தலைவர் பிரபாகரனால் மார்ச்சு 28ம் திகதிமட்டும் கெடுவிதிக்கப்பட்ட பின் ஏப்ரல் 19ம் திகதிவரை தள்ளிப் போடப்படும்வரை பரிமாறப்பட்டது.

இந்த கால கட்டத்தில் அதாவது அக்டோபர் தொடங்கி ஏப்ரல் 19ம் திகதிவரை விடுதலைப் புலிகள்-சந்திரிகா அரசுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட பின்னடைவுகள், சந்திரிகா அரசின் நழுவல்கள், பின்வாங்கல்கள் இன்று வரலாறு ஆகிவிட்டது.

சனாதிபதி சந்திரிகாவின் இனப்பிரச்சினை பற்றிய நிலைப்பாடு, அதாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் சரியான வழியென்றும், விடுதலைப் புலிகளுடன் சமாதானமுறையில் பேசி பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்றகோட்பாடு, ஆட்டங்காண ஆரம்பித்தது. அதற்குப் பதிலாக இராணுவத் தீர்வையும் மாற்றுவழியாக கைவசம் வைத்திருக்கும் கோட்பாடு முன்னிலைப் படுத்தப்பட்டது.

இராணுவத்துக்கு மேலதிக ஆட் சேர்ப்பு, ஆயுதக் கொள்வனவு, மேலதிக நிதி ஒதுக்கீடு, இராணுவ ஒத்திகைகள் இதனை நிரூபிப்பதாக இருந்தது.

முன்னைய ஆட்சியாளர்கள் இராணுவத்தை தன் இஷ்டத்திற்கு செயல்படவிட்டுவிட்டதாகப் பதவிக்குவந்த புதிதில் குற்றம்சாட்டிய சனாதிபதி சந்திரிகா, அதே இராணுவத்திடம் மண்டியிடுவது வெளிப்படையாகத் தெரிய ஆரம்பித்தது.

பொருளாதாரத்தடை நீக்கப்பட்டாலும், இராணுவத்தின் தடைகளையும், கெடுபிடிகளையும் கட்டுப்படுத்த அவரால் முடியாது போய்விட்டது.

அது மட்டுமல்ல விடுதலைப் புலிகளின் பூநகரிப்பாதை திறப்பு தேசியபாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்கும் எனச் சொல்லப்பட்டது. அதாவது தமிழ் மக்களின் நலன்களை விட இராணுவநலன்களுக்கு முன்னுரிமை அளிக்க[ப்]பட்டது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை தொடர்ந்[து] நிரந்தர போர் நிறுத்தம் செய்யவேண்டும் என்[ற] விடுதலைப் புலிகளது நியாயமான கோரிக்கை[யை] அதே இராணுவ நலன்களை பேணு[ம்] முகமாக சந்திரிகா நிராகரித்தார்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை அமுல்படுத்[த] அதற்குரிய விதிமுறைகளை இரு தரப்பும் கலந்[து] பேசி வரைந்து கொள்ளவேண்டும் என்ற வி[டு]தலைப் புலிகளது வேண்டுகோளும் தட்டி[க்] கழிக்கப்பட்டது.

இதனால் வெளிநாட்டுப் பார்வையாளர்களை தலைவர்களாகக் கொண்ட கண்காணிப்பு[க்] குழுக்கள் வெறுமனே காலத்தை கடத்[த] நேரிட்டது.

இந்த இலட்சணத்தில் பொருளாதாரத் தடை[யை] தளர்த்தியதன் மூலம் தமிழ்மக்களுக்[கு] கொடுக்கப்படவேண்டிய சலுகைகளும் (Con cessians) உரிமைகளும் (Privilages[)] கொடுத்தாகி விட்டது, இனிக் கொடுக்க ஒன்றுமே[யி]ல்லை, மேற்கொண்டு அரசியல்த் தீர்வுபற்[றி] பேசவேண்டும் என்ற சந்திரிகாவின் பேச்[சு] விடுதலைப் புலிகளின் பொறுமையை சோதி[ப்]பதாக இருந்தது.

தமிழர்களின் கையோங்கும்போது பேச்[சு]வார்த்தைக்கு அழைப்பதும், ஒப்பந்தங்க[ளை] எழுதுவதும் பின் அவற்றை கைவிடுவது[ம்] ஸ்ரீலங்கா அரசுகளின் நீண்டகால கோட்பாடா[க] இருந்து வந்திருக்கின்றது.

1957 இல் எழுதப்பட்ட பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம், 1965இல் எழுதப்பட்ட டட்லி சேனனாயக்கா-செல்வநாயகம் ஒப்பந்த[ம்] இதற்கு நல்ல உதாரணங்களாகும்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை[கள்] தீர்க்கப்பட்டு விட்டது. மேற்கொண்டு அரசிய[ல்] தீர்வுபற்றிப் பேசுவோம் என்று சந்திரிகா கூறின[ா]லும் அந்த தீர்வு எத்தகையது என்பதை இ[து]வரை வெளியிடவில்லை அதை மூடுமந்திரமா[க] வைத்திருக்கிறார்.

இதே சமயம் விடுதலைப் புலிகள் தமிழீழ[க்] கோரிக்கையையும், தேசியஇன அந்தஸ்தையு[ம்] தேசிய இனத்துக்கு இருக்கும் அடிப்படை உரிமை[]களில் ஒன்றான சுயநிர்ணய உரிமையையு[ம்] அங்கீகரித்து இணைப்பாட்சித்திட்ட அரசிய[ல்] யாப்பின் கீழ் அதிகப்பட்ச சுயாட்சி வழங்கு[ம்] யோசனைகளை சந்திரிகா அரசு முன்வைக்[கு]மானால் அதை அக்கறையுடன் பரிசீலிக்க[த்] தயார் என்று பகிரங்கமாக அறிவித்தது வி[டு]தலைப் புலிகள் ஒரு நியாயமான, நீதியான அரசியல் தீர்வுக்கு தயார் என்பதை மிக[த்] தெளிவாக எடுத்துக் காட்டியது.

தனித்தமிழீழத்துக்கு மாற்றாக இணையாட்[சி] அரசியல் அமைப்புத் திட்டத்தை பரிசீலிக்க[த்] தயார் என்று விடுதலைப் புலிகள் பகிரங்கமா[க] அறிவித்தது இனப்பிரச்சினை சமாதான வழிகளில் தீர்த்துவைப்பதற்கு காட்டப்பட்[ட] சலுகையாகும்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழிகளி[ல்] தீர்த்து வைக்க சந்திரிகாவிற்கு கொஞ்சமாவது அக்கறை இருந்திருந்தால் தமிழ் மக்கள[து] அன்றாடப் பிரச்சினையைத் தீர்த்துவைத்துவிட்[டு] விடுதலைப் புலிகளின் தமிழீழத்துக்கான மாற்று[த்] திட்டத்தை கெட்டியாகப் பிடித்திருக்கவேண்டும். அப்படிச் செய்யாது சந்திரிகாவிடம் இணை[ப்]பாட்சித்திட்டத்தைவிட குறைந்த அளவு அரசிய[ல்] தீர்வு இருப்பதையே காட்டுகிறது.

எனவே தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினை[]யைத் தீர்க்க வழியில்லாத சந்திரிகாவினா[ல்] தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றி வைக்கமுடியாது என்ற முடிவுக்[கு] விடுதலைப் புலிகள் வந்து மோதல் தவிர்ப்[பு] ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டது முற்றிலு[ம்] நியாயமானதே. விடுதலைப் புலிகளுக்கு வேற[ு] வழியில்லை, இருக்கவும் முடியாது என்பதை நடுநிலையாளர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

1987ஆம் ஆண்டில் இந்திய-இலங்கை ஒப்ப[ந்]தத்தை விடுதலைப் புலிகள் ஏற்று, இந்தியாவுடன் ஒத்துப்போக வேண்டும் என்று சொன்னவர்களே இன்று விடுதலைப் புலிகள் சந்திரிகாவின் அர[சி]யலை அல்ல பேச்சை நம்பி விடுதலைப் புலிக[ளின்] பொறுமையைக் கடைப்பிடித்து அவருக்கு[]

தொடர்ச்சி 7 ஆம் பக்க[ம்]

# அரசியல் மேலாண்மைக்காக அணுகுண்டை வீசிய அமெரிக்கா உரைத்த போய் அம்பலமாகின்றது


கடந்த எட்டு மாதங்கட்கு மேலாக இரண்டாம் உலகப் போரின் முடிவு குறித்தான, அதனோடு தொடர்புடைய பல்வேறு வரலாற்றுப் பதிவுகளை நினைவு கூர்வதே ஐரோப்பிய நாடுகளின் பிரதான பணியாகிவிட்டது. குறிப்பாகச் செருமணிக்கு எதிரான இறுதித் தாக்குதலை மேற்கொள்வதற்காக 1944 ஆண்டு யூன் 6 ஆம் நாள் இங்கிலாந்தின் தென் கரையிலிருந்து கிளம்பி வடபிரான்சின் நோர்மண்டி கரையில் பாரிய தரையிறக்கத்தை மேற்கொண்ட நேசநாட்டுப் படையினரின் செயற்பாடுகளை நினைவுகூரும்50ஆவது ஆண்டுநிறைவுநிகழ்வு சென்றஆண்டுயூன்மாதம்நடந்தேறியநாள்தொட்டு இன்று வரை பற்பல நினைவு கூரல்கள் நடந்தேறி விட்டன: இவை மீண்டும் கிளப்பும் உணர்வலைகள்,பழையவரலாற்று சம்பவங்கட்கு புதிய விளக்கங்கள் போன்றவை ஐரோப்பிய நாடுகளிடையே மறைவாக விடுக்கும் முரண் பாடுகளையெல்லாம் மீண்டும் வெளிச்சத்திற்கு கொண்டு வருகின்றன. குறிப்பாக செருமனியின் பல நகரங்கள் நேசப் படையினரின் விமானங்களால் மிக மூர்க்கமாக தாக்கப்பட்ட போது கொல்லப்பட்ட செருமனியினரை நினைவுகூரும் சம்பவங்கள் பல வாதப்பிரதிவாதங்களாய் இப்போது கிளம்புகின்றன. இதற்கிடையில் நெப்போலியன் போனபாட் தோற்கடிக்கப்பட்ட வோட்டர்லூ சண்டையின் (BattleofWaterloo)180ஆவது ஆண்டுமுடிவும் இவ்வாண்டு யூன் 18 ஆம் நாளன்று இப்போது வோட்டர்லூ அமைந்துள்ள பிரசல்ஸ் நகரத்தின் தெற்கில் நினைவு கூரப் போகின்றது (பிரசல்ஸ் பெல்ஜியத்தின் தலைநகர்). இந்நினைவு கூரல் என்பது மிக வித்தியாசமான முறையில் 10 நாடுகளைச் சேர்ந்த போர் வீரர்களால் இன்னுமொரு முறை வோட்டர்லூ சண்டை மாதிரிக்காக அரங்கேற்றப்படவுள்ளது. 1815 ஆம் ஆண்டு நெப்போலியனுக்குஎதிரானபோரில்பங்குபற்றியவை பிரித்தானியா, பிரஸ்யா, ஆஸ்திரியா, ருஸ்யா என்பனவே. ஆனால் இப்போது எல்லைகள் பெய்ர்கள்மாற்றங்கண்டதால்பெல்ஜியம்,செருமனி,

*அமெரிக்காவின் வரலாற்று வீரர்கள் அவமதிக்கப்படுகிறார்கள் என்ற கண்டனம் பல பகுதிகளிலிருந்தும் நாலா புறமும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.*

இங்கிலாந்து, இத்தாலி, ருஸ்யா, லிதுவேனியா, அமெரிக்கா,கனடாஎனபத்துநாடுகள்பங்குபற்றும் வகையில் இச்சண்டை மீண்டும் அரங்கேற்றப்போகிறது.

## அமெரிக்கஆணவம்

அவையெல்லாம் கிளப்பும் பழைய வரலாற்று தூசுகளால் ஐரோப்பிய நாடுகள் தமது பழைய வரலாற்றுச் சிக்கல்களை வெளிப்படுத்தும் விதம் ஒருபுறமிருக்க, இப்போது மிக்க விவாதத்தை, எதிர்ப்புணர்வை, பெருத்த கண்டனங்களை கிளப்பும் வரலாற்று நினைவு கூரலாக அமைந்துவிட்டநிகழ்ச்சி,யப்பான்மீதுஅமெரிக்கா அணுக்குண்டுகளை வீசி இலட்சக்கணக்கான பொதுமக்களைக் கொன்ற நிகழ்வாகிவிட்டது. அமெரிக்க யப்பானிய உறவிலே விரிசலை ஏற்படுத்தும் வகையிலும் யப்பானியர் தாம் அவமதிக்கப்படத்தக்க வகையிலும் இந்நினைவு கூரல் திட்டமிடப்படுவதாக முறைப்படும் அதேவேளை அமெரிக்க வலதுசாரி அணியினரோ அணுக்குண்டினை வீச எடுத்த முடிவினை வரலாற்றுப்பிறழ்வாக தம்மீது கரிபூச எடுக்கப்படும் முயற்சியாகக் கருதி கண்டனங்களை எழுப்புகின்றனர். அதேவேளை அமைதியை அவாவி நிற்கும் இன்னுமொரு அணியினரோ அணுக்குண்டின் அபாயத்தை அணுவாயுதப் பரம்பலின் தீர்வாக விளக்க இதுவே பொருத்தமான வழியென முனைப்பாக முயல்கின்றனர். இவ்வாறு பலதரப்பட்ட உணர்வலைகளை கிளப்பக் காரணமாக அமைந்தவை இரு நிகழ்ச்சிகளாகும். ஒன்று அமெரிக்க அரசின் அஞ்சற்துறையினரால் வெளியிடப்படவிருந்த அணுக்குண்டு போடப் பட்டமைதொடர்பானஞாபகார்த்தமுத்திரையாகும். மற்றது உலகப்புகழ் மிக்க அமெரிக்க 'சிமித்சோனியன்' நிறுவனத்தினரால் ஏற்பாடு செய்யப்படவிருந்த விரிவானதொரு கண்



ஆவணி-1945 இல் கிரோசிமாவில் அணுக்குண்டை வீசியபின் தரையிறங்கும் பீ-29 இராட்சத குண்டுவீச்சசு விமானம்

காட்சியாகும். இவ்விரண்டும் கிளப்பிய விவாதப்புயல் இன்னமும் அமெரிக்காவிலும், யப்பானிலும், ஏன் உலகிலுமே ஓயவில்லை. இப்போது அமெரிக்கா அணுக்குண்டினை வீச எடுத்தமுடிவுசரியா,தவறாஎன்கிறவிவாதம்எங்கும் மேலோங்குகின்றது. இது தொடர்பாக புதிய உண்மைகள், புதிய முடிவுகள், பல்வேறு ஆய்வுகளின் பயனாய் வெளிவருகின்றன. இவையெல்லாம் அமெரிக்காவை நோக்கிய குற்றச்சாட்டுக்களாக அமெரிக்கா இழைத்த மிகப் பெரிய வரலாற்று தவறாக மாறுவதால் அமெரிக்கத் தரப்பிலோபழையவரலாற்றுப்பதிவுகட்குபுதியபுதிய விளக்கங்கள் கொடுப்பதை கண்டிக்கும் வகையிலான கருத்துக்களை விதைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன.

## யப்பானியவாதம்

அமெரிக்க அஞ்சற்துறையினரால் வெளியிட உத்தேசிக்கப்பட்ட முத்திரையானது இப்பாரிய விவாதத்தின் தொடக்கமாக புயலின் மையமாக அமைந்துவிட்டது. இம்முத்திரையானது 1945 ஆம்ஆண்டுஆகஸ்ட் 6ஆம் நாள் கிரோசிமா மீது அணுக்குண்டு போடப்பட்ட போது அணுவெடிப்பு காரணமாக பரந்தெழுந்த நச்சுப்புகை மண்டலம் பல்லாயிரம் அடிக்கு வியாபித்து பாரியதொரு மேகக் கூட்டமாக தோற்றமளிக்கும் படத்தைக் கொண்டதாகவும் அதன் அடியிலோ 'போரின் முடிவினை விரைவுபடுத்தியஅணுக்குண்டுகள் ஆகஸ்ட் 1945' என்கிற வரிகளைக் கொண்டதாகவும் அமைந்தது. இப்படமானது யப்பானியர் முகத்திலே ஓங்கி அறைந்தது போலமைந்தது. யப்பானிலோ பல்வேறு தீவிர தேசியவாத அமைப்புக்கள் அமெரிக்க எதிர்ப்புணர்வைக் காட்டும் வகையில் ஆர்ப்பரிக்கத் தொடங்கின. "மனித குலம் வதைக்கப்பட்ட பயங்கர நிகழ்வொன்றை இத்தனை கொடூரமாக இதயமற்ற முறையில் எவராவது சித்தரிப்பார்களா?" என கிரோசிமாவில் உள்ள அமைதிக்கான தொல் பொருள் பேணகத்தின்(PeaceMuseum)நெறியாளர் வேதனைப்பட்டார்." இப்பாரியகாளான் போன்றபுகை மண்டலத்தின் பின்னே பல நூறு ஆயிரம் குழந்தைகள், பெண்கள் மிகப் பரிதாபகரமான முறையிலே மாய்ந்ததை அமெரிக்கர்கள் மறந்து விட்டார்களா? இவ்வணுக்குண்டு வீச்சுக்கள் என்பது வேண்டுமென்றே செய்யப்பட்ட பாரிய படுகொலைகள் அல்லவா?" என்கிறார் நாகசாகி நகரத்தின் முதல்வர். அமெரிக்க அஞ்சற் துறையினரோ" ஆண்டுக் கிரமப்படி ஒரு வரலாற்று திருப்புமுனையைக் குறிக்கவே இதனை வெளியிட்டோம். வரலாற்றின் மீது தீர்ப்பு வழங்குவது எமது நோக்கமல்ல" என்றபோதும் இதனை அவமானமடைந்த யப்பானியரால் ஏற்றுக் கொள்ளமுடியவில்லை. தமது மக்களின் மனநிலையைஇதுபெரிதும்பாதிப்பதாகயப்பானியப் பிரதமர் ரொமிச்சி முரயாபா பில்கிளின்டனுக்கு வெளிப்படுத்தினார். இப்போது கிளின்டன் இம் முத்திரை வெளிவருவதை தடுத்துவிட்டார். ஆனால் இவ்விவாதம் கிளப்பிய புயல் இன்னும் ஓயவில்லை. அதற்குக் காரணம் சிமித் சோனியன் நிறுவனத்தார் (Smith Sonian Institution) கிரோசிமாமீது குண்டு வீசியநிகழ்வு தொடர்பாக ஏற்பாடு செய்ய முனைந்த அமைதிக்கான கண் காட்சி மேலும் பலவிவாதப் புயல்களைக் கிளப்பியமையே ஆகும்..

## மூக்குடைபட்டசிமித்சோனியன்

சிமித் சோனியன் நிறுவனத்தின் ஒரு பிரிவான தேசிய வான் விண்வெளி தொல்பொருள்பேணகம்யப்பான் மீது அணுக்குண்டு போடப்பட்டதன் 50 ஆவது ஆண்டு நிறைவினை சுட்டும் முகமாக மிக வித்தியாசமான கண்காட்சியொன்றினை இவ்வாண்டு நடாத்துவதற்கு இதுவரை முயன்றது. கிரோசிமா மீது 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6 ஆம் நாளன்று வீசப்பட்ட 'சின்னப்பையன்' எனப்பட்ட12 ஆயிரம்தொன; T.N.T வெடிப்பொருளுக்கு சமமான வெடிக்கும் சக்தியைக் கொண்டிருந்த யுரேனிய அணுக் குண்டினை வீசிய B-29 போயிங் ரக இராட்சத தோற்றமுடைய (B-29, Super Fortress) விமானத்தின் சில முக்கிய பாகங்களை கண்காட்சிக்குவைக்க சிமித் சோனியன் முயன்றது. ['Enoia Gay'] என இக்குண்டுவீச்சு விமானம் பெயரிடப்பட்டிருந்தது. பாரிய இவ்விமானத்தை மிகப் பெறுமதியான நினைவுச்சின்னமாகக் கருதிய சிமித் சோனியன் நிறுவனத்தார் இப்பாரிய விமானத்தை முழுமையாக கண்காட்சிக்கென வைக்கமுடியாது என்பதால் அதன்சில முக்கிய பாகங்களை மக்கள் பார்வைக்கென வைக்க முயன்றனர். அவர்கள் முயற்சி வெற்றியளிக்கும் நிலை ஏற்பட்டிருந்தால் இவ்வாண்டு வைகாசி மாதத்தில் பொதுமக்கள் படுபாதகத்தை விளைவிக்கக் காரணமான இக்குண்டுவீச்சு விமானத்தினை கண்டிருக்க முடியும். ஆனால் கதை இப்போது மாறிவிட்டது. விமானத்தை மட்டும் பார்வைக்கு வைப்பது சிமித் சோனியனின் நோக்கமல்ல. அணுவபாயத்தின் முழுமையை மக்கள் மனதிலே இறுகப்பதிய வைக்கவேண்டும் என்பதற்காக இன்னுமொரு முயற்சியையும் இவர்கள் மேற்கொண்டனர். கிரோசிமாவிலும் நாகசாகியிலும் (நாகசாகி மீது 1945 ஆகஸ்ட் 9 ஆம் நாள் 'குண்டுப்பையன்'[FatBoy])எனப்பெயரிட்டு20 ஆயிரம் தொன் T.N.T வெடிப்பொருளின் வெடிப்புச் சக்திக்குசமமாகபுளுட்டோனியம்அணுக்குண்டை வீசிய இன்னொரு B-29 விமானமும் ஒகியோ [Ohio] விமானப்படை பேணகத்தில் மீளமைக்கப் பட்டுள்ளது) உள்ள தொல் பொருள் பேண் காட்சியகங்களிலிருந்து அணுக்குண்டுகள் வீச்சால் உயிரிழந்து போனவரின் எஞ்சிய உடமைகள் சிலவற்றைப்பெற்று அவற்றைமக்கள்பார்வைக்கு வைக்கவும் முயன்றனர். இவற்றுள் பள்ளிச் சிறாரின் மேலங்கிகள், காலணிகள் போன்ற பல பொருட்கள் உள்ளடங்கும். இவற்றுள் முக்கியமானவை மாய்ந்து போன பள்ளிப் பிள்ளையொன்றின் அரைகுறையாக எரிந்து போன பள்ளிச் சீருடை கரிக்கட்டையாக உள்ள மதிய உணவுக் கலனுமாகும். இவை சொல்லும் செய்திகள் மனித குலம்மறக்க முடியாத பட்டறிவாக வேண்டும் எனக் கருதியே இத்தகையதொரு கண்காட்சிக்கு சிமித் சோனியன் முயன்றது. ஆனால் இப்போது அவர்கள் முயற்சி இடைநடுவிலே நிறுத்தப்பட்டுவிட்டது. விழலுக்கு இறைத்த நீராகிவிட்டது இவர்கள் செயற்பாடு.

இதற்குக்காரணம்அமெரிக்க ஆட்சியாளர்காட்டிய கடும் எதிர்ப்புணர்வுகளும் போட்ட முட்டுக் கட்டைகளுமேயாகும். இது அமெரிக்காவின் பெருமைமிக்க வரலாற்றை திரிபுபடுத்தும்

*அமெரிக்கா அணுக் குண்டை வீச எடுத்த முடிவு சரியா, பிழையா என்கிற விவாதம் எங்கும் மேலோங்குகிறது. இது தொடர்பாக புதிய உண்மைகள் வரத் தொடங்குகிறது.*

இடதுசாரிகள் வேலையென அமெரிக்க வலதுசாரி குடியரசுக் கட்சியில் செல்வாக்கு மிக்க புதிய சபாநாயகரான நியுட் ஜிருசர்ச் காரமாகக் குறிப்பிட்டார். இப்போது சிமித் சோனியன்நிறுவனம் தமது விருப்பின்படி வரலாற்றினை புதுப்பித்து எழுத முடியாது எனக் குறிப்பிட்ட அமெரிக்க உயர்பீடமான செனட் அவை "இக்கண்காட்சி என்பது திரிபுபடுத்தப்பட்ட ஒரு தீங்கிழைக்கும் செயற்பாடு" என தீர்மானம் வேறு நிறைவேற்றிவிட்டது. இதேவேளைகிரோசிமாமீது குண்டு வீசும் செயற்பாட்டு செயலணிக்கு பொறுப்பானவரும் 'இனொயா கேயின்' தலைமை விமான ஓட்டியுமான தற்போது ஓய்வுபெற்ற பிரிகேடியர். ஜெனரல் ரிப்பெற்ஸ் (Brig. Gen. Tibbets) கொதித்தெழுந்தார். (இவரின் தாயாரின் பெயரைக் கொண்டே B-29 குண்டுவீச்சு விமானத்திற்கு EnoiaGayஎனப்பெயரிடப்பட்டது) "இக் கண்காட்சி மூலம் அமெரிக்க வரலாறு இழிவுபடுத்தப்படுகின்றது. அமெரிக்காவின் வரலாற்று வீரர்கள் அவமதிக்கப்படுகின்றனர்" என கண்டனம் அவர் தெரிவித்தார். இவ்வாறாகப் பல தரப்பிலிருந்தும்பலத்தகண்டனங்கள்எழவேசிமித் சோனியன் பின்வாங்கிற்று. கண்காட்சியின் தீவிரத் தன்மையை வெகுவாகக் குறைக்க முற்பட்ட இவர்கள் கண்காட்சி நடத்தும் திட்டத்தையே கைவிட்டுவிட்டதாககூறப்படுகின்றது.

## அமெரிக்கப்பொய்

இத்தகையதொரு நிலை தோன்றுவதற்குப் பின்னே மறைபொருளாக பெரும் வரலாற்று உண்மையொன்று இப்போது அம்பலமாகின்றது.

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்...

வே.பாலகுமாரன்

# திருமலை நகரினில் கடலினில் ஒரு அ



நேசியத்தலைவர் பிரபாகரனுடன் கடற் கரும்புலிகள் மேஜர் தனிகைமாறன், மேஜர் கதிரவன்

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்

கடலிலே காவியம் படைப்போம்

**SEA TIGERS**
**OF LIBERATION TIGERS**

**திருமலைத்துறைமுகத்தில் இரண்டு அதிவேக பீரங்கி கப்பல்களைத் தகர்த்து வீரசாதனை படைத்த கடற்கரும்புலிகளின் உருவப்படம் தாங்கிய ஊர்தி பவனி வருவதை படத்தில் காணலாம்**



**திருமலையில் முதலடியாய் இது இருந்திடும் – இனித்**
**தினம் தினமும் பகைவனுக்கு உயிர் கலங்கிடும்**
**உயிர் கொடுத்த கரும்புலிகள் பெயர் விளங்கிடும் – எங்கள்**
**உயர் தலைவன் வழியினிலே ஒளி பிறந்திடும்**



## திருமலையில் வீரசாதனைபடைத்த கடற்கரும்புலிகளுக்கு மக்கள் அஞ்சலி

திருமலைத் துறைமுகத்தினுள் ஊடுருவி கடற்படையினரின் இரு அதிவேக பீரங்கிக் கப்பல்களைத் தகர்த்தெறிந்து வீரசாதனை படைத்த கடற்கரும்புலிகளுக்கு தமிழீழ மக்கள் தமது அஞ்சலிகளை செலுத்தியிருந்தனர்.

இவர்களின் நினைவாக யாழ். குடாநாடு முழுவதும் சிவப்பு மஞ்சள் கொடிகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்க ப்பட்டிருந்தது. வீடுகளிலும், பொதுநிறுவனங்களிலும், முக்கிய நிலையங்களிலும் இக்கடற்கரும்புலிகளின் உருவப்படங்கள், அலங்கரிக்கப்பட்ட பந்தல்களில் வைக்கப்பட்டுதீபங்கள்ஏற்றப்பட்டது.

இந் நான்கு கடற்கரும்புலிகளின் உருவப் படங்களைத் தாங்கிய கப்பல் வடிவிலான ஊர்திகள் 'பாண்ட்' அணிவகுப்பு மரியாதையுடன் பிரதான வீதிகளுடாக பவனிவந்த போது, பெருந்திரளான மக்கள் திரண்டுநின்று அம்மாவீரர்களுக்கு மலரஞ்சலிசெலுத்தினர்.

பல இடங்களில் அஞ்சலிக்கூட்டங்களும், இவ் ஊர்திபவனியும் மூன்று, நான்கு தினங்களாக தொடர்ந்து நடைபெற்றிருந்தன.

# கடற்புலி புகுந்தது!

# திசயம் நடந்தது!

## விடுதலை உணர்வுடையீர்

கடலலையில் நடை பயிலும்
உடையணிந்த கடற்புலிகள்
படைபடையாய் அணி திரண்டு
தடை உடைத்துத் துறை புகுந்து - சிங்கள
கடற்படையின் சுடுபடகுகளை
உடைத் தெறியும் உயிரான்மாக்கள்
ஒப்பற்ற உயிராயுதங்கள் என்றும்
அழியாத காவியங்கள் இவை
கடை, தெருவில் கிடைத்திடுமோ?
விடை பகர்வீர்! விடுதலை உணர்வுடையீர்!
விடுதலையின் விடி விளக்குகளாய்
விடியலது வைர முகப்புகளாய்
உயிரதனை எரிபொருளெரிவது போல்
எரித்தெரித்து எம் நிலை உயர்த்தும்
இணையற்ற ஆத்மாக்களை - ஒவ்வொருவரும்
ஒரு கணம் நினைத்திடுவோம்!
உரிமையதை உயிர் மூச்சாய்
உயிர்களதை உலங்கூர்திகளாய்
உயிர் வாய்வை உள்வாங்கி - தமிழரது
உயிர் வாங்கும் கடற் கழுகுகளின்
உயிர் வாங்க உறுதி பூண்டவராய்
இந்து சமுத்திரத்தில் உள்ளிறங்கி
இள வயசில் சுழி ஓடி
உயிர் கொடுத்து உயிர் வாங்க
அடம் பிடிக்கும் இளம் புலிகள்

இலட்சியத்தின் இரட்சகராய்
உவர் நீருள் எரிநெருப்பை
அணையாது அணைத்திழுத்து
கடலதனில் உடல் குளித்து
கடற்படையடிக்கும் கரும்புலிகளினை
எவரும் எடை போட முடியாது?
இன்னும் சில மணியில் உயிர் பிரியும்
உயிருள்ள புலிகளுக்கு அது புரியும்
அரை நொடியும் பிந்தாமல், பிசகாமல்
அவையடித்து அவைபிரியும்
உலகம் இதை உணரும்!
உயிரனைத்தும் உடன் வியக்கும்! என்றாலும்
இவைகளை உலகம் இருட்டடிக்கும்...
எம் கடற் புலிகளுக்கு இவைபிரியம்
இவர்களிலே யார் பிரியம்
ஒளி வீசி ஒழிகின்ற உயிர் மீது
உயிர் வாழும் எவர் பிரியம்?
உயிர்மேல் பிரயமுள்ள இன்னுயிர்க்கு
உணர்விருந்தால்தான் புரியும்.
ஊருறங்கும் வேளையதில்
உணர் வெழுந்து ஆயுதமாய்
எதிரியவன் உடல் கிழிக்க
எதிர் நீச்சல் உடனடிக்கும்
படையுன்னை எவை அடிக்கும்
கடமையிலே கடற்புலிகள்
கருமமதில் கரும்புலிகள்
தருமத்தில் தமிழ்ப் புலிகளதாய்
உருவத்தில் உணர்வு கடந்தவராய்
உயிரோடு விளையாடும் உளமிக்க
உன்னத ஆத்மாக்கள்
கடல் இவர்கள் களம்
களம் இவர்கள் மனம்
மனம் இவர்கள் பலம்
பலம் படைத்த இவர்களினால்
புலம் கிடைக்கும் நிசம்
நலம் பெறுக, நம் கடற்புலிகள்
நிலம் துலங்கி நிலை கொள்ளும்
பலம் பெறுக, பலம் பெறுக

*–சிவா சின்னத்தம்பி*



தேசியத்தலைவர் பிரபாகரனுடன் கடற் கரும்புலிகள் மேஜர் மதுஷா, கப்டன் சாந்தா



### சூரயா


**சங்காய் - 11 அதிவேக பீரங்கிக்கப்பல்**

- தொடரிலக்கம் - **P** 310
- ஆக்கப்பட்டுள்ள ஊடகம் - கால் அங்குல உருக்கிரும்பு
- முழுமையான நீளம் - 127.3 அடி (38.8 மீற்)
- முழுமையான அகலம் - 17.7 அடி (5.4 மீற்)
- நீரில் அமிழும் உயரம் : 5.2 அடி (1.6 மீற்)
- அதிகூடிய வேகம் : 29 நொட்ஸ்
- முழுமையான எடை : 131 தொன்
- அதிகூடிய பயணத்தூரம் : 700 கடல் மைல் : 16 நொட்ஸ்
- என்ஜினின் எண்ணிக்கை : 02 ரைப் எல் 12, 180 டீசல்
  02 ரைப் எல் 12 - 180 Z
- என்ஜினின் வலு: 2400 குதிரை வலு (1.76 மெகா வாட்ஸ்)
  - 1820 குதிரை வலு (1.34 மெகா வாட்ஸ்)
- புறப்பலர்களின் எண்ணிக்கை: 04
- பணிபுரிவோர் தொகை: 34
- கட்டளையதிகாரியின் பதவி: லெப்.கொமாண்டர்
- பொருத்தப்பட்டுள்ள ராடார்: ஸ்கின்கெட், புருனோ
- . 825 டீ - 01 பாண்ட்
- பொருத்தப்பட்டுள்ள ஆயுதம் - சீனத்தயாரிப்பு 37 மி.மீ
  ருவின்கன்-02,
  சீனத்தயாரிப்பு 25 மி.மீ
  ருவின்கன் இரண்டு

### ரணசுறு

**சங்காய் -111 அதிவேக பீரங்கிக் கப்பல்**

- தொடரிலக்கம் - P 320
- ஆக்கப்பட்டுள்ள ஊடகம் - கால் அங்குல
  உருக்கிரும்பு
- முழுமையான நீளம் - 134.5 அடி (41 மீ)
- முழுமையான அகலம் - 17.7 அடி (5.4 மீ)
- நீரில் அமிழும் உயரம் - 5.2 அடி (1.6 மீ)
- அதிகூடிய வேகம் - 29 நொட்ஸ்
- முழுமையான எடை - 150 தொன்
- அதிகூடிய பயணத்தூரம் - 750 கடல் மைல்
- என்ஜினின் எண்ணிக்கை - 04 ரைப் எல்
  12 - 180 டீசல்
- என்ஜினின் வலு - 4800 குதிரை வலு
- புறொப்பலர்களின் எண்ணிக்கை - 4
- பணிபுரிவோர் தொகை - 28
- கட்டளையதிகாரியின் பதவி - லெப்.மொமாண்டர்
- பொருத்தப்பட்டுள்ள ராடார் - ரக்கல்
  டெக்கா 01 பாண்ட்
- பொருத்தப்பட்டுள்ள ஆயுதம் - சீனத்தயாரிப்பு 37 மி.மீ.
  ருவின்கன்-02,
  சீனத்தயாரிப்பு 14.5 மி.மீ
  ருவின்கன் -02



### இலங்கைத் தீவின் மூன்றில் ஒரு பகுதி நிலமும் மூன்றில் இரண்டு பகுதி கடலும்

# விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில்

## சிறீலங்கா சனாதிபதி பகிரங்க ஒப்புதல்

இலங்கைத்தீவின் மூன்றிலொரு பகுதி நிலப்பரப்பும், மூன்றில் இரண்டுபகுதி கடற்பரப்பும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதென சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா பகிரங்கமாக ஒப்புக் கொண்டுள்ளார்.

அத்துடன், *"தலைவர் பிரபாகரனுடன் தான் இனப்பிரச்சனை தொடர்பான விடயங்களைக் கையாளவேண்டிய கட்டாயம் உள்ளது"* எனக் கூறிய சந்திரிகா, இதன்மூலம் தமிழீழ அரசு நோக்கிய அரசுக்கு உள்ள இறைமையினை மறைமுகமாக அங்கீகரித்துள்ளார்.

மேலும், *"தமிழீழ விடுதலைப் புலிகளை 20 ஆம் நூற்றாண்டின் அதிசக்தி வாய்ந்த கரந்தடிப்படை அமைப்பு"* என ஏற்றுக் கொண்ட அவர், தாம் ஒரு முழுமையான போரிற்குப் போக விரும்பவில்லை எனவும், அப்படிப் போனாலும் அதனை நடத்துவதற்குரிய ஆளணிகள் தம்மிடம் இல்லை எனவும் கூறியதுடன், பதினொரு ஆண்டுகளாக முன்னைய அரசு தகுந்த பயிற்சியும், போரில் பக்குவமுமுடைய இராணுவமொன்றை வைத்துக் கொண்டு பயனற்ற போரொன்றைநடாத்திவந்தது எனவும் கூறியுள்ளார். இதன்மூலம், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக வெல்ல முடியாது என்பதையும் நாசுக்காக வெளிப்படுத்தியுள்ளார்.

சிறீலங்கா சனாதிபதியின் இக்கருத்துக்கள் எல்லாம், அவர் அண்மையில் இந்தியா ரூடே சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் இழையோடுகிறது. இருந்த போதிலும், சந்திரிகா பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இயலாத தனது நிலையினை மறைப்பதற்குக் கோபமான வார்த்தைப் பிரயோகங்களையும் அனுபவமற்ற ரீதியில் வெளிப்படையாகவேவெளியிட்டுள்ளார்.

மேலும், இந்திய அரசின் தலையீடு பேச்சுவார்த்தை நேரத்தில்இருந்துள்ளதென்பதை, 'ஒரு தனிமனிதன் எவ்வளவு கொடிய குற்றம் இழைத்திருப்பினும் அவரைச் சிறையில் தள்ளுவதைவிட, வடக்கின் பயங்கரவாதத்தினை ஒழிக்க ஒரு வழியைக் காண்பதுதான் முக்கியம். இதனை உணரக்கூடிய திறமையான இராசதந்திரம் இந்திய அரசிடம் உண்டு என நாம் உறுதியாக நம்புகிறோம். இந்திய அரசதரப்பிலும்இதற்கானசமிக்கைகள் இருந்தன. இந்த சமிக்கைகளின் அடிப்படையில்தான் செயற்பாடுகள் அமைந்தன' எனக் கூறியதன் மூலம் சந்திரிகா ஒப்புக்கொண்டுள்ளார். இதன் மூலம், தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்பதனை விடுத்து பயங்கரவாதத்தினை ஒழிக்க ஒருவழி என்ற அணுகுமுறையிலேயே, சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கினார் என்பதுஉறுதியாகிறது.

இதனாலேயே இதற்கு முன்பு ரூபவாகினிக்கு அளித்த செவ்வியில், தமிழ் மக்களுடைய பிரச்சினைக்குத்தான் தமிழரின் தேசிய பாதுகாப்பு அமைப்பாகிய விடுதலைப் புலிகள், தீர்வு காணமுற்படுகிறார்கள் என்ற உண்மையைத் திரித்து, விடுதலைப் புலிகள் சமாதானத்தை விரும்ப வில்லை என்பது போலவும், தமிழ்மக்கள்தான் சமாதானத்தை விரும்புகிறார்கள் என்பது போலவும் விளக்கி, தமிழ்மக்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அந்நியப்படுத்தும் போக்கில் சந்திரிகா பேசியிருந்தார்.

அத்துடன், 'விடுதலைப் புலிகள் போன்ற கரந்தடிப்படை அமைப்பொன்றுக்குஅதன்செல்வாக்கினைத் தொடர்ந்து பேணுவதற்குப் பொது மக்களது ஒத்துழைப்பு அவசியம். எனவே இந்தப் புதிய நிலைமையின் கீழ்– இந்தப் புதிய திருப்பத்தின் கீழ், இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காணமுடியுமென நாங்கள் கருதுகின்றோம். எமது அரசோ, நானோ எந்த நேரத்திலும் விடுதலைப் புலிகள் இயக்கம்,சமாதானத்தைவிரும்புகின்றதெனநினைக்கவில்லை' எனவும்கூறிய சந்திரிகா, இந்த ரூபவாகினிச் செவ்வி மூலம் தனது நோக்கு, தமிழ் மக்களையும்விடுதலைப்புலிகளையும் அந்நியப்படுத்தலாகத்தான்இருக்குமே தவிர, தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதை முன்னுரிமையாகக் கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படையாகக்கூறிவிட்டார். இதே செவ்வியில்தானோ,தனது அரசோஎந்த நேரத்திலும் இராணுவத்தின் உசார் நிலையைக் குறைக்கவில்லை எனக் கூறியதன் மூலம், தனது சமாதானத் தேவதை வேடம் ஒரு சதியின் தொடக்கமாக திகழ்ந்தது என்பதை மறைமுகமாகவெளிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு, இராணுவ வாதிகளுக்குச் செயலில் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு, உதட்டில் சமாதானக்கதை பேசியதினாலேயே மோதல் தவிர்ப்பு முறிந்தது என்ற உண்மையைஉலகு இனங்காண்பதற்குச் சந்திரிகாவின் வார்த்தைகளேசான்றாகிவிடுகிறது.

**இராணுவவாதிகளுக்குச் செயலில் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு, உதட்டில் சமாதானக்கதை பேசியதினாலேயே மோதல் தவிர்ப்பு முறிந்தது என்ற உண்மையை உலகு இனங்காண்பதற்குச் சந்திரிகாவின் வார்த்தைகளே சான்றாகி விடுகிறது.**

## பெரும்போர் ஆயத்தங்களில்..

தெரிவிக்கின்றன.

சிங்கள பௌத்த பேரினவாதிகளால் ஆயுத ஒடுக்குமுறைக்கு இலக்காகிய அரசற்ற தமிழீழ நாட்டினத்தவர்களால், தமது தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தி ஆக்கிரமிக்கப்பட்ட தமது மண்ணை மீட்பதற்காக நடாத்தப்படும் ஆயுதப் போராட்டமே, தமிழீழ விடுதலைப் போராட்டம் என்பதைத் தெற்காசிய நாடுகளின் தலைவர்கள் நன்கு உணர்ந்துள்ளனர். இவ்விடுதலைப் போராட்டம், தமிழீழத் திருநாட்டின் விடுதலை என்ற இலக்கைத்தவிர, தெற்காசிய நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்கக்கூடிய வேறெந்த விளைவுகளையும் ஏற்படுத்தாதவாறு மிக்க கவனமாக, நடுநிலைக் கொள்கையுடன் நடாத்தப்பட்டு வருகிறது என்பதும்வரலாறு. ஆயினும் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், மக்கள் மீது வான்வழித் தாக்குதல்களை நடாத்துவதற்கு சிறீலங்காவால் பயன்படுத்தப்படும் விமானங்களைச் சுட்டு வீழ்த்திய சம்பவத்தை "தெற்காசியாவின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்" என்ற ரீதியில் பிரச்சாரப்படுத்த முயன்றுள்ளமை, இந்திய மத்திய அரசின் மற்றொரு திரிபுவாத கைங்கரியமாக வுள்ளது. இந்தியாவின்மிகைப்படுத்தப்பட்ட அச்ச உணர்வின் அடிப்படையில் சில சர்வதேச நாடுகளும், தெற்காசிய நாடுகளும் கூட, குழப்பத்திற்கு உள்ளாகலாம். இத் தெளி வின்மையைச் சிறீலங்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி பிரச்சாரங்களை வேகப்படுத்தலாம். ஆயினும் இன்றுள்ள நிலையில் சர்வதேச நாடுகள் இந்தியாவினதும், சிறீலங்காவினதும் வலையில் விழக்கூடிய நிலையில் இல்லை என்பது இரு அரசுகளுக்கும் தெளிவாகத்தெரியும்.

இதற்கிடையே, விடுதலைப் புலிகள் மிகத் தெளிவான முறையில், ஏற்படுத்தப்படக் கூடிய அரசியல் தீர்வு பற்றிக் கூறியபின்னரும்இந்தியப்பிரதமர் நரசிம்மராவ், "நிலைமையின் தோற்றுவாய்பற்றிய காரணங்களையிட்டு விவாதித்தோம், புதிதாக எழுந்துள்ள சூழ்நிலைகள் பற்றியும் ஆராய்தோம். இவற்றுக்கு இலகுவான தீர்வு இருப்பதாகத் தெரியவில்லை" எனக் கூறியுள்ளார். இவரது இக்கூற்று, சிறீலங்காவின் இராணுவத் தீர்வினை நியாயப்படுத்துவதற்கான ஒரு தந்திரோபாயமாகவும், இப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணப்படுவதை ஊக்குவிக்க விரும்பும் சர்வதேச நாடுகள்,அரசசார்பற்றநிறுவனங்களைக் குழப்பத்துக்கு உள்ளாக்கும் ஒரு அணுகுமுறையாகவுமே காணப்படுகின்றது என அவதானிகள் கருதுகின்றனர்.

அதேவேளை சிறீலங்கா, விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றிபெற இந்தியாவிடம் இராணுவ உதவிகளைக் கேட்டதாகவும் முகவர்நிறுவனங்களின் செய்திகள்தெரிவிக்கின்றன.

இதுகுறித்து, இந்திய உதவி கோரப்படுமா? எனச் செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த, சிறீலங்காவின் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சரும்,பிரதி நிதியமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தன்னால் பதில் கூறமுடியாது என மறுத்துவிட்டார். வேறொரு கட்டத்தில் செய்தியாளர்கள், சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரிடம் இது குறித்து வினவிய போதும், அவரும் இரகசியம் காப்பது அவசியம் எனக் கூறி பதிலளிக்க மறுத்துவிட்டார்.

இந்தியாவால் தங்களுக்கு எவ்வளவு தூரம் உதவமுடியுமென சந்திரிகா, நரசிம்மராவிடம் கேட்டிருப்பதாகச் செய்தித்தாள்கள்தெரிவிக்கின்றன.

இந்தியா கடல் வலயப் பாதுகாப்பு வழங்கக் கூடுமெனவும், மற்றும் உலங்குவானூர்திகள் விநியோகம் போன்ற உதவிகளை வழங்கலாம் எனவும்இராசதந்திரிகள்ஊகிக்கின்றனர். மேற்கத்திய இராசதந்திரி ஒருவர் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், கடற்பாதுகாப்பை விஸ்தரித்து விடுதலைப் புலிகளுக்கான வழங்கல்களைத் தடைசெய்வது இந்தியாவின் முதல் நடவடிக்கையாக அமையலாம் எனக் கூறியுள்ளார். இவ் இராசதந்திரி இந்திய உதவி நிச்சயமாக இலங்கைக்குக் கிட்டும் எனவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இதற்கிடையே, சிறீலங்கா இராணுவம் கொழும்பு, பனாகொடை அனுராதபுரம், கண்டி, குருநாகலை, காலி, மாத்தறை, பொலநறுவை, தியத்தலாவை, அம்பாறை, இரத்தினபுரி, வவுனியா, புத்தளம், கேகாலை ஆகிய இடங்களில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. பத்தாயிரம் பேரை புதிதாக ஆளணிப்படையில் சேர்ப்பதென்பது சிறீலங்காவின்இலக்கு.

அனுருத்த ரத்வத்த சிறீலங்கா பாராளுமன்றத்தில், தாக்குவதற்கான திட்டம் தயார்படுத்தப்பட்டு விட்டதாகவும் இரகசியமாகவுள்ள இத்திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும் பொழுது விடுதலைப் புலிகளுக்குத் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் எனவும் சூளுரைத்துள்ளார்.

சிறீலங்கா பெருமளவிலான பாரிய போரொன்றுக்குத் தயாராகி வருவதை உணரக்கூடியதாக உள்ளதெனவும், எந்நேரமும் அது தாக்குதலைத் தொடங்கலாம் எனவும் இராணுவ அவதானிகள்கருதுகின்றனர்.

## தமிழர்களை ஐந்துசதத்துக்கும் கணக்கெடுக்கமாட்டேன்

தொட்டிலங்காக் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட சிங்கள அரசியல்வாதிகளில் ஒருவரான ஓசி அபயகுணசேகர, இறப்பதற்கு முன் செய்தித்தாள் ஒன்றிக்கு அளித்த செவ்வியில், 'சேர் ஐவர். ஜெனிங்சினால் அமைக்கப்பட்ட அரசியல் அமைப்பில் சிறுபான்மையோருக்கான 29ஆவது சரத்துக் காணப்பட்டது. ஆனால் அதனை 1972இல்பதவிக்கு வந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான கூட்டரசு இல்லாமல் செய்துவிட்டது. அன்று அந்த 29 ஆவது சரத்து இருந்ததினாலேயே அரசிற்கு எதிரான கோடீஸ்வரன் வழக்கை தமிழர்களால் வெல்ல முடிந்தது. இன்று சிறுபான்மையினர் ஆதரவின்றி சனாதிபதி வேட்பாளர் ஒருவர் சனாதிபதியாக முடியாது.

முன்னர் ஒருதடவை நானும் விஜயகுமாரதுங்கா உட்பட 40 பேர் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளோடு கதைத்தபோது சந்திரிகா, யாழ்ப்பாணம் வரவில்லை. 'நான் யாழ்ப்பாணம் வரமாட்டேன். தமிழ் மக்களை ஐந்து சதத்திற்கும் கணக்கெடுக்க மாட்டேன். அங்குபோய் என்னால் சாக முடியாது' எனக் கூறினார் என்றுஅவர்விளக்கியுள்ளார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டி,யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து நேரடியாகவே தமிழ் மக்களின் இன்னல்களை அவதானித்துச் சென்ற விஜயகுமாரதுங்கா, உயிருடன் இருக்கும்போதே இவ்வாறு கூறிய சந்திரிகா,சிங்களபௌத்தபேரினவாதிகளின் குகைக்குள் இருந்துகொண்டு இனப்பிரச்சினையைத் தீர்த்து, தமிழ்மக்களின் துன்பங்களை துடைப்பார் என்பதைஎவ்வாறுஎதிர்பார்க்கமுடியும்?

## திருமலையில் தமிழ் ஊழியர்கள் திட்டமிட்டு இடமாற்றம்

திருகோணமலைநகரிலுள்ள அரசபொது வைத்தியசாலை, கச்சேரி ஆகிய இடங்களிற் கடமையாற்றிய தமிழ் ஊழியர்கள் இடமாற்றப்பட்டு, சிங்கள ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால் அங்கு வாழும் தமிழ்மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருதாகத் திருகோணமலை நகரிலிருந்து கிடைக்கும்தகவல்கள்தெரிவிக்கின்றன.




இந்த இரவு விடியப்போகுதெண்டு நினைச்சாலே ஒரே சந்தோசமாயக் கிடக்குது. இரவும் ஒரே பால்வெளிச்சத்தோடை நிலாவிண்டை ஒளித்துளியைத் தெளிச்சுக்கொண்டேயிருக்கு. எனக்கு எப்பவும்இரவுதான்விருப்பம்.நாளைக்குப்பறுவம். இளங்கலைஞர் மண்டபத்திலை பௌர்ணமி இசையரங்கு. அதிலை நான்… ம்கும்… நான் சொல்லமாட்டன். நீங்கள்தானை நாளைக்குப் பார்க்கப் போறீங்கள் பார்த்துத் தெரிஞ்சுகொள்ளுங்கோ.அப்பதான்தெரியும்.

நான் முந்தி வீட்டிலையிருக்கிற காலத்திலையெண்டா இப்பிடித்தான் நிலவைப் பாத்துக் கொண்டேயிருப்பன். என்ன ஆசையாயிருக்கும். மெல்லிசான நிலாவெளிச்சத்திலை கடலைப் பாத்துக்கொண்டிருந்தால், எனக்கு பாரதீன்ரை 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' தான் ஞாபகத்துக்குவரும். அந்த நிலவும் கடலுந்தான் எங்கட ஊருக்கு உயிர்ப்பூட்டிக்கொண்டிருந்தது. அப்படியே இருந்திருக்கலாம். அதுதான் நல்லது. கடலுக்குத் தோணியிலை அப்புவும் அம்மானுமா மீன்பிடிக்கப்போற நேரத்திலை கடலோரமா நிண்டு அந்த அமைதியான பொழுதிலை இந்தக் குழலை வாசிச்சால்,கிடைக்கிறசந்தோசத்தை,அமைதியை என்னவெண்டு சொல்லுறது? அது சந்தோசமோ? துக்கமோ? ஒண்டுமே தெரியாது. தூரத்திலை 'ஏலேலோ ஐலசா' குரல் எழும்பித் தாழ, ஓரமா காத்து மெல்லிசா வீச, பக்கத்திலை கற்பாறையிலை சாஞ்சுநிண்டு, மென்மையா இதயத்தைத் தடவுறமாதிரி ஊதினால், அதோடை சேர்ந்து ஓடிவந்து அடிக்கிற அலையும் விநோதமாயிருக்க, அந்த அமைதியைக் கறுப்போடை சேர்ந்த பால்நீல வெளிச்சத்தை எப்படிச் சொல்லுறது? சொல்லவேயேலாது.அப்ப ஒரு நேரத்திலை,இப்பிடி வருமெண்டு நான் யோசிச்சதேயில்லை. ஆனால்,

நிலவு நல்லதுதான் ஆனால் அடிபாட்டுக்குப் போகேக் குள்ள நிலவு இல்லாட்டிக் குத் தான் நல்லது. எனக்கு இப்போ நன்கு விளங்கியது

ஆனால்… அண்டைக்குப் படகோடைபோன எங்கடையாக்கள் நேவீற்றை ஆப்பிட்டுச் சாகேக்குள்ளை…அந்தக் கடல் ஆகோரமாக் கத்திக் கதறேக்குள்ளை…

எனக்கு குழலூத வேணும்போலை கிடக்குது. மெல்ல என்ரை யூனிபோம் பொக்கற்றுக்குள்ளை கையை வைச்சுப் பாக்கிறன். அப்பிடியே பத்திரமாக் கிடக்குது. மெல்ல, என்ரை துவக்குக்கு நான் குடுக்கிற மதிப்போடை கவனமா எடுத்துத்தடவுறன். கண்ணெல்லாம் கலங்கி வாயிலை உப்புக் கரிக்குது. மெல்லப் பக்கத்து வேப்பம் மரத்தோடை சாஞ்சு ஆறுதலா வாசிக்கத் தொடங்குறன். வீசின காத்துலவேப்பம்பூவாசம் நல்லாமணக்குது. இந்த வாசம்தான் எனக்கு நல்ல விருப்பம். பள்ளிக்கூடத்திலைதான் எத்தனை பெரிய வேம்புகள் நிக்குது. அங்கை படிக்கிற நேரமும் விளையாடுற நேரமும் எவ்வளவு துடியாட்டமாயிருக்கும். நான் எப்பவும் வகுப்பிலை முதல்தான். அம்மாவும் இல்லாத எனக்கு என்னைப்படிக்க வைக்கவெண்டு பனிக்குளிருக்கையும் அப்பு கடலுக்குப்போய் மீன் பிடிச்சுக்கொண்டுவர, நான் நல்லாப்படிக்காட்டிப்பிறகென்ன?

ரீச்சர் மாரிட்டையும் எனக்கு நல்லபேர்தான். சின்னனிலையே நான் எங்கையாலும் ஓட்டை கிடக்கிற மரக்குழலுகளை எடுத்துவைச்சு ஊதிக்கொண்டிருப்பன். அப்பவே கனகு அம்மான் சொன்னவர்: நீ எதிர்காலத்திலை பெரிய குழல் மேதையா வருவாயெண்டு. நான் அப்பவெல்லாம் பெரிய மனுசன் மாதிரிக் கொலரை உயர்த்திக்கொண்டு திரிஞ்சன். அம்மா இல்லாமல் மூக்குவழிய வழியத் திரிஞ்ச நான் ஒரு சீலைத்துண்டை சதுரமாய் வெட்டி லேஞ்சியாக்கி மூக்கை நல்லாத் துடைச்சுக்கொண்டன். பெரிய வித்துவான் மாதிரிக் கனவு கண்டன். அதுக்குப் பிறகுதான் கடற்கரையில அப்பு மீன்பிடிக்கப்போற நேரம் கடலுக்குப்போய் எப்பவோ செத்துப்போன என்ரை அம்மாவைக் கூப்பிட்டுப் பாடிக்கொண்டிருப்பன். அம்மா… அம்மா… எண்ட உருவம் இப்பவும் என்ரை கண்ணுக்குள்ளயே நிக்குது…

இப்படித்தான் எனக்குக் குழலிலை விருப்பம் வந்தது. பள்ளிக்கூட மேடையிலை நான் வாசிக்காத நிகழ்ச்சில்லை. கேக்காத கரகோசம் இல்லை. விளையாட்டுப் போட்டியளெண்டால் எத்தினை பரிசுகள் தட்டியிருப்பன். "கமோன், கமோன்" எண்டு எத்தினை கைகள் எனக்காகத் தட்டிக் களைச்சிருக்கும் மாலைப் பொழுதிலை வெயில்சாயுற மெல்லிய நேரத்திலை நடக்கிற பி. டி. சத்தம் அந்த 'லெப்ட்றைட்' இன்னும் என்ரை காதுக்குள்ளைகேக்குது.

ஆ… என்ன சொல்லி என்னத்துக்கு வந்திட்டன். வேறையொண்டுமில்லை எனக்கு முந்தின வாழ்க்கை சந்தோசமா? துக்கமா? என்னவெண்டே சொல்லேலாத அமைதியாய் போச்சுது. அந்த அமைதியிலையேஎனக்குஎப்பவும்விருப்பம்.அந்த ஊர் தந்த சந்தோசங்களைச் சொல்லிமாளாது. நிரந்தரமா உங்களைப்போலவே இன்னும் படிக்கவும் – விளையாடவும் – குழல் வாசிக்கவும்தான் எனக்கு விருப்பம். ஆனால் அந்த நிகழ்ச்சி என்ரை மனசிலை பெரிய தாக்கமாய் – வடுவாய்பதிஞ்சுபோச்சு.

அம்மா இல்லாத குறை தெரியாம என்னை வளர்த்து ஆளாக்கி எனக்காச் சந்தோசப்பட்டு, துக்கப்பட்டு, கடலே சீவியமாய் இருந்த அப்புவை அவங்கள் கொல்லேக்குள்ளை என்ரை ஆசையெல்லாம் அடங்கிப்போச்சு. இப்படித்தானை இப்ப எல்லா இடமும் நடக்குது: பிணவாடையோடை வீசின காத்து எனக்கு மெல்லமா சொல்லிச்சு. ஊரெல்லாம் ஓடேக்குள்ளை நானும் என்ரை சந்தோசங்களையும் துக்கங்களையும் பகிர்ந்து, என்ரை பள்ளிக்கூட நினைவுகளையும் எதிர்காலக் கனவுகளையும் ரகசியமாக் காதோடு காதாய் அறிஞ்சுவைச்சிருந்த என்ரை புல்லாங்குழல் காட்டுவழியிலை தவறிப்போச்சு. அதோடை என்ரை கனவுகள் சிதற தங்கச்சியைப் பொறுப்பான இடத்திலை விட்டுட்டு, நல்லா யோசிச்சுப் பாசறைக்குப் போனன். என்ரை நெஞ்சிலிருந்த வெறிக்குத் தீனியாகப் பயங்கரமா பயிற்சிகள்செய்து, அடிபாடுகளிலை கலந்து கொண்டு, என்ரை கனவுகளை மறந்து, ஏக்கங்களைத் துறந்து மண்ணுக்காகவே என்னைத் தியாகம் செய்தன். இடையிலை என்ரை வெள்ளைத் தங்கச்சி கண்ணுக்குள்ளை வருவாள். "எப்ப அண்ணா வருவாய்" எண்டு அவள் கேப்பாள். 'நான் வருவனடி தமிழீழம் கிடைச்சாப்பிறகு'. செல்லமாய் நினைக்கேக்குள்ளை கண்ணெல்லாம் நிரம்பித் தளும்பிப்போகும். அவள் நல்லாயிருக்க வேணுமெண்டு மனசு வாழ்த்தும். எங்கையிருந்தாலும்அவள்நல்லாயிருக்கட்டுக்கும்.

வேப்பங்காத்து வாசமாய் வீசுது மெல்ல, மெல்ல. இழைஞ்சிழைஞ்சு என்ரை இதயத்திண்டை புண்ணைத் தடவுற மாதிரிக் குழல் ஒலிக்குது. இதிலை எனக்கு நல்ல விருப்பம். இயக்கத்திலை சேர்ந்தவுடனை என்ரை மனசின்ரை அடி ஓரத்திலையிருந்த புல்லாங்குழல் ஆசையையும் நான் புதைச்சுப்போட்டன்.ஆனால் கபாலி அண்ணா கண்டுபிடிச்சிட்டார். இப்பிடித்தான் ஒரு நாள் இரவிலை நிலவைப் பார்த்துக்கொண்டு நிண்டநேரம் அவர் வந்தார். என்னையே அவர் பாத்துக்கொண்டு நிண்டார். எனக்கெண்டா ஒண்டும் விளங்கேல்லை. என்ன கதைக்கிற தெண்டும்தெரியேல்லை.

"நிலவுஆசையாக்கிடக்கெல்லோ"

நான்தான் சொன்னன். அவர் சிரிச்சார் பிறகு சொன்னார்.

"நிலவு நல்லதுதான். ஆனால் அடிபாட்டுக்குப் போகேக்குள்ளை நிலவு இல்லாட்டிக்குத்தான் நல்லம்."

எனக்கும் விளங்கிச்சுது. கபாலி அண்ணா என்னமாச் சொன்னார். அவர் என்ன சொன்னாலும் அதிலை ஒரு வடிவு இருக்கும். அவரை மாதிரி வடிவாப்பேசஅவர்ஒருதராலைதான்ஏலும்.

அந்த நிலவும் அதைச் சுத்திக் கோடிக்கணக்கிலை ஒளி வீசிற நட்சத்திரங்களும் என்ன கருத்தைச் சொல்லுது? எனக்கெண்டால் தலைவரைப்போலை அந்த நிலவும் மற்றப் போராளிகளைப்போலை அந்த நட்சத்திரங்களும் இருக்கிறதாய்த் தெரியும். உங்களுக்கெப்பிடியோ? தெரியாது. சிலவேளையளிலை யோசிப்பன். அந்த நட்சத்திரங்களைப்போலை பல கோடிக் கணக்கிலை போராளிகளுமிருந்தால், எவ்வளது நல்லது.

மேலை யோசிக்கவிடாமல் கபாலி அண்ணாதான் கேட்டார்.

"இந்த நிலவுக்குள்ளை குழலூதினால், இன்னும் நல்லாயிருக்கும்.அப்பிடித்தானைமதி".

நான் திகைச்சுப்போய் அவரைப் பாத்தன். கம்சத்வனிபோலை மங்களமாய் உள்ளுக்கை உற்சாகம்புரண்டுவழிஞ்சுது.

அவர் என்னையே சில நிமிசங்கள் பார்த்தார். பிறகு பொக்கற்றுக்கை கைவைச்சு, ஒரு குழலை எடுத்துத்தந்தார்.வாசிக்கச்சொன்னார்.

வாங்கினன்… வாங்கி வாயிலை வைச்சன். எப்பவோ முடிஞ்சுபோன உறவாய்க் கருதியிருக்கேக்குள்ளை, இல்லை நான் உன்னைவிட்டுப் போகமாட்டான் எண்டு சொல்லிக்கொண்டு ஓடிவந்து ஒட்டின உறவைப்போலை குழல் எனக்குள்ளை ரகசியம் பேசிச்சுது. செத்துப்போன அம்மாவும் அப்புவும் திரும்பி வந்ததுபோலைச் சந்தோசம் குமிழ் குமிழா ஓடிச்சுது. எப்பவோ ஒருக்கால் பள்ளிக்கூடத்திலை விளையாடேக்குள்ளையும் படிக்கேக்குள்ளயுமிருந்த சந்தோசம்… பூநகரியிலை தவளைப் பாய்ச்சலிலைஊரிப்பட்டஆயுதம்அள்ளேக்குள்ளை வந்த சந்தோசம். அதைவிடவும் இனித்தமிழீழம் கிடைக்கேக்குள்ளை எந்தளவுக்கு சந்தோசம் வருமோ,அந்தளவுசந்தோசம்எனக்குஉங்களுக்கு நம்பிக்கையிருக்கோ இல்லையோ ஆனால்,எனக்கு நல்ல நம்பிக்கையிருக்கு. தமிழீழம் பிறக்கத்ததான் போகுது.

மெல்லமா உள்ள துயரங்களையும் சந்தோசங்களையும் கூட்டி வாசிச்சவுடனை கபாலி அண்ணரநல்லாசந்தோசப்பட்டார்.

"இவ்வளவு திறமையை வைச்சுக்கொண்டு, பேசாமலிருந்திட்டீங்களேமதி".

அதுக்குப் பிறகு அவர் அந்தக் குழலை எனக்கெண்டே தந்திட்டுப்போட்டார். அடுத்த நாள் வரேக்குள்ளை எனக்கு ஒரு குழல் மாஸ்டரையும் ஒழுங்கு பண்ணிக்கொண்டு வந்தார். நானும் அந்த மாஸ்டரிட்டை நல்லாக் கேட்டு, விளங்கி, சாதகம் பண்ணிக்கொண்டன். இப்ப… இப்ப நாளைக்கு அரங்கேற்றம்செய்யிறநிலைக்குவந்திட்டன்.

இண்டைக்கு விடியவும் கபாலி அண்ணா வந்திருந்தார். நான் அவரைக் கையெடுத்துக் கும்பிட்டன். என்ரை நிலைமைக்கு அவர்தானை காரணம்.

"போடாவிசரா" அவர்செல்லமாய்க்கோபித்தார்.

புல்லாங்குழல் அழுதது! புரிந்துகொள்ளவே மாட்டீர்களா? அறியாமைத் துயில்களை த்து மக்களை எழுப்பவென்று புல்லாங் குழல் பூபாளம் பாடியது.

"உன்னை ஒரு படம் எடுக்கவேணும் குழலோடை… ஈழநாதத்திலைபோடுறதுக்கு…"

அவர்சொன்னார்.

"நான் செத்ததுக்குப் பிறகு என்ரை படம் ஈழநாதத்திலை வருந்தானை பிறகென்னத்துக்கிப்ப…"

நான் மறுப்பினன்.உண்மையாகவே எனக்குப் படம் போடுறது விருப்பமில்லை. நீங்களெல்லாம் நாளைக்கு என்ரை குழலைக் கேக்க வருவீங்கள் தானை. பிறகேன் பேப்பரிலை படம்…? என்ரை குழலிசையைக் கேட்டு அதைப் புரிஞ்சு கொண்டால், அதிலையிருக்கிற ஏக்கத்தையும் எதிர்பார்ப்புக்களையும் விளங்கிக்கொண்டால் அதுவே காணும். இந்தப் போராட்டம் உங்களுக்காகவெண்டும், நானும் என்னைப்போல மற்றப் புலிகளும் உங்களுக்காக இழந்துவந்த சந்தோசங்களையும் இந்தக் குழல் சொல்லும். மெல்லமா, உங்கட காதோடை, காதாய் ரகசியம் பேசும். என்ரை பூபாளத்தாலை நீங்கள் அறியாமையெண்ணுற துயில் கலைஞ்சு எழும்புங்கோ. வேறை ஒண்டுமில்லை. நீங்கள் புரிஞ்சுகொள்ளுவீங்கள் தானை. நாளைக்கு நான் புதுசாப் பிறக்கப்போறன். எனக்கு வாழ்த்துச் சொல்லுங்கோவன்.

இளங்கலைஞர் மண்டபம் நிரம்பி வழிந்தது. வாசலில் வரவேற்புப் பெண்கள் இனிதான முகத்தோடு வரவேற்றார்கள் உள்ளே அமுதகானமாய் இசைவெள்ளம் பெருகத் தொடங்கியிருந்தது. துய்ர நுரைவழிய என்றோ ஒரு காலத்தில் பஞ்சுப் பாதத்தோடு, தான் இந்த மண்ணில் பிறந்ததையும் ஈரவிழி திறந்து அம்மாவைத் தேடியதையும், குழல் பாடியது. கடற்கரையில் நின்று, சிப்பி பொறுக்கி அப்புவுக்குக் காத்திருந்ததையும்,பள்ளிக்கூடத்தில் ஆனந்தமாய் விளையாடியதையும் ஆயிரம் கமோன்களுக்காய் நீளமாய்க் காலடிவைத்து, பற்களை இறுகக்கடித்து ஓடியதையும், வேம்போடு சாய்ந்திருந்து, அந்தப் பள்ளிக்கூட அழகைப் பருகியதையும், அப்புவிற்கான காத்திருப்பு ஒருநாள் தொய்ந்துபோய்த் துவண்டதையும், தன்னைப்போலவே அங்கு தனித்திருக்கும்



தொடர்ச்சி 4 ஆம் பக்கம்…

# ஜேர்மனியில் மேதினம்

யேர்மனியில் கடந்த சில ஆண்டுகளாக தமிழீழவிடுதலைப்புலிகள்,தொழிலாளர் தினமான மே தினத்தைக் கொண்டாடி வருவது தெரிந்ததே. இம்முறை இடம்பெற்ற ஊர்வலமானது, தமிழீழத்தின் வெற்றித்தின ஊர்வலமாக அமைந்ததெனலாம். சிறீலங்கா அரசு மேதினத்தைக் கொண்டாடப் பயந்து துக்கதினமாக்கி இருண்டிருக்க, உலகெங்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மேதின ஊர்வலங்கள் புதுமெருகுடன், வெற்றிகரமாக நடைபெற்றன.

யேர்மனியின் மத்திய மாநிலமான நோர்த்றைன் வெஸ்பாடனின் தலைநகரான டுசுடோவ் நகரில், இம்முறை தமிழீழ விடுதலைப் புலிகள் உலக தொழிலாளர் தினமான மேதினத்தைக் கொண்டாடி, தமிழீழத்தின் பங்கை நிலைநிறுத்தினார்கள். யேர்மனியின் தொழிற்சங்க அமைப்புக்கள், மற்றும் விடுதலை அமைப்புக்களுடன் இணைந்து இந்த ஊர்வலம் நடாத்தப்பட்டது. இதில் 2000க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் கலந்து கொண்டமையால், ஊர்வலம் மிகக்களைகட்டியிருந்தது.



ஊர்வலம் முழுமைப்பட்டதற்கு, தமிழீழத்தவர்களின் பங்கே கூடியதாகமிருந்துள்ளதென 'கம்' மாநில பிரதான செய்தியாளர் ஒருவர் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டதுடன், அடுத்த ஆண்டும் இங்கே ஊர்வலம் நடத்துவீர்களா? என மிக ஆவலுடன் கேட்டார். இதற்குக் காரணம் அந்த ஊர்வலத்தில் சென்ற ஊர்திகளின் சித்தரிப்புக்களும்,அதில்பங்குகொண்ட மக்களின்வெளிப்பாடுகளுமே.

மேதின ஊர்வலமானது, தமிழீழ விடுதலைப்புலிகளின்பெயரைத்தாங்கிய சேலையும்,அதன் இருபுறமும்தமிழீழத் தேசியக்கொடிகள் தாங்கியவர்களும் முன்செல்ல, தமிழீழத் தேசியத் தலைவரின் படங்களைத் தாங்கிய பதாதைகள் பலராலும் எடுத்துச் செல்லப்பட, மாணவ மாணவியர் காவடியும், கரகமும் ஆடி எங்கள் பாரம்பரிய கலையை வெளிப்படுத்திச் சென்றனர்.

அதனைத் தொடர்ந்து யேர்மனியில் உள்ளதமிழ்மாணவர்அமைப்பு,உலகத் தமிழர் இயக்கம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், கலை பண்பாட்டுக் கழகம், செஞ்சோலை அமைப்பு, காந்தரூபன் அறிவுச்சோலை அமைப்பு என்பனவற்றைச் சேர்ந்தோர் தங்கள், தங்கள் பெயர்களைத் தாங்கிய பதாதைகளுடன் சென்றனர். இந்த அமைப்புக்களினால் செய்யப்பட்ட ஊர்திகள், அவர்களைத் தொடர்ந்துசென்றன.

விமானக்குண்டு வீச்சுக்களால் பாதிக்கப்பட்ட வீட்டின் தோற்றம், அதனால் மரணித்த மக்கள், பாடசாலை வகுப்புக்கள் மரநிழலிலே நடைபெறுவதைச் சித்தரிக்கும் காட்சி, போக்குவரத்திற்காக மக்கள் மாட்டுவண்டிகளைப் பயன்படுத்துவது,தமிழீழத்தின்பிரதான தொழில்களான விவசாயம், மீன்பிடி, மரவேலை இவைகளுடன் நாங்கள் விஞ்ஞானத்திலும் ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புக்களிலும் சளைத்தவர்களல்ல என்பதனைச் சித்தரிக்கும் காட்சி, சிங்கள இராணுவத்தால் தமிழ்ப் பெண்மணி துன்புறுத்தப்படும் காட்சி என்பன ஊர்திகளில் சித்தரிக்கப்பட்டிருந்தன. இவைகளெல்லாம் இன்றைய தமிழீழத்தின் நிலையை யேர்மனிய மக்களுக்குச் சிறப்பாகப் புரியவைத்தன.

இவைகளைப்பார்த்தமக்கள்பலர்ஆர்வமேலீட்டினால் விளக்கங்களைக் கேட்டு தெளிவுபட்டுநிலைமைகளைவிளங்கிக் கொண்டனர்.

ஊர்வலத்தில் "தமிழீழத்தை அங்கீகரியுங்கள்","தமிழர்சுயநிர்ணயஉரிமையை அங்கீகரியுங்கள்", "மேற்குலக நாடுகளே சிறீலங்கா அரசிற்கு உதவிவழங்கி, தமிழர்களைக் கொல்லாதீர்" போன்ற வாக்கியங்கள்பொறிக்கப்பட்டிருந்தன.

நீண்டநேரம் நடைபெற்ற ஊர்வலத்தில், தமிழீழ மக்களின் விடுதலை உணர்வு பொங்கிய புரட்சிகரமான கோரிக்கை ஒலிகள்அலைபாய்ந்தன."எங்கள்தமிழ்த் தேசியத் தலைவர் பிரபாகரன்", "தமிழீழத்தை அங்கீகரியுங்கள்" என்ற கோரிக்கைஒலிகள்வானைப்பிளந்தன.

# நிலையான நினைவாகிச்..

சமநேரத்திலேயே வீரர்களை நகர்த்திச் செல்லும் திறமை— பார்ப்பவர்களை அதிசயிக்க வைக்கும். தொய்ந்து கொண்டிருக்கும் சண்டைக்குள் அவன் புகுந்தால், விடுதலைப் புலிகள் பிய்த்துக்கொண்டு பாய்வார்கள், 'வோக்கி'யில் அவனது குரலைக் கேட்டாலே, அவர்களுக்குள் புதுத் தெம்பு புகுந்து விளையாடும். மூக்கென்றால் மூக்கு, கண்ணென்றால் கண், நெஞ்சென்றால் நெஞ்சு, சொல்லிச் சுடுவான்லக்ஸ்மணன்–மில்லிமீற்றரும் விலகாது.நம்பிவைத்திருந்த 'ஜீ.திறீ'யும் அவனுக்குத் துரோகமிழைத்தது கிடையாது—அவனொரு அசகாய சூரன்.

தளபதிகருணாவின்நேரடிக்கவனிப்பின் கீழிருந்த பிரத்தியேக தாக்குதலணியின் கொமாண்டராக லக்ஸ்மணன் நியமிக்கப்பட்டிருந்தான். மட்டு–அம்பாறை மாவட்டப் படையணியில் இவன் ஒரு நம்பிக்கை நட்சத்திரம், அங்கு எங்கு போரிட்டாலும் சரி லக்ஸ்மணன் இல்லாமல் அந்தப் படையணி சண்டையிட்டதேயில்லை, அவனை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்கலாம், எப்பேர்ப்பட்ட தாக்குதலுக்கும் திட்டமிடலாம். "பொம்மரண்ணரின் குறுாப் இறங்கிறது எந்தப் பக்கம்...? என்பதை அறிய தாக்குதல்திட்ட வரைபடத்தைச்சுற்றிப் போராளிகள் ஆவலாய் நிற்பது வழமை. எதிரியின்பலமானஅரணென்றுகருதும் மிகவும் இறுக்கமான ஒரு பகுதி, லக்ஸ்மணனின் அணிக்கு ஒதுக்கப்படும், திட்டம் செயல் வடிவம் பெறும்போது,முதலில் விழும் பகுதியும் அதுவாகத் தானிருக்கும். எங்களுக்கு சிறிலங்காவின் 'பொம்மரால்' வான்வழியால் மட்டும்தான் பிரச்சினை. பகைவனுக்கோ, எங்கள் 'பொம்மரால்' கால்வைத்த இடமெல்லாம் பிரச்சினை. அவனது, பேரைக் கேட்டாலே ஒரு கலக்கம், 'வோக்கி'யில் குரல் கேட்டாலே நடுக்கம், எதிரிக்கு அவனென்றால் நடுக்கத்தோடு காய்ச்சல். இது உண்மை,வெறும்புகழ்ச்சியில்லை.

உன்னிச்சையில் இடர்பாட்டுக்குள் சிக்கிய ஒரு பலமுனைத் தாக்குதல். மேஜர் லத்தீப்போடு இன்னும் சிலரை, எதிரியின் எல்.எம்.ஜி ஒன்று வீழ்த்திற்று. அந்தமுனையில் வியூகம் குலைந்தது, சண்டை குழம்பியது, வீரர் தடுமாறிய நேரம்,அந்த எல்.எம்.ஜியின் நிறுத்தமற்ற கதறல் முழுத்தாக்குதலையுமே பிசகிவிடச் செய்யக் கூடிய இக்கட்டான தருணம். பொருத்தமானவனாகத் தேவைப்பட்டான், இன்னொரு முனையில் நின்ற லக்ஸ்மணன். எல்.எம்.ஜி அரணுக்கு நேரெதிராக ஒரு அணியை இறக்கிக் கவனத்தைத் திசைதிருப்பிவிட்டு, எதிரியின் பார்வையில் படாமல் தூரத்தால் வளைந்து நகர்ந்து, அந்த அரணைப் பின்பக்கத்தால் நெருங்கி பிடரியில் தாக்கினான். அந்த எல்.எம்.ஜி விடுதலைப் புலிகளின் சார்பாகத் திசைமாறிய பின்னர்–வெற்றியும் விடுதலைப் புலிகளின் கைகளுக்கே வந்தது.

முதலாவது ஈழப்போரில் பிரசித்திபெற்ற வடமராட்சித் தாக்குதல் – அப்போது மட்டக்களப்பிலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு படையணியில் அவன் சாதாரண போர் வீரனாகப் பங்கேற்றான்.இரண்டாவது ஈழப்போரில் சரித்திரம் படைத்தது பூநகரித் தாக்குதல்–இப்போது மட்டக்களப்பிலிருந்து பங்கேற்ற ஒரு படையணியில், ஒரு பகுதிக்குப் பொறுப்பாக லக்ஸ்மணன் படைநகர்த்தினான்.

நாகதேவன்துறை இறங்கு தளத்தை கடற்புலிவீரர்கள்வளைத்துக்கொள்ள– ஞானிமடம் முகாமையும், அதற்கு அரணாய் அமைக்கப்பட்டிருந்த காவலரண் தொகுதிகளையும் உள்ளடக்கிய – கடற்படைத் தளத்தை மட்டக்களப்புப் படையணி முற்றுகையிட்டது.

தளத்தின் கிழக்குப் பாதுகாப்பு வியூகத்தில், கறுக்காய்த் தீவுப்பகுதி முன்னணிக் காவலரண் வரிசையைத் தகர்த்தெறிந்து, பாதை திறந்து, ஞானிமடம்முகாமை இந்தப் பக்கத்தால் தாக்க வேண்டியது லக்ஸ்மணனின் தாக்குதற்பிரிவுக்குரியபணி.

கிழக்குப் பகுதியால் இவர்கள் முகாமை நெருங்கும் அதேநேரத்தில்– தளத்தினது தெற்குப் பகுதியில்– பூநகரியில் இருந்துவரும் பிரதான வீதியோரக் காவலரண்களை உடைத்துக்கொண்டு உள்நுழைய வேண்டிய இன்னொரு தாக்குதற் பிரிவு சிக்கல்பட்டுவிட்டது.

தென்பகுதியில் எதிரி பலத்த எதிர்ப்பைக் காட்டியதால்,அந்த அணி உட்புகுவது கைகூடவில்லை. சண்டை நீள நீள அணி சேதப்பட்டுக் கொண்டேயிருந்தது, சேதப்பட்டுக் கொண்டேயிருக்க அணி பலவீனமாகிக் கொண்டே போனது. குறிப்பிட்ட நேரத்தில் அந்த அணி லக்ஸ்மணனின் தாக்குதற் பிரிவிற்குத் துணையாக வந்து சேராததினால், முகாமைத் தாக்குவதும்சாத்தியப்படவில்லை.

சமர் நீண்டுகொண்டிருந்தது, வீரர்கள் வீழ்ந்து கொண்டிருந்தனர். இரவு விடிந்து கொண்டிருந்தது. நிலைமை பிசகிக்கொண்டேபோனது உடனடியாக மாற்றுவழி ஒன்று தேடவேண்டிய கணங்கள், தென்பகுதியில் இறங்கிய தாக்குதல் அணிக்குப் புதுப்பலம் சேர்த்து, ஒரு அகோரத் தாக்குதல் நிகழ்த்தி, அரண்களை உடைத்தெறிய வேண்டும். தளபதி பானு தீர்மானித்தபோது மனக்கண் முன்னால் லக்ஸ்மணன்தான் நின்றான், இத்தகைய இறுக்கமான சூழ்நிலைகளை இழக்கி விடுவதற்குரியவன்அவன்தான்.

கிழக்குப் பகுதியில் இருந்து அணி பின்னுக்கு எடுக்கப்பட்டு தென்பகுதிக்குக்கொண்டுவரப்பட்டது. குழுக்கள் துரிதமாக மீள ஒழுங்கமைக்கப்பட்டன.உடனடித் தாக்குதற் பிரிவொன்று உருவாக்கப்பட்டது. லக்ஸ்மணன் தான் கொமாண்டர், மூர்க்கத்தனமான ஒரு தாக்குதல். கணிக்கப்பட்ட நேரத்துக்குள் காரியம் முடிய தெற்குப் பாதுகாப்பு அமைப்பையும் உடைத்தெறிந்துகொண்டு, விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவுகள் ஞானிமட முகாமைச் சுற்றி முற்றுகையிட்டன. பூரணமாகவே விடுதலைப் புலிகளுக்கு சார்பான தளநிலை பிறந்தது. எனினும்– பொழுதுவிடிந்து விட்டதில் முகாம் தாக்குதல் அடுத்த இரவிற்கு ஒத்திப்போடப்பட்டது.

மூன்றாம் நாள் மாலை–ஞானிமடம் கடற்படைமுகாமை அழித்து, பூநகரிக் கூட்டுத்தளச் சமரை வென்று, விடுதலைப் புலிகளின் படையணிகள் வெற்றிவாகையோடுமீண்டுவர– லக்ஸ்மணனை மட்டு–அம்பாறை பிராந்தியத்தின் துணைத் தளபதியாக தலைவர்அவர்கள்நியமித்தார்.

தென்பிராந்திய படையணி புனருத்தாரணம் செய்யப்பட்டு புதுமெருகூட்டப்பட்டு–புதியநிர்வாகக் கட்டமைப்புகளுடன் மட்டக்களப்பிற்குப் புறப்பட்டபோது–எவ்வளவு குதூகலத்தைஅவனில்கண்டோம்!

தளபதி ராம் இற்குத் துணைச் சேனாதிபதியாகஅவன்...

எத்தகைய கனவுகள்....எத்தனை கற்பனைகள்.... தென்தமிழீழமெங்கும் விடுதலைப் புலிக்கொடி நாட்டும் ஆசைகள்.....

கட்டுமுறிவுக்குளம் தாக்குதலில் பாதிப் பொறுப்பெடுத்துச் சென்றவன், பூமாஞ்சோலைத் தாக்குதலில் முழுவதையும் பொறுப்பெடுத்தான். மட்டு நகரில்இருந்து ஏழேகிலோமீற்றர் தூரம் தான், சற்று சிக்கலான இலக்கு. சிக்கெடுத்துச் சிக்கெடுத்துப் பழகிப்போனவன்–முடிவெடுத்தான்.

படைபடையாய்ச் சென்றனர், பகையை வென்றனர். மீளத் திரும்பிட அவர்கள் தயாரான வேளை–அதிர்ந்த ஒரு வெடியோசையோடு அந்தத்துயரம் நிகழ்ந்தது!

போரெடுத்துப்போரெடுத்துபகைவனை அழித்துக்கொண்டேயிருந்த எங்களின், 'பொம்மரை' மறைந்து கிடந்த ஒரு பகையாளன் கைக்குண்டால் வீழ்த்து விட்டான்.

எட்டாண்டு காலமாக ஓயாத புயலாகச் சுழன்றடித்த அந்த வீரனைக் கைக்குண்டின் சிதறல்கள் சுயநினைவற்று வீழ்த்தின .''பொம்'மரண்'ணா....! பொம்மரண்ணா....!! என்று அமைதியாய்க் கதறிய தோழர்களின் மடியில், சாவோடு போராடிய அந்த வீரன்–மரணத்தை வென்றான், மனங்களில் நிறைந்தான், எம்முன் நிலையான நினைவானான்!

அவனது பெயர் சொல்ல–அவனது கைகளில் வளர்ந்த நூற்றுக்கணக்கான போராளிகள், தானை வீரர்களாகவும், தளபதிகளாகவும் இன்று அணி வகுத்துள்ளார்கள்.

மகிழடித்தீவில் இருந்து புங்குடுதீவு வரை தமிழன் வென்றெடுக்கும் நாளினிற்காக அவர்கள் போரெடுப்பார்கள்! போரெடுப்பார்கள்!! லக்ஸ்மணனின் புதைகுழி மீதினில் விடுதலைப்புலிக்கொடிநாட்டுவார்கள்!.

**எட்டாண்டு காலமாக ஓயாத புயலாகச் சுழன்றடித்த அந்த வீரனைக் கைக் குண்டின் சிதறல்கள் சுயநினைவற்று வீழ்த்தின பொம்மரண்ணா. பொம்மரண்ணா. என்று அமைதியாய்க் கதறிய தோழர்களின் மடியில், சாவோடு போராடிய அந்த வீரன் மரணத்தை வென்றான், மனங்களில் நிறைந்தான்,எம்முன் நிலையான நினைவானான்**

# கமில்டன் பதவியைக் காக்க கடைசிவரை முயன்ற ரத்வத்த

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவிக்கான நியமனம் வழங்கப் பட்டதன் பின்னணியில் நிகழ்ந்த சம்பவங்கள் படிப்படியாக அம்பலமாகி வருகின்றன. அதில் பல சுவையான சம்பவங்களும் திருப்பங்களும் நிறையவே உள்ளன. இந்தப்பதவியை கடந்த சில ஆண்டுகளாக



தற்போதையபாதுகாப்பு அமைச்சின்செயலாளர் சந்திரானந்தடிசில்வா

வகித்துவந்த கமில்டன் வண–சிங்காவின்பதவிதுறப்பு ஜனாதிபதியும் முப்படைத் தளபதியுமான திருமதி பண்டாரநாயக்கா குமாரதுங்–காவிற்கும் அவருக்கும் நெருக் கமான உறவினரும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான அனுரத்தர த்தவுக்கும் இடையிலான முரண் பாட்டின் பிரதிபலிப்பு என்றே கருதப்படுகிறது.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சு செயலாளர் பதவிக்கு சிவில் சேவையைச் சேர்ந்த நிர்வாக அதிகாரி ஒருவரை நியமனம் செய்வது என்ற திருமதி சந்திரிகாவின் எண்ணம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒரு ஆப்பு என்றும் கருதப்படுகின்றது. மேலும் இது ஆளும் பொதுஜன ஐக்கியமுன்னணிக்குள்நடைபெறும் கெடுபிடிப் போரை கோடி காட்டும் ஒன்றாகவும் அமைந்து விட்டது எனலாம்.

## அனுருத்தரத்வத்தவின் முயற்சிகள்

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்த ஜெனரல் கமில்டன் வணசிங்காவின் பதவிக்காலம் பெப்ரவரி முதலாம் திகதி முடிவடைய இருந்த நிலையில் அவருக்கு சேவை நீடிப்புப் பெற்றுக் கொடுக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்தரத்வத்த எடுத்த முயற்சிகள் ஏராளம். இந்த முயற்சிகள் பட்டியல் போடக்கூடிய அளவுக்கு அபாரமானவை. ஓய்வுபெறும் முப்படைத் தளபதிகளிலிருந்து பாதுகாப்பு அமைச்சு செயலாளர் பதவி நிரப்பப்படுவதே வழமை என்பதை அவர்சுட்டிக்காட்டிவாதிட்டுள்ளார்.

படைத்துறையைச் சேராத சிவில் சேவை நிர்வாக அதிகாரிகளிலிருந்து இப்பதவிக்கு எவரும் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதனால் படையினர் மத்தியில் கசப்புக்கள் தோன்ற காரணமாகிவிடும் என்று எச்சரித்தார். இராணுவ சேவையில் தமக்கு இருந்த சொந்த அனுபவத்துடன் நாட்டின் எதிர்காலம் இந்த நியமனத்தின் மூலம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடும் என்று எதிர்வு கூறினார். இவற்றை ஜனாதிபதியிடம் தனிப்பட்ட முறையிலும் அமைச்சரவை மட்டத்திலும் திரும்பத்திரும்ப எடுத்தியம்பிய கமில்டன் வணசிங்காவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியில் தக்க வைத்துக்கொள்ள கேணல் அனுருத்தரத்வத்த படாதபாடு பட்டார். ஆனால் அவரது எண்ணம் கைகூடவில்லை அதுஏன்?

## சந்திரிகாவின்சந்தேகம்

முன்னாள் இராணுவ அதிகாரி என்ற செல்வாக்கைப் பயன்படுத்துவதன் மூலம் அரசியல் செல்வாக்குடைய இராணுவத்தரப்புபிரமுகராகவளர்ந்து விடக்கூடும் என்ற சந்தேகம் திருமதி சந்திரிகாவின் மனதில் எழுந்ததுதான் முக்கிய காரணமா? அனுருத்த ரத்வத்த எடுத்த பகீரத முயற்சிக்குப் பின்னரும் கமில்டனுக்கு சேவை நீடிப்பு வழங்கப்படாமை இந்தக் கேள்விக்குபிரதானகாரணம்எனலாம்.

கமில்டனின் சேவைக்காலம் காலாவதியான பின்பு அவருக்கு மேலும் சேவை நீடிப்பு வழங்கப்படக் கூடாது என்பதில் திருமதி சந்திரிகா உறுதியாகவே இருந்தார். இதன் காரணமாககமில்டன்வணசிங்காவின் பதவிக்காலத்தில் நிகழ்ந்த ஊழல்கள் மற்றும் மோசடிகள் என்பன சில பத்திரிகைகளில் வெளிவந்தமையை அவர் மறைமுகமாக ஊக்குவித்தார். அத்துடன் லஞ்ச ஒழிப்பு ஆணையாளர் பதவியில் மீண்டும் அமர்த்தப்பட்டுள்ள திருமதி நெலும் கமகேயும் கமில்டனின் மீள் நியமனத்திற்கு எதிராக திட்டமிட்ட வகையில்செயலாற்றினார்.

இவ்வாறான கமில்டனுக்கு எதிரான நடவடிக்கைகள் ஒருபுறத்தில் நடந்துகொண்டிருக்க மறுபுறத்தில் இப்பதவிக்கு பொருத்தமானவரைத் தேடும்முயற்சியிலும்திருமதிசந்திரிகா ஈடுபட்டிருந்தார். சிவில் நிர்வாக சேவையைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் பலரிடமும் திருமதி சந்திரிகாதனிப்பட்ட முறையிலும்கூட வேண்டுகோள் விடுத்தார். ஆனால் ஆபத்து மிகுந்தது என்று அச்சம் தெரிவித்தனர் சிலர். இக் காலகட்டத்தில் அதிகம் பொறுப்பு மிக்கது என தயக்கம் தெரிவித்தனர் சிலர்.

## சந்திரானந்தடிசில்வாவின் தயக்கம்

இவ்வகையில் ஜனாதிபதியின் செயலாளர் குசும் சிறி பலபத்தபெண்டி ஓரேநாளில்இருதடவைகள் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவை சந்தித்தார். தேர்தல் ஆணையாளர் பதவியில் அதிக சுதந்திரத்துடன் இருக்கும்நிலையை சுட்டிக்காட்டியஅவர்தனதுசுதந்திரம் பறிபோய்விடலாம் என தயக்கம் காட்டியுள்ளார். எனினும் நீண்ட இடைவெளிக்குப் பின்னர்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியைப் பெறும் முதலாவது சிவில்சேவை அதிகாரியாக இருக்க விரும்பவில்லைஎனவும் முதலில் யாராவது பொறுப்பு ஏற்றபின் இரண்டாவதாக அப்பதவிக்கு நியமனம்பெறத்தயாராக இருப்பதாகஅவர்கோடிகாட்டினார். விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் முனைப்புப் பெற ஆரம்பித்ததன் பின்னர்தான் பாதுகாப்பு



பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்த

அமைச்சு செயலாளர் பதவிக்கு படைஅதிகாரிகள் மத்தியிலிருந்து தெரிவு இடம்பெற்றது. இவ்வகையில் நியமனம் பெற்ற முதல் அதிகாரி முன்னாள்இராணுவத்தளபதி ஜெனரல் சேபால ஆட்டிகல அதன்பின்னர் திஸ்ஸவீரசிங்க, நளின்செனவிரத்தினா, சிறில்ரணதுங்க என நீண்ட பட்டியல் ஜெனரல் கமில்டன் வணசிங்கா வரை வந்து நின்றது. இவர்களின் வருகையானது இடையீலேற்பட்டதென்ற வரலாறும் பாதுகாப்பு அமைச்சின்செயலாளர்பதவியில்சிவில் சேவை அதிகாரிகளே முன்பு கடமையாற்றி வத்திருந்தனர் என்பதும்சந்திரானந்த டி சில்வாவிடம் வலியுறுத்தப்பட்டது.

## சந்திரிகாவின்சங்கடம்



முன்னாள்இராணுவத்தள பதியும்முன்னாள்பாது காப்புஅமைச்சின்செயலா ளருமானஜெனரல்கமில் டன்வண சிங்கா

பெப்ரவரி முதலாம் திகதியுடன் கமில்டன் வணசிங்காவின் பதவிக் காலம்முடிவடையஇருந்தநிலையில் சேவை நீடிப்புக்கோரும் மீள்நியமனக் கோவை ஜனாதிபதி செயலகத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பதவி நீடிப்பு வழங்குவதா இல்லையா என்பது தொடர்பாக ஒரு முடிவுக்கு வரமுடியாமல்ஒருவித இழுபறிநிலை இருந்தது. கமில்டனை தொடர்ந்தும் பதவியில் வைத்திருக்குமாறு பல மட்டங்களிலிருந்தும் சிபார்சுகள் வந்துகொண்டிருந்தன.

இந்த நிலையில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து தன்னிலை விளக்க மொன்றை அளிக்க கமில்டன் விரும்பினார். இந்த அடிப்படையில் பெப்ரவரி 4ம் திகதியன்று ஜனாதிபதியுடன் சந்திப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டது. கமில்டனுடன் சிரேஸ்ட அரசியல் பிரமுகர்கள் இருவரும் இராணுவ உயர்நிலை அதிகாரிகள் மூவரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். மோசமான நிலையில் இருந்து நாட்டை மீட்டுக்கொடுத்தமையில் கமில்டனின் பங்கு கணிசமானது என்பது சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதற்கான பிரதி உபகாரமாக சேவை நீடிப்பு வழங்கப்படவேண்டும்எனவும் கோரிக்கைவிடப்பட்டது.

ஆனால் இவற்றை எல்லாம் மிகுந்த ஆவலுடன் செவிமடுத்த திருமதி சந்திரிகா படைஅதிகாரிகள் தரத்திலிருந்து எவரையும் இப் பதவிக்கு தான் நியமிக்கப் போவதில்லை எனவும் சிவில் சேவை அதிகாரி ஒருவரே இப்பதவிக்கு நியமிக்கப்படுவார் எனவும் இது அரசாங்கத்தின் முடிவு எனவும் தெளிவுபடுத்தினார். எனினும்லஞ்ச ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவின் பெயர்ப் பட்டியலில் இருந்து கமில்டன் தனது பெயரைக் காப்பாற்றிக் கொள்ள முடியுமெனின் அவருக்கு வேறுபதவி வழங்கப்படுவது பற்றி ஆலோ சிக்கப்படலாம் எனவும் திருமதிசந்திரிகாகோடிகாட்டினார்.

தனது பக்க நியாயங்களை கமில்டன் எடுத்துக்கூறமுற்பட்ட போதும் அதற்கு செவிமடுக்க திருமதி சந்திரிகா தயாராக இருக்கவில்லை இலஞ்ச ஒழிப்பு ஆணையாளர் திருமதி நெலும் கமகேயிடம் இவைபற்றி விளக்கிக் கொள்ளுங்கள் அவரது தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதை நேரடியாகக் கூறாது அவரது நடவடிக்கை மூலம்காட்டினார்.

இந்த நிகழ்சியினால் மிகவும் பதற்றம் அடைந்த நிலையில் ஜெனரல் கமில்டன் தனது பதவிவிலகல் கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் பலபத்தபெண்டியிடம் கையளித் தார். அவருக்கு வேண்டியவர்களும் ஒருவர் பின் ஒருவராக அவ்விடத்தை விட்டு நழுவினர். இந்தநிலையில்தான் பிரதிபாது காப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவ்விடம் வந்து சேர்ந்தார். அனுருத்த ரத்வத்தவின் தாமதமான வரவும் முடிவுகளில் எந்தவிதமாற்றத்தையும் ஏற்படுத்திவிடவில்லை.

பெப்ரவரி முதலாம் திகதியுடன் ஜெனரல்கமில்டனின்பதவிக்காலம் முடிவடைந்துவிட்டபோதும்12ம் திகதிவரை பதவிவிலகல் உத்தியோக பூர்வமாக அறிவிக் கப்படாமல் நீடித்தது. இவ்வாறு நீடித்த ஒவ்வொரு தினத்திலும் ஜெனரல் கமில்டன் சேவை நீடிப்பு கிடைக்கும் என்ற எண்ணத் திலேயே இருந்தார். எனினும் முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சின் பிரதிச் செயலாளர்மகிந்த தர்மசேனாவிடம் ஜனாதிபதியினால் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுஇருந்தது.

நிமலராஜன்

# நிலையான நினைவாகிச்..

"என்ரதங்கைச்சி!...என்னை விட்டுட்டுப் போட்டா.."–சொல்லிச் சொல்லி அழுது கொண்டேஇருந்தான்.

லக்ஸ்மணன்–

பொம்மர்–

மற்றவர்களிடம் காணமுடியாத சில அபூர்வ தன்மைகளைக் கொண்டிருந்தான்–மெதுவாக, ஆனால் உறுதியாக வளர்ந்து, மேல்நிலைக்கு உயர்ந்தஒருபுரட்சிவீரன்.

தென் பிராந்திய போர் அரங்கில், தன்னிகரில்லாப் போர் நாயகர்களாக விளங்கிய குறிப்பிடத்தக்கவர்களுக்குள் – தானும் ஒருவனாக ஒளிர்ந்த சண்டைக்காரன்.

களமுனையில் மாறுபடும் தளநிலைமைகளின் போக்குகளுக்கு ஏற்ப தீர்மானங்களை எடுப்பதிலிருந்து, பொறுப்பெடுத்த பணிகளை எவ்வளவு விரைவாகவும் எவ்வளவு சுலபமாகவும் ஆற்றி முடிக்க இயலுமென்பதையே சிந்தித்துச் செயற்படுத்துவ்து– எதெதிலெல்லாம் ஈடுபட்டானோ அததிலெல்லாம் –அவன் மதிநுட்பத்தோடு காட்டிய அசாத்திய துரிதத்திற்காகவே 'பொம்மர்' என்பது அவனது மறுபெயர் ஆனது. முற்றுமுழுதாகவே அது காரணப் பெயர்தான். "பொம்மரண்ணா! பொம்மரண்ணா...!" என்று ஒரு கூட்டம், பொழுதெல்லாம் அவனைச் சுற்றிக் கொண்டேதிரியும்.

அவன்–

அதிர்ந்து அனல் கக்கும் படைக் கலங்களின் முன்னால், துணிந்து களமாடும் ஒரு போர்வீரன், சிக்கலாய் இறுகும் சண்டைகளையெல்லாம் நுட்பமாய்வென்றிடும் ஒரு தளபதி,நம்பி வேலைகளைக் கொடுத்துவிட்டுப் போனால், இம்மியும் பிழையாமல் முடித்திடும் செயல் வீரன். ஒருநாள் அவனுடன் பழகக் கிடைத்தாலும் ஒருநாளும் அழியாத நினைவாகும் நண்பன். இடையறாத போராட்ட அனுபவத்தில், இனங்காணப்பட்ட ஓர் நேர்த்தியான பொறுப்பாளன், விரிவுரை நிகழ்த்துகையில், ஓர் படையியல் பேராசான், தேடிக் கேட்டுப் படிக்கையில், ஒரு அடக்கமான மாணவன், கட்டுப்பாடாய் – ஒழுக்கமாய் – தமிழினத்தின் பண்பாட்டு நெறிபிறழாத மனிதனாய் வாழ்ந்து, இயக்கத்தின் உயரிய விழுமியங்களைக் காத்து நின்ற விடுதலைப் புலிகளின் போராளி. ஆலோசகனாகி அறிவுரைகள் சொல்லி, தளபதி கருணாவின் தோளோடு தோள் நின்ற அந்தப் படைவீரன் சாதனை செய்து, சரித்திரம் படைத்து, பிரபாகரன் என்றதலைவனுக்குப்பெருமையினைத் தந்தவிடுதலைப்புலிவீரன்.

ஆமித்தியமலை, வரம்புயரத்திற்கு நீருயர்ந்து, நீருயரத்திற்கு நெல் உயர்ந்திருக்கும் வயற்சேனை, அது நீண்டு விரிந்து கிடக்கும் பரந்தவெளி, ஒரு கரையிலிருந்து மறுகரை பார்த்தால், நான்கைந்து கிலோ மீற்றருக்கு எறும்பே இல்லாத வெட்டைத் தரை. நெற்கதிரைத் தவிர மண்மட்டத்திற்குமேல்மங்கலாய்ஏதும் தெரியாத புவியமைப்பு. இந்தச் சேனை நிலத்தை சரி நடுவாகக் குறுக்கறுத்துப் போகிறது – கரடியனாறையும் உன்னிச்சையையும் தொடுக்கும் பெருந்தெரு. இந்த வீதியால் நாளாந்தம் நடைரோந்து போனது, சிங்கள அதிரடிப்படையணியொன்று. இந்த வெட்டை நிலப்பாதையில் வைத்து அந்த அணிமீது தாக்குவது பற்றிக் கதைத்தால், தேர்ந்த ஒரு படைத்துறை நிபுணன் முட்டாள் என்பான்.ஏனென்றால், தாக்குதலுக்குச் சாதகமே இல்லாத தளநிலைச் சூழல் அது. ஆனாலும் தாக்குதலை நடாத்துவது என முடிவெடுத்தான் லக்ஸ்மணன், விடுதலைப் புலிகளுக்குரிய தனித்துவம் அதுதான்! ஏற்கனவே தலைவர் சொல்லியிருப்பதைப்போல, "அதீதமான தன்னம்பிக்கைதான் எங்களது பலம்". பாதகமானது எனக் கருதப்பட்ட அதே காரணத்தையே அவன் சாதகமாக்கினான். எதிர்ப்பை எதிர் பாராமல் எதிரி கவலையீனமாக நகரும் வேளை – அவதானமற்ற அலட்சியமாகவும், உசார் நிலையற்ற உல்லாசமாகவும் காலாற நடையயிலும் அந்தப் பகைப் படையணி, ஒரு வாய்ப்பானஇலக்குத்தான்!

தானே நின்று பொம்மர் வேவு பார்த்தான். இடம் தேர்ந்து, நாள் குறித்தான், வீரர்களை ஒழுங்குபடுத்தித் தயாரானான். தளபதி கருணா ஒப்புதல் தந்தார், புறப்பட்டான்.



## போராளியின் குருதிச்சுவடுகள்

உருமறைப்பு–போரில்இதுஒருமுக்கிய அம்சம். தாக்குதல் நடவடிக்கைகளின போது இன்றியமையாத ஒரு பாத்திரம் இதற்குண்டு. உருமறைப்பானது, எதிரிக்கு எம்மை மறைப்பதுடன் எமது தந்திரோபாயத்தையும் மறைக்கிறது. அதனால், தாக்குதலின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதில் அதுவும் பெரும்பங்கு வகிக்கின்றது. களத்தைப் திறப்பது நாங்களாய் இருக்கவேண்டும், அவனாய்அல்ல.

ஒவ்வொரு வீரனாக லக்ஸ்மணன் தானே உருமறைத்துவிட்டான்.போரின் இந்தத் தனிக்கலை–அவனுக்கு ஒரு கைவந்த கலை.

வரம்போடு வரம்பாக, நீரோடு நீராக, நெல்லோடு நெல்லாக, புல்லோடு பூண்டாக.... காத்திருந்தார்கள், பாயத் தயாரான விடுதலைப் புலிகள். வந்து கொண்டிருந்தான்– சாகத் தயாரான வகையில்பகைவன்.

பார்க்கின்ற தூரத்திலிருந்து கேட்கின்ற அளவுக்கு நெருங்கினான்–எட்டித் தொடக் கூடியவாறு...இதோ பகைவன்! பக்கத்தில்..!! கணக்கான இடைவெளி– சரியான தருணம் வெற்றிக்குரிய மணித்துளி இதுதான்! தீப்பொறிகக்கும் 'ஜீ.திரீ'யோடெழுந்து, ஆட்டத்தைக் கோலாகலமாக தொடக்கி வைத்தான், லக்ஸ்மணன். ஆவேசத் தாக்குதல்! உயிர் சிலிர்க்க வைக்கும் சண்டைக் கணங்கள். வெட்டவெளித் தரையில், இந்த உச்சிப் பகற்பொழுதில் எங்கிருந்தையா வந்தனர் விடுதலைப் புலிகள்...? நடப்பதென்னவென உணரும் முன்னரே சுருண்டு விழுந்தனர் பகைவர். சிங்களக் கொமாண்டோஅணிதன்னில்14பேரைப் பிணங்களாய் இழந்தது. தப்பியோடியவர்கள் தப்பிப் போனமை ஏதோ கடவுள் கிருபையால்தான். என்ன அதிசயம் பாருங்கள், விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான ஒரு துளி இரத்தமும் சிந்திடாமல் பெற்றெடுத்த வெற்றிஅது!

"அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்பதற்கு, சாலப் பொருத்தமானவன் அவன். வெளித்தோற்றத்தால் என்றல்ல, உள்ளத்து அழகினால் எங்களது உள்ளங்களை ஊடுருவி வாழ்ந்த ஒரு அற்புதமான நண்பன். அவனது அகத்திலும் முகத்திலும் மிளிர்ந்த பேரழகு. எல்லாரையுமே வசீகரித்த தென்றால்மிகையேயல்ல. இனம்புரியாத அந்த ஈர்ப்புச் சக்தியின் வீச்செல்லைக்குள் அகப்படாதவர்களே இல்லை. எவரையும்கவரும் அபூர்வம் அவனில்மறைந்துகிடந்ததை நாங்கள் கண்டோம். எங்கும், எப்போதும், எவ்விதமாகவும் எடுத்துக் காட்டிச் செல்லக் கூடியவனாக வாழ்ந்த– மாண்பானமனிதன்லக்ஸ்மணன்.

ஒரு மேற்சட்டை, ஒரு காற்சட்டை, ஒவ்வொரு உள்ளாடையோடு ஒரு சாரம் – கிழியக் கிழியத் தைத்து, எந்தச் சோலியுமில்லாமல் லக்ஸ்மணன் ஓராண்டைச் சமாளிப்பான். கந்தையாகக் கந்தையாகத் கசக்கிக் கட்டி –சிக்கனமாய் வாழ அவன் கற்றுத் தரவில்லை, அப்படியாக வாழ்ந்தவனைப் பார்த்து நாங்கள் கற்றுக்கொண்டோம்.

ஈடுபட்ட பணிகளிலெல்லாம் ஈடுபாட்டோடு இயங்கி–ஆற்றல், புலமை, திறமை அனைத்தையும் அர்ப்பணித்து –வரலாற்றில் முத்திரையைப் பதித்தவர்கள் எண்ணக்கூடியவர்கள்தான், லக்ஸ்மணனும் –அவர்களில் ஒருவனாகி, தலைவரின் விருப்பத்திற்குரிய ஒரு போராளியாகி, அவரது சிந்தையைக் கவர்ந்து உயர்ந்தான். அந்த உயர்ச்சி 'லக்ஸ்மணனைப் போல...' என அவர் முன்னுதாரணம் காட்டுகின்ற உன்னதத்தை அவனுக்குப் பெற்றுத் தந்தது.

அவன் நின்ற இடம் சிறப்பைப் பெற்றது. குழுவொன்று மதிப்பைப் பெற்றது. அவனிடம் நின்றதால் விளையாட்டில் திறமை, சமையலில் உரிசை, வேலையில் வேகம், சண்டையில் வீரம், "பொம்மரண்ணான்ர குறூப்"பிற்குத் தனிப் பேர் இருந்தது. ஏனைய குழுக்களிலிருந்து வேறுபாடு அப்பட்டமாய்த்தெரிந்தது.

காடென்ன? மலையென்ன? கடும் குளிர்தானென்றால் என்ன? நடுப்பகல் வெயிலென்ன? நள்ளிரவுப் பொழுதென்ன...? பொம்மரண்ணா வேலைக்கென்றால் பின்னுக்கு நின்றவர் கிடையாது,பின்னுக்குநிற்பாட்ட ஆளே கிடையாது.

பெரும்தாக்குதலுக்குப்புறப்படும்போது அவனது ஒழுங்கமைப்பைப் பார்க்கலாம். தாக்குதற் திட்டம் பெரிதாகும்போது, தயார்ப்படுத்தல் மிகப் பெரிதாய் இருக்கும். தயார்ப்படுத்தல் பெரிதாகும்போது, அவனுக்கே அது ஒரு சுமையாய்க் குவியும். எல்லாச் சுமைகளையும் தானே ஏற்பதால், அவனது தளபதிகளுக்கு வேலைப்பளு குறையும்.

பானைசட்டிஎடுத்து,பருப்புஅரிசிபொதி செய்து,படைவீரருக்குவலைஎண்ணி, மருந்துப்பெட்டியில்பொருள்பார்த்து— ஒவ்வொரு 'கிளைமோரு'க்கும் இடம் காட்டி, ஒவ்வொரு வீரனுக்கும் நிலை காட்டி, ஒவ்வொரு அங்குலமாய் வியூகம்போட்டு...சென்று, வென்று, மீண்டும் வரும்வரை, ஒவ்வொரு அடியிலும்அவனதுஉழைப்பிருக்கும்.

லக்ஸ்மணன் – நீங்காத நினைவுகளாய் ஆழ்மனதில் பதிந்துபோன அடலேறு அவன்.ஒன்றைநினைக்க இன்னொன்று வருகின்றது. அதை நினைக்க வேறொன்று வருகின்றது. வருவதை நினைக்க அடுத்தது வருகின்றது... ஓயாத எண்ணங்களாக நினைவுகளின் தொடரசைவு. நினைவுகள் அழிவதில்லை,அழிவதேயில்லை.

பயிற்சியில் நாங்கள் சோம்பலாகி பம்மாத்து விட்டபோது, பக்கத்தில் நின்று தெம்பாக்கி சேர்ந்து வளைந்தவன்? தளத்தைச் செப்பனிட நாங்கள் கிடுகு காவி கூரைவேய, கம்பு தூக்கி மூடை அடித்துக் கூடவே முறிந்தவன். பிழைகள் இழைத்து நாங்கள் தவறுகள் செய்தபோது பக்குவமாய் அணுகி எம்மை அன்பால் திருத்தியவன், தவறுகள் செய்துவிட்டு நியாயம் சொல்வோர் மத்தியில், தனது தவறுகளைச் சுட்டியபோது அமைதியாய் ஏற்றுக் கொண்டவன். தவறுகளுக்காகத் தண்டனைகள் தந்தபின்பும், மென்மையாய் விளக்கி அறிவுரை சொன்னவன். கீழ் இருக்கும் போராளி பெரிதாய்ச் செய்த போது, மேல் இருக்கும் தளபதியிடம் இனங்காட்டி விட்டவன். கண்திறப்பான் என்று நாங்கள் காத்திருந்த போது, கண்துறக்கவில்லை அவன்– காவியமாய்ஆனான்.

நினைவுகள் அழிவதில்லை, அவை அழிவதேயில்லை!

வாவிகளில் மீன்பிடித்து வந்து கறியாக்கித் தந்தான்–உண்டு சுவைத்தோம். 'காண்டைக் காட்டுச்' சண்டைக்குப் போய் ஆறு கடக்கத் திக்குமுக்காடியபோது 'வெல்லங் கம்பில்' கயிறு திரித்து ஆறு கடத்திக் கூட்டிப்போனான்–வென்று மீண்டோம். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வீரனாகினான்–சேர்ந்து மகிழ்ந்தோம். நீருக்குள் மீனாகி நீந்தினான்–பார்த்து வியந்தோம். ஆறிழுத்துப்போன தோழர்கள் போனவர்தானென விக்கித்து நின்ற வேளை, நீரிழுத்துப் போகாமல் மீட்டெடுத்துப் போட்டான்–அதிர்ந்து இன்புற்றோம். மேற்கத்தைய இசையில் 'கிற்றார்' துணையுடன் "சொற்றுணை வேதியனை..." மணியாய்ப் பாடினான்– கூடிக் குதூகலித்தோம். பானு அண்ணனோடுவேகநடைப்போட்டியில் நாரிவருத்தத்தால்பின்தங்கிப்போனான்– நாமும்வருந்தினோம்.தளத்தில்நிகழ்ந்த ஆணழகன் போட்டியில் தசைகளை முறுக்கி எண்ணெய்யில் ஜொலித்தான்– பார்த்து இரசித்தோம். காத்திருந்து நாங்கள் பரிதவித்துப் பார்த்திருக்க பூத்துவிழி சிரியாமலே... பூ உதிர்ந்து போனான்–உயிருக்குள்அழுகின்றோம்.

நினைவுகள் அழிவதில்லை. அவை அழிவதேயில்லை...

சண்டை செய்யத் தெரிந்தவன், சண்டையைச் செய்விக்கவும் தெரிந்தவன், போராளிகளை நிர்வகிக்கத் தெரிந்தவன், போரை நிகழ்த்தவும் தெரிந்தவன்.... களங்களிற்குத் திட்டமிடத் தெரிந்தவன், சமர்களை வெல்லவும் தெரிந்தவன். லக்ஸ்மணன் ஒரு போரியல் வல்லுனன்தான், போரின் ஒவ்வொரு கூறிலும் அவன் தலைசிறந்து விளங்கியவன்,படைத்துறையில் ஒரு நிபுணனாகவே திகழ்ந்தவன். அவன் பங்கேற்றகளங்களிலெல்லாம் ஒரு All Rounder ஆக–சகலகலா வல்லவனாக மட்டுமல்ல, Man of the Battle ஆக– அந்தக் களத்தின் நாயகனாகவும்விளங்கினான்.

ஜீ.திறீ ஏ.திறீ சுரிக்குழல் துப்பாக்கிதான் சிறுரக சுடுகலன்களுள் அவனது விரும்பத் தேர்வு. தலைவர் அவர்களுக்கும் அது பிடித்தமானது, 'கெக்லர் அன்ட் கொச்' நிறுவனம் உருவாக்கியபெருமையைப்பெற்றது. சீறிப்பாயும்சன்னங்களினூடு'ஜீ.திறீ'யோடு அவன் முன்னேறும் விரைவு சண்டைக்காரர்களையே அசத்தும், சுட்டுக் கொண்டிருக்கும் பகைவனைச் சுட்டுவீழ்த்தும் வேகம்... அந்த வேகத்தோடேயே அடுத்தவனைக் குறி வைக்கும் லாவகம்...அதே

**ஒரு மேற்சட்டை, ஒரு கற்சட்டை, ஒவ்வொரு உள்ளாடையோடு ஒரு சாரம் - கிழியக் கிழியத் தைத்து, எந்தச் சோலியுமில்லாம் லக்ஸ்மணன் ஓராண்டைச் சமாளிப்பான், கந்தையாகக் கந்தை யாக் கசக்கி கட்டி - சிக்கனமாய் வாழ அவன் கற்றுத் தரவில்லை, அப்படியாக வாழ்ந்தவனை பார்த்து நாங்கள் கற்றுக் கொண்டோம்.**

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்...

# வீரர் தாடித்தங்கராசாவுடன் ஒரு சந்திப்பு

## பாரம்பரிய வீரவிளையாட்டு மாட்டுவண்டிச்சவாரி

*சந்திப்பு:நிரமலன்,இராஜேஸ்வரன்*

"இதுஒருவீரவிளையாட்டுப்பாருங்கோ. இப்பநடக்கிறது குறைவெண்டுநீங்கள் சொல்லுறியள். அப்படியில்லை. இண் டைக்கும் நடந்து கொண்டுதான் இருக்கு" என்று தொடங்குகின்றார் மாட்டு வண்டிச்சவாரி வீரர் தாடித் தங்கராசா. எமது பாரம்பரிய விளையாட்டுக்களுள் மாட்டுவண்டிச் சவாரி பற்றி அவருடன் உரையாடச் சென்றபோது, கலகலப்பான வரவேற்புக் கிடைத்தது. ஏறத்தாழ அவருடைய நண்பர்கள்,உறவினர்கள் என்று பத்துப் பேருக்குமேல்கூடிவிட்டார்கள்.

இவரின் சொந்த இடம் பண்டத்தரிப்பு. 1946 இல் பிறந்த இவரின் சொந்தப் பெயர் மார்க்கண்டு தங்கராசா. இவரைத் தாடித்தங்கராசா என்றுதான் அழைப்பார்கள். தற்போது இடம்பெயர்ந்து, வட்டுக்கோட்டையில் வசித்துக் கொண்டிருக்கிறார். இவருக்கு இத் துறையில்எவ்வாறுஈடுபாடுஏற்பட்டது என்றுஉரையாடலைஆரம்பித்தேன்.

"இது பரம்பரை, பரம்பரையாகவந்து கொண்டிருக்கின்ற விளையாட்டு. என்ரை அப்பா ஒரு வீரன். அவரைப் பார்த்துப், பார்த்து நானும் பழகினன். எனக்குநல்லஞாபகம்...எனக்கு6வயது. அந்தக் காலத்திலை றோட்டுச் சவாரிதான்.தார்போடாத கிறவல்றோட்டு –களிலை சவாரி நடக்கும். 65 ஆம் ஆண்டளவில் என்று நினைக்கிறன், கிரவல் பாதைக்கெல்லாம் தார் போட்டார்கள். தார்றோட்டிலை சவாரி சரிவராது. இதோடைதான் மாட்டு வண்டில் சவாரியை தரவைக்கு மாத்தினம்.

முன்னம் முத்தவெளி, நீர்வேலிக் கண்ணாடித் தொழிற்சாலை, ஆவரங்கால், கந்தரோடை, மயிலிட்டி விமான ஓடுதளத்துக்குப் பின்னால் உள்ள தரவை – கூத்தியவத்தை (மாவிட்டபுரம் கிழக்கு) வீமன்காமம், கருகம்பானைத்தரவைகளில்ஓடினம்.

இப்ப ஆவரங்கால்,மட்டுவில்,புத்தூர், வரணி, புன்னாலை, அச்சுவேலி, கந்தரோடை, கொத்துக்கட்டி (நவாலி) எண்ட தரவைகளில போட்டியள் நடக்குது.

### றோட்டுச்சவாரிஎங்கெங்கு நடந்தது?

நவக்கிரி, மருதனாமடம், முல்லையடி, கிராமிட்டி (தெல்லிப்பழை) எண்ட இடங்களில்தான்நடக்கும்.

### இப்போட்டிகள் நடக்கும் முறைஎன்ன?

முன்னும் பின்னுமா இரண்டு வண்டில்கள் ஒண்டையொண்டு துரத்தும். முன்னாலை போறதைத் தாண்டிப்போனால் வெற்றி. இல்லாட்டி இன்னொரு மாடு அவிழ்த்து, அடுத்த முறை தோற்கடிக்கப் பார்க்கவேணும். இதிலை ஒற்றை மாட்டுவண்டில் போட்டியும் நடக்கும். இரட்டை மாட்டு வண்டில் போட்டியும் நடக்கும். எண்டாலும் இரட்டை மாட்டு வண்டிப் போட்டிக்குத்தான்நியாதி.

### உங்களுடைய அப்பா சொந்தமாக மாடுகள் பழக்கினாரா அல்லது வாங்கி அவற்றைக் கொண்டு சவாரிசெய்தாரா?

அந்தக் காலத்திலை இந்தியாவிலை இருந்து இஞ்சை மாடுகள் வரும். திருவண்ணாமலை மாட்டுச்சந்தை பெரியபிரசித்தம் பெற்ற இடம்.அதுவும் கார்த்திகை விளக்கீட்டு நாளிலை கூடுற சந்தைமிகப்பிரசித்தம்.அங்கையிருந்து மாடுகள் வாங்கி,ஊர்காவற்துறையிலை கொண்டுவந்து இறக்குவினம். கொண்டந்த உடனே, கவுண்மேந்து கொரண்டாவில மாடுகளை அடைக்கும். அப்பா ஆக்கள் மாடுகளைப் பார்த்துவிலைதீர்த்துப்போட்டுவந்தால், இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு அதுகளை வெளியிலை கொண்டு வரலாம்.ஒருமாடு200ரூபா,300ரூபாக்கு அப்பாவாங்குவார்.வடிவு,உயரம்எண்டு



கவனிப்பினம். வடக்கன் மாடுகள்தான் கூடுதலாகஇந்தியாவில்இருந்துவரும்.

### உங்களுடைய தனியான சவாரிப் போட்டி எப்படித் தொடங்கியது?

65 ஆம் ஆண்டு அக்கராயன் கமக்காரர் சேர்ந்து, ஒரு போட்டி நடத்திச்சினம், அப்ப எனக்கு 19 வயது. வீடு, கமம் எங்களுக்குஅக்கராயனிலைஇருந்தது. நான் இந்தப் போட்டியிலைதான் முதல் முதல் பங்குபற்றி வெற்றிபெற்றேன். அண்டயில இருந்து இன்று வரை, போன இரண்டு வருடம் தவிர்த்து, ஒவ்வொரு வருடமும் வன்னியிலை நடக்கிற போட்டிகளிலை சவாரி செய்கிறனான்.

### ஓடுகின்ற தூரங்கள் என்னமாதிரி?

சாதாரணமாய் 400 யார் தூரம் வரும்.சில இடங்களிலை 350 யாரும் வரும். முதலாவது நீளவிடந்தை, இரண்டாவது கிட்டவிடந்தை. முத்த வெளியை எடுத்துக் கொண்டால் முனியப்பர் கோயிலிலை இருந்து பொலிஸ் ஸ்ரேசனடி வரை நீள விடந்தை. ஸ்ரேடியம் கட்டின பிறகு இஞ்சால கொமினிகேசன் பக்கத்திலை இருந்து நீகல் தியேட்டர் வரை சவாரி நடத்தினவர்கள்.கந்தரோடைவிடந்தை 350யார்,நீர்வேலிவிடந்தை400யார்.

### என்னென்ன பிரிவாகப் போட்டிகள்நடக்கும்?

கைக்கொடிச் சவாரி எண்டொரு பிரிவிலை மாட்டைக் கையில பிடித்துக் கொண்டுஓடவேணும்.இதிலைமாதகல், அளவெட்டி ஆக்கள்வலுகெட்டிக்காரர். மாதகல் ராமலிங்கம், தம்பியார் இரட்ணசிங்கம் எண்டு திறமான ஆக்கள்.

மற்றது திருக்கல் சவாரி. இதை ஒற்றை மாட்டு வண்டிச்சவாரி எண்டும் சொல்லுறவை.இன்னொண்டுஇரட்டை மாட்டுச் சவாரி. எந்த மாதிரி வண்டிலும் போட்டிகளிலை ஓடலாம்.ஆனாநாங்கள் மாட்டுக்குப் பொருத்தமான வண்டில் களைத்தெரிவுசெய்துகொள்ளவேணும்.

இந்தப் பிரிவுகளிலை திறம் எண்டால் இரட்டை மாட்டு வண்டில் சவாரிதான். நான் இரட்டை மாட்டு வண்டில் சவாரிக்காரன். சபைச்சிறப்புக்காக ஒரு வகையைப் பிரிச்சு இரண்டு மூண்டு சவாரியாயும்வைப்பினம்.

### மாடுகளை நீங்கள் என்ன மாதிரித் தெரிவு செய்வீர்கள்?

நான் யாரும்பழக்கின மாடுகளைச்சவாரி செய்யிறதில்லை. என்ரை மாடுகள் எல்லாம் நான் வாங்கி நானே பழக்கினதுகள். இப்படிப்பழக்கின மாடுகளை சில நேரம் மன்னார், பூநகரியிலை இருந்து சவாரிக்காரர் வாங்கிக் கொண்டு போவினம். முன்னம் நாங்கள் வன்னியிலை இருந்து மாடுகள் கொண்டந்து பழக்கிறனாங்கள். இப்ப சூழ் நிலை பிழை. அதால இங்கத்தைய மாடுகளைவாங்கிப்பழக்கிறன்.கனசனம் வந்து என்னட்டை மாடுகளை சவாரிக்காக வாங்கிக் கொண்டு போறது வழக்கம்.

### நீங்கள் கூடுதலாக வன்னியிலா, யாழ்ப்பாணத்திலா போட்டிகளில் ஈடுபட்டீர்கள்?

வன்னியிலைதான்.கிட்டத்தட்ட 20 தரம் முதலாவதாக வந்திருப்பன். கிளிநொச்சியிலை, முரசுமோட்டை, ஸ்கந்தபுரம், பூநகரி, வட்டக்கச்சி, கண்டாவளை, மல்லாவி, வவனிக்குளம் எண்ட இடங்களிலைசவாரிசெய்திருக்கிறன்.

மன்னார் மாவட்டத்திலை திருக்–கேதீஸ்வரம், மாந்தை, நொச்சிக்குளம், பரியாரி கண்டல், அடம்பன், சிறு நாவற்குளம் என்கிற இடங்களிலையும் போட்டிபோட்டிருக்கிறன்.

### உங்களுடைய மாடுகள் நிறைய வெற்றிகள் கண்டிருக்குமே?

நிறைய யாழ்பாணத்திலை நடந்த தினகரன் விளையாட்டுப் போட்டியிலை மூண்டு முறை நான் விற்ற மாடுதான் தொடர்ந்து வெண்டது, இது எனக்கு வலுபெருமை.

### உங்கடை சிறந்த துணைகள் என்று யாரைக் குறிப்பிடுவீர்கள்?

பூநகரியிலை ஐயம்பிள்ளை, யாழ்ப் பாணத்திலை கிட்ணன் (பெடியன்) என்ரை வெற்றிக்கு இவையளும் காரணம். எனக் கொருக்கால் கால் முறிந்தது. அதற்குப் பிறகு கூடுதலாக சாரதியாகவே இருக்கிறன். அதுக்கு முன்தொடர்ந்தும்ஏவல்காரன்தான்.

### உங்கள்அனுபவங்கள்?

மாந்தையிலை ஒருக்கால் சவாரி விடேக்கை துவக்கத்திலையே நான் விழுந்திட்டன்.ஆனால்என் துணையாள் நானில்லாமல்ஓடிமுதலாவதாகவந்தவர். அருமையான சோடி மாடுகள் நான் நினைச்சதைஅதுகள்செய்ததுகள்.

இன்னொருக்கால்93லைநீர்வேலியிலை துவக்கத்திலேயே வண்டிலின்ரை ஒருபக்கச் சில்லு முறிந்து போச்சு. ஆனாலும் குடத்தோட ஒரு பக்கம் சரிஞ்சபடி ஓடி முடியிறதுக்கு கிட்டத்தான் இரண்டாவதாப் போனன். இதிலை திறஞ்சாரதி என்ற பரிசு தந்தார்கள்.

### வண்டிற்சவாரி உங்கள் தொழிலைப்பாதிக்காதா?

வண்டிச்சவாரி எண்டது எனக்கு மூன்றாவது விசயம் தான். எனக்கு முதலாவது கமம். இரண்டாவது மாடுகளைப் பழக்கி விக்கிறது, வளக்கிறது. மூண்டாவது தான் விளையாட்டு வண்டிச்சவாரி எண்டது. கமக்காரர் சம்பந்தப்பட்டது இது. ஒரு கமக்காரரின் திருவிழா எண்டு சொல்லவேணும்.

### உங்கடை சோடிகளை நீங்கள் எப்படி நடத்துவீர்கள்?

தம்பி கேட்கிறது விளங்குது. நானே பழக்கிசவாரிவிடுகிறசோடிகள்அதுகள் வெல்லும். அந்த நுட்பங்கள் எனக்குத் தெரியும். அதாலை அதுகளை வருத்த வேண்டிய தேவை இல்லை. ஒண்டு ரெண்டு அடிபோடத்தான் வேணும். எண்டாலும் 400 யாரை ஒருதிறம் சோடி கடக்க 25 அல்லது 26 செக்கன்தான் எடுக்கும். இதுக்குள்ளை சோடியை என்னத்தைவருத்துறது?

### உங்களுக்குப் பிடித்த சவாரிக்காரர்?

சுருளி எண்டவர். அச்செழு ஊர். இப்ப அவருக்கு80,85 வயசிருக்கும்,மற்றது பெரியதம்பி 65 வயதளவிலை இருக்கும். இப்ப களத்திலை நிற்கிறவையிலை கரவெட்டியைச் சேர்ந்த ஐயா அண்ணை, பண்டத்தரிப்பு சிவப்பிரகாசம், சங்குவேலி திருவாலசிங்கம் (திருவாலி) இவையள்தான் எனக்குப் புடிச்சவை.

### நீங்கள் கூடுதலாக நேசிக்கும்சோடிகள்?

கரவெட்டி இளையதம்பிக்கு வித்த மொட்டையன், கொம்பன், இப்ப மாவிட்டபுரம் சுப்பரிடம்நிற்கிறகழுகன், கருவெள்ளை மற்றது கருவெள்ளை கொடிச்சிவாலன்,தொடக்ககாலத்திலை மாவெள்ளையெண்டு ஒன்று நிண்டது. இதுகள்சோக்கானமாடுகள்,ஒண்டைச் சொல்ல வேணும். மாட்டின்ட வேகத்திலை வேறு எதுவும் பிக் அப் எடுக்காது. குதிரையெண்டாலும் சரி, மோட்டார்ச் சயிக்கிள் எண்டாலும் சரி. பிறகு இவை வேகம் பிடிக்கும்.ஆனால் துவக்கவேகமெண்டாமாடுகள்தான்.

### இந்தப் போட்டிகளிலை மத்தியஸ்தம் எப்படி நடக்கும்?

இது சரியான கஸ்டமான விசயம். கன தூரத்திலை ஒண்டையொண்டு முந்தேக்கை முதல், இரண்டெண்டு பிடிக்க வேணும். இதிலை தவராசா, தம்பித்துரை மாஸ்ரர் ஆக்கள் சரியான கெட்டிக்காரர். அவர்களைத்தான் நான் முதலாவதாகச்சொல்லுவன்.

### பரிசில்களும் நிறையப் பெற்றிருப்பீர்கள்?

கேடயங்கள், குத்துவிளக்குகள், தங்கப் பதக்கங்கள், சைக்கிள்கள், பெற்றோமக்ஸ், சுவர் மணிக்கூடு, இன்னும் என்னென்னவோ ஒரு அம்பாரம். 87 இலை மன்னார் மாவட்டத்திலை சொந்தச்சோடி மாடுகளிலை சவாரி செய்தன். ஒரு "லுமாலா" சைக்கிள் பரிசாகத் தந்தார்கள். யாழ்ப்பாணத்தில் தினகரன்போட்டி,ஈழநாடுபோட்டி என்று கனதடவை பங்கு பற்றியிருக்கிறன். இந்த வருசமும் தென்மராட்சி உள்ளூர் சவாரிப் போட்டியிலை நான் முதலாவதாகவந்தனான்.

### மாட்டு வண்டில் சவாரி இன்னும் பிரபலமாக நடக்க உங்கள் ஆலோசனை என்ன?

நிறைய இளவட்டங்கள் பங்கு கொள்ளவேணும்,மன்னாரிலை பெடியள் நிறையப் பங்குபற்றுகிறார்கள். யாழ்ப் பாணத்திலை இன்னும் இள வட்டங்கள் கூடுதலாக பங்கு பற்றவேணும். இப்ப அராலி கொட்டக்காடு பகுதிப் பெடியள் நல்ல ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். போட்டிகள் நிறைய ஏற்பாடு செய்யவேணும். மாடுகளை நிறையப் பழக்கி எடுக்கவேணும். இப்ப விடுதலைப் புலிகள் மாட்டு வண்டில்சவாரி விசயங்களை ஒரு ஒழுங்குக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதனால் இனி கன போட்டிகள் நடக்கும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கு. இளம் பெடியள் முன்னேற நாங்கள் மெல்ல மெல்ல விலகிக் கொள்ளவேணும். இது தான் என்ரை விருப்பமும்.

## அரசியல்மேலான்மைக்காக...

அதுதான் யப்பானை பணியவைக்க பல மாற்று வழிகள் இருந்த நிலையிலும் பசுபிக் பகுதியில் பாரிய படையெடுப்பொன்றிற்கு சோவியத் தயாராகிய வேளையில் யப்பான் சரணடையும் நிலை தோன்றியபோதும் அவற்றினைக் கருத்திற்கொள்ளாது அமெரிக்கா பொய்யான தகவல்களை உலகிற்கு அளித்து அணுக்குண்டுகளைவீசியது என்பது தான் அது. அணுக் குண்டுகளை வீசுவது தொடர்பில் அமெரிக்க சனாதிபதி கரி ட்ரூமன் (Harry Truman) எடுத்த முடிவு தொடர்பாக கடந்த 20 ஆண்டுக்கு மேலாக ஆய்வுகளை மேற் கொண்டவரும் இக் கண்காட்சியின் ஆலோசகருமான 'ஸ்டான் போட்' பல்கலைக்கழக வரலாற்று ஆசிரியராவார். "பல்வேறு மாற்று வழிகள் பற்றி எமக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் வைத்துப் பார்க்குமிடத்து அணுக் குண்டுகளை வீசவேண்டிய தேவையே எழவில்லை" என்கின்றார். அப்போதைய சனாபதிக்கு 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னதாகவே யப்பானிய அரசு மொஸ்கோவிலிருந்த தனது தூதுவரை போரை நிறுத்துவதற்கு ஏதுவாக அமைதிப் பேச்சுக்களை நேச நாடுகள் அணியோடு தொடங்கப் பணித்த இரகசிய செய்தி கிடைத்திருந்தது என்றும் அதே ஆண்டு கார்த்திகை மாதமளவில் யப்பானியர் சரணடையும் ஏது நிலை இருந்தமைபற்றி அவருக்குத் தெரியும் என்றும் இன்னும் சில ஆய்வாளர் தெரிவிக்கின்றனர் இவையெல்லாவற்றையும் விட முக்கியமானது 'தொலைந்து போனவை' எனக் கருதப்பட்ட ட்ரூமனின் நாட்குறிப்பேடு, அவர் மனைவிக்கு எழுதிய கடிதங்கள் என ஆவணங்கள் இப்போது தேடி எடுக்கப்பட்டு அவற்றினை ஆராய்ந்தளவில் படையெடுப்பு இல்லாமலே யப்பானை பணிய வைப்பது பற்றி ஓராண்டுக்கு முன்னதாகவே சனாதிபதி எண்ணம் கொண்டிருந்தமை தெளிவாகி விட்டது. அப்படியிருந்தும் ஏன் அணுக்குண்டுகள் வீசப்பட்டன என்கிற வினாவுக்கு இரண்டே விடைகள் இப்போது கூறப்படுகின்றன. ஒன்று சோவியத்தின் தலையீடு பசுபிக் பகுதியில் பரவமுன் அதைத் தடுக்கும் முகமாக இப்பகுதியில் தனது செல்வாக்கை தக்க வைத்துக் கொள்ளவும் இதன் மூலம் ஆசியாவிலே சோவியத் செல்வாக்கு அதிகரிப்பதைத் தடுக்கமுடியும் எனக் கருதியே குண்டுகள் வீசப்பட்டன என்பதொரு காரணம். சில வரலாற்றாளர் இப்போது இதனையே கெடுபிடிப் போராக உருவெடுத்த பனிப்போர் கால கட்டத்தின் தொடக்கம் என்கின்றனர். இரண்டாவதாக கூறப்படும் காரணமோ கேட்பதற்கே கொடுமையானது. தனது அணுக் குண்டுகளின் வலுவை அதன் அழிவுச்சக்தியைபரிசோதித்துப்பார்க்க அதிலும் குறிப்பாக கிரோசிமாவில் யுரேனியக் குண்டும், நாகசாகியில் புளூட்டோனியக் குண்டும் வீசப்பட்டமை இதற்காகவே எனப்படு கின்றது. இதனையே பேராசிரியர் ஒருவர் "அறிவியல் ஆய்வின் பலிக்கடாக்கள்" என இறந்துபோன இலட்சக்கணக்கான யப்பானியர் பற்றி குறிப்பிட்டார். ஏனென்றால் இப்போது இன்னொரு திடுக்கிடும் உண்மை யொன்றும் வெளியாகி யுள்ளது. வெளியுலகை நம்பவைக்க கிரோசிமா ஒரு இராணுவ இலக்கு என ட்ரூமன் பொய்யுரைத்த கதைதான் அது. அமெரிக்க போர்த் திணைக்கள ஆய்வுகளே குடிமக்கள் மிக அடர்த்தியாக இருந்ததாலே கிரோசிமா நாகசாகி ஆகிய இலக்குகள் தெரிவு செய்யப்பட்டன என தெரிவிக்கின்றன.

இவ்வாறு அமெரிக்கர் பொய்யுரைத்த கதை செல்கின்றது. யப்பானுக்கோ தான் 2ஆம் உலகப் போரின் போது இழைத்த பாரியகுற்றங்களைமறைக்கவும்தானே பாதிக்கப்பட்டவர் போல் காட்டவும் வழியேற்பட்டுவிட்டது. அமெரிக்காவுக்கோ முதலிருந்தே எல்லாவற்றையும் மூடிமறைக்க வேண்டியுள்ளது. ஆனால் இரு தரப்பாலும் பாதிக்கப்பட்ட மக்கட்கு இழைக்கப்பட்ட கொடுமைகட்கு பதில் சொல்வர் எவருமில்லை.

---

# சலுகைகள் மட்டுமே போதுமானதா?

சிறிலங்கா ஆட்சியில் தமிழ்மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகள் என்ன? சலுகைகள் என்ன? என்பது குறித்துத் தமிழ்மக்கள் தற்பொழுது சிந்தித்துப் பார்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஏனெனில் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தற்பொழுது தெரிவித்துவரும் கருத்துக்கள் சில, தமிழ்மக்களுக்கான உரிமைகளை விடச் சில உயர்வான உரிமைகளையும்சலுகைகளையும்தாம் வழங்கிவிட்டோம் என்பது போன்று உள்ளது. இந்தவகையில் இறுதியாகத் திருமலை துறைமுகத்தில் நடந்த தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதிச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையைக் கொள்ளலாம். இவ்வறிக்கையில் "கடந்த ஆறுமாத காலத்தில் அரசாங்கம் வழங்கியுள்ள சலுகைகள் சாத்தியமான அளவு அதிகபட்சஎல்லையைஅடைந்திருக்கின்றன" எனத் தெரிவிக்கின்றன. அதாவது அரசாங்கத்தின் அறிக்கையின்படி அரசாங்கம் தற்பொழுது தமிழ் மக்களுக்கோ அன்றி விடுதலைப் புலிகளுக்கோ வழங்கியுள்ள சலுகைகள் மிகவும் உயர்ந்த பட்சமானவை. இதற்கு அப்பால் தமிழ்மக்களுக்கு வழங்குவதற்கு எதுவுமே இல்லை என்ற ரீதியில் உள்ளது. இதன் பிரகாரம் தமிழ்மக்கள் அரசாங்கத்திடம் தமக்கெனக் கோருவ–தற்கு இனி எதுவுமே இல்லை. கோருவதும் நியாயமற்றது என்பது அரசாங்கத்தின் வாதமாகவுள்ளது. அவ்வாறானால் தமிழ்மக்களின் உரிமைகள், சலுகைகள் சிறிலங்கா அரசாங்கத்தின் கீழ் எந்தளவிற்குக் கிட்டும் என்பது கேள்வியாகும். இந்தநிலையில் கடந்த ஆறுமாத காலப் பகுதிக்குள் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கிய உரிமைகள், சலுகைகள் என்ன என்பது முக்கிய விடயமாகின்றது. பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி ஏற்றபின்னர் மோதல் தவிர்ப்பு நிலை உருவானமை சற்றுமுன்னேற்றகரமானதுதான். ஆனால் இது அரசாங்கத்தின் தனிப்பட்ட வெற்றியும் அல்ல, சலுகையும் அல்ல. புலிகளின் பங்களிப்பும் சமனான அளவில் உண்டு. அத்தோடு தமிழ்மக்களையும் தனது பிரசைகள் என உரிமை கோரும் சிறிலங்கா அரசு உயிருக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டியது அதன் கடமையாகும். ஆனால் இம்மோதற் தவிர்ப்புநிலைதவிர, வேறுஎதிலும் கடந்த ஆறுமாதகாலத்திற்குள் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதாக இல்லை. அதாவது அரசாங்கம் பொருளாதாரத்தடையைத்தளர்த்துவதா அறிவித்தபோதும் அது அமுலாகவில்லை. பொருட்களின் விலையில் பாரிய வீழ்ச்சி எதுவும் ஏற்படவில்லை. அத்தோடு பொருளாதார நடவடிக்கைகளுக்கும் அவை உதவவில்லை. இதனால் போரால் பாதிக்கப்பட்ட மக்களின் பொருளாதாரம் புனர்நிர்மானம் பெறவில்லை. இதேசமயம் யாழ் குடாநாட்டின் மீது சிறிலங்கா இராணுவம் போட்ட முற்றுகையை அரசாங்கம் நீக்கவில்லை இதன்காரணமாக மக்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றான சுதந்திரமான நடமாட்டத்திற்கு அரசாங்கம் அனுமதியளிக்கவில்லை. அதாவது ஐ. தே. க. ஆட்சியன் போது நடந்தது போலவே, குடாநாட்டை விட்டு வெளியேறக் கடல் வழியையே தமிழ்மக்கள் தற்பொழுதும் நாட வேண்டியுள்ளது. இந்தவகையில் பொ.ஐ.முன்னணி அரசாங்கம், தமிழ் மக்களுக்குப் பெரியளவில் உரிமை வழங்கி விட்டதாகவோ அன்றிச் சலுகை வழங்கி விட்டதாகவோ கூறிக் கொள்வதற்கு எதுவுமே இல்லை. கடந்த கால ஐ.தே.க. அரசு அனுப்பி வைத்தது போன்றே சில கப்பல்களில் உணவுப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது. இந்தநிலையில் கடந்த ஆறு மாத காலத்திற்குள் பெரும் சலுகைகளையும், உரிமைகளையும் தமிழ்மக்களுக்கு வழங்கிவிட்டதாக அரசாங்கம் செய்யும் பிரசாரமானது உண்மைக்குப் புறம்–பானது ஆகும் அவ்வாறு இல்லாது, தற்பொழுது செய்யப்பட்டவையே தமிழ்மக்களுக்குப் போதுமானவை என பொஐமு அரசு கருதுமானால், தமிழ்மக்கள் குறித்தும் அவர்களின் உரிமைகள் குறித்தும் பொது ஐக்கிய முன்னணியின் நிலைப்பாடு என்ன என்பதைத் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளமுடியும். இதன் பிரகாரம் தமிழ்மக்கள் சிறிலங்கா அரசின் கீழ் அரசியல் உரிமைகள் எதுவுமற்ற இரண்டாந்தரப் பிரசைகளாக வாழ வேண்டும் என்பதே பொ.ஐ.முன்னணியின் முடிவாக இருக்கமுடியும். அத்தோடு சிறியளவில் கிடைக்கப்பெறும் வசதிகளுடன் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும். அதாவது உரிமைகள் என்று எதுவும் தமிழ்மக்களுக்குக் கிடையாது. சலுகைகளுடன் அவர்கள் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகக் கருத வேண்டி உள்ளது. ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் இந்நிலைப்பாடு மாறும்வரை, இனப் பிரச்சனைக்கு எந்த அரசியற் தீர்வும் காணமுடியாது. தமிழ்மக்களுக்கு அரசாங்கம் தற்பொழுது வழங்கியதாகக் கூறிய சலுகைகள் உண்மையில் மறுக்கப்பட்டுள்ள அவர்களின் அடிப்படை உரிமைகளில் எதையுமே வழங்கவில்லை. ஆனால் இந்நிலை மாறித் தமிழ்மக்களின் முழுமையான அடிப்படை உரிமைகளை வழங்க அரசாங்கம் முன்வருவதோடு அவர்களின் அரசியல் உரிமைகளையும், அதிகாரத்தையும் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும். இதைவிடுத்து உரிமைகளைச் சலுகைகள் எனப் பிரசாரம் செய்வதனால் பிரச்சனைகள் தீர்ந்துவிடப் போவதில்லை.

---

# பரீட்சை நோக்கிலான கல்வி வாழ்விற்கு பயன்படாமல் போகலாம்

*கல்விப்பணிப்பாளர் கந்தசாமி*

'பாடசாலைகளில் அண்மைக் காலங்களில் பரீட்சையை மையமாகக் கொண்டு, பரீட்சை வினாக்களையும் விடைகளையும் சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்தப் போக்கு தொடர்ந்து இருக்குமேயானால், எங்கள் கல்வி பரீட்சை மண்டபத்திற்கு மட்டும் பொருத்தமானதாகஇருக்குமேயொழிய, வாழ்க்கைக்கோ வாழ்வை விளங்குவதற்கோ நாங்கள் இன்றுள்ள சவால்களை ஏற்று வாழ்வதற்கோ பொருத்தமற்றதும்பயனற்றதுமாகப்போய்விடும்" இவ்வாறு அன்னை பூபதி பொது அறிவுப் போட்டியில் சிறப்புப் பரிசில்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் திரு. கந்தசாமி அவர்கள் தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது–'பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் அனைவரும் பொது அறிவுடன் திகழ வேண்டும். பொது விடயங்களில் அவர்களுக்கு விளக்கம் வேண்டும். அவர்களுடைய எண்ணக் கருக்கள் வளர்ச்சியடைய அத்திவாரம் இடவேண்டும் என்பது ஒரு மிக முக்கியமான நோக்கு. எங்கள் பாடசாலை வாழ்க்கையில், நாங்கள் பின்னர் படித்த உயர்கல்வி நிலைகளில் படித்த விடயங்கள் பல இன்று எங்கள் மனதில் இல்லை. பல சூத்திரங்களை தலைகீழாக நின்று பாடமாக்கினோம். ஒவ்வொரு பாடத்திலும் படித்த விடயங்கள் ஆழமாக, நுணுக்கமாக வெவ்வேறு தரமாக இருந்தன. ஆனால் அவற்றை இன்று கடமை புரியும்போது யோசித்துப் பார்க்க நேரமும் இல்லை. அது மனதிலும் இல்லை. ஆனால் அந்த விடயங்கள் எங்களுக்குப் பயன் இல்லாதிருந்தாலும், அவற்றைக் கற்கும் போது பெற்ற அனுபவம்தான், இன்று எங்கள் மனதில் தொழில்பாட்டில் எஞ்சி இருக்கிறது. எனவே நிச்சயம் உங்களுடைய அறிவு, கற்குந்திறன், விளங்கும் ஆற்றல் விரிவடைய பல தகவல்களைச் சேகரித்துப் பல விடயங்களை விளங்கி இருக்க வேண்டும். அதற்குப் பொது அறிவு மிகவும் அவசியம். தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு, நிச்சயம் மாணவர்களுக்குப் பரந்த கல்வியை ஊட்ட வேண்டும் என்ற நோக்குடன் இந்தப் பொது அறிவுத் தேர்வை அறிமுகம் செய்தார்கள். அவர்களை இவ்வேளையில் பாராட்ட நாங்கள் விரும்புகின்றோம். அவர்கள் செய்யும் இந்த முயற்சி உங்கள் மனதிலே படிய வேண்டும். நீங்கள் நல்ல பயனுள்ள பிரஜைகளாக வளர வேண்டும்" என்றார்.

---

# எமது வரலாற்றைப் பதிவுசெய்து ஆவணப்படுத்தாமை பெருங்குறையாகும்

**இளங்குமரன் தெரிவிப்பு**

தமிழர்கள் தமது வரலாற்றினையும், சாதனைகளையும் பதிவு செய்து ஆவணப்படுத்தாமை எமக்குள்ள மிகப் பெரிய குறை பாடாகும்" என தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் வல்வெட்டித்துறையில் நடை பெற்ற ஆழக்கடல் வென்றவர்கள் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றும் போதுதெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் பேசுகையில், இந்த மண் செய்த அரிய சாதனைகளும், சம்பவங்களும் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை. இதைப்போலவே தமிழர்கள் தமது மொழியையும், இனத்தையும் பற்றிய பதிவுகளைப் பேணவில்லை. மிகவும் தொன்மையான பல இலக்கியங்கள் தமிழில்இருந்தும்அவைபற்றியமுழு விபரங்களும் பதிவு செய்யப்படவில்லை. இவ்வாறான நிலையில் எமது மொழிக்கு, இனத்துக்குப் பின்னர்தோன்றியமொழிகள், இனங்கள் எல்லாம் மிகவும் சிறப்புற்று விளங்குவதைக் காணலாம். எனவே இந்நூல் போன்ற ஆவணப்படுத்தக்கூடிய பதிவேடுகள் வெளியாவதன் மூலம் எமது சாதனைப் பதிவுகளை நிலைநிறுத்திக் கொள்ளலாம்எனக்கூறினார்.

# யாழ் முரி அறிமுக விழா




இம்மாதம் 7ஆம் நாள் இலண்டன் 'குரொய்டனில்' (croyden) உள்ள 'பெயபீல்ட்' (Fairfield) மண்டபத்தில் யாழ்முரி விருது அறிமுக விழா பிரமாண்டமான முறையில் நடந்தேறியது. இலண்டனில் இதுவரை நடைபெற்றிருக்காத முறையில் சனத்திரளுடன், இலண்டனின் மிகப்பிரபல்யமான ஏழு இசைக்குழுக்கள் ஒரே மேடையில் தோன்றி மக்களைஇசைவெள்ளத்தில்ஆழ்த்தினர்.

தமிழீழத்தின்மருத்துவநிதிக்காக,ஐக்கிய தமிழர் அமைப்பினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சி, தற்பொழுது இலண்டனில் பரபரப்பாக எல்லோராலும் பேசப்படுகின்ற, அடுத்து எப்போது என்று எதிர்பார்க்கப்படுகின்ற நிகழ்ச்சியாகியது. என்றுமில்லாதவாறு 1600 இருக்கைகள் அடங்கிய இந்நிகழ்ச்சி மண்டபம் நிரம்பி வழிந்தோடு மட்டுமல்லாமல் நூற்றுக்கணக்கான மக்களினை மண்டபவாயிலில் வைத்து திருப்பி அனுப்பவேண்டிய இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்திய நிகழ்ச்சியாயும் ஆகியது.

விழாவை ஒழுங்கு செய்திருந்த மேற்படி அமைப்பினர் மேற்படி விழா ஆண்டுதோறும், மிகச் சிறப்பாக சுயமாய் இசையமைத்துப் பாடி, வெற்றிபெறும் இசைக்குழுவிற்கு யாழ்முரி விருது வழங்கப்படுதற்கு நிகழ்த்தப்படும் எனஅறிவித்திருந்தனர்.

கோல்ட்ஸ்ரார்ஸ்,கீதவாணி, சப்தஸ்வரா, ஸ்கை றோஸ், சாதனா, சித்ராலயா, ரெயின்போ ஆகிய ஏழு இசைக்குழுக்கள் இதில் பங்கேற்றன. இவ்விசை நிகழ்ச்சியில் ஒவ்வொரு இசைக்குழுவும் விடுதலைப் பாடல்களோடு மட்டுமல்லாமல் சுயமாய் இசையமைத்த பாடல்களையும் பாடியமை, வெறுமனே திரைப்படப் பாடல்களை மட்டும் பாடிக்கொண்டிருந்த காலம் போய் நாட்டின் யதார்த்த சூழ்நிலைகளைப் பிரதிபலிப்பதாய் அமைந்தது. விழாவின் இடைமிடையே புலவர் சிவநாதன் அவர்கள் நெறிப்படுத்திய 'கதம்பம்' கலைநிகழ்வு இடம்பெற்றது. இதில் முதியோர்களாய்ப் பங்கேற்றிய திரு. குலராஜ், திரு. எட்வேட் ஆகிய இருவரது சிறப்பான நடிப்பு, தமிழீழத்தின் இன்றைய நிலைமினையும்,பெறப்படும்வெற்றிகளையும் பல நகைச்சுவை உணர்வோடு வெளிப்படுத்தி சபையோரை சிரிக்கவும், சிந்திக்கவும்வைத்தது.





இசைவடிவம்எனும்போதுதமிழ்மொழி தனக்கென ஒரு இராக அமைப்பினைக் கொள்ளவில்லைஎனவும்,அதனாலேயே வடமொழியின் இராக அமைப்பினை தன்னுட் கொண்டது எனத் தவறாக நாமெல்லாம் எண்ணி, அவ்வாறு காம்போதி என்றும் கல்யாணி என்றும் இராகம் பாடிக் கொண்டிருக்கிறோம். ஆனால் முற்காலத்திலேயே தமிழ், தனக்கென இசை வரையறை அமைப்புகளுடன் 'பண்ணிசை' என இசைவடிவங்களை தன்னுட் கொண்டிருந்தது. காலத்தின் கோலத்தில், அந்நியரின் வருகையில் அது வசமிழந்து மக்களிடையே அருகிவரத் தொடங்கியது. ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டம் எமது தேச விடுதலையோடுமட்டுமல்லாமல்,எமது இன விழுமியங்களையும் மீளக் கொண்டு வருகின்ற ஒரு முயற்சியாகப் பரிணமித்து நிற்கின்றது. அவ் வகையில் இசையிலும் எமது மூதாதையரால் போற்றிப் பாடப்பட்டு வந்த பண்ணிசையில் ஒரு இராக அமைப்புத்தான்இந்தயாழ்முரி.யாழ்முரி என்னும்போது யாழை விஞ்சியது எனப் பொருள்படும். இவ்விடத்தில் அவ் இசையின் உயர்வு நோக்கியே யாழுடன் ஒப்பிடப்பட்டதே அன்றி யாழை இழிவுபடுத்தும் நோக்கல்ல. எனவே மறைந்துவரும் எமது விழுமியங்களை மீளக்கொண்டு வரும் நோக்கில், வழங்கும் விருதுக்கு யாழ்முரி எனக் குறிப்பாகப் பெயர் வழங்கப்பட்டுள்ளதென விழாவில் விளக்கம் கொடுக்கப்பட்டது. அதுமட்டுமன்றி திரு. சோமசுந்தர தேசிகர் அவர்களினால்யாழ்முரிஇராகம் எவ்வாறு அமையும் என சபையோர்க்குப் பாடியும் காட்டப்பட்டது.

விழா மண்டபமும், மனதும் நிறைந்து இளைய சந்ததியின் திறமைகளை வெளிக்கொணர்ந்ததோடு மட்டுமன்றி, தாயகத்தில் போரின் அழுத்தத்தில் விளைந்த நோய்தீர்க்கும் மருந்தாகவும் அமைந்தது.

செஞ்சோலை பாடசாலைக் கட்டிட நிதிக்காக
தமிழ்ப் பெண்கள் அமைப்பு – பிரான்ஸ்
வழங்கும்
இரு தமிழீழத் திரைக்காவியங்கள்...
ஈர உணர்வுகளை மென்மையாகப் படம்பிடிப்பது
காற்று வெளி
கருவி தாக்கி களம் ஏகும் புலிவீரர் சிரிப்பார்
மனம் ஏங்க அவர் பாதைபடரும்
பார்வைகளில் ஈரம்
விழுதெறிந்து கிளைபரப்ப விளைந்த மரம்
துயரம் சுமந்தது எப்படி....?
விடை தருவது....
இரு காட்சிகள்
பிஞ்சு மனம்
தான் சுமந்த குஞ்சுகளோ திக்கொன்றாய் சிறகு விரித்தன.
துயர்சுமந்த "பிஞ்சுமனம்" திக்கற்ற குஞ்சுகளை சிறகணைத்தது
காலம்: 21-05-1995 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 4.00 மணி ★ மாலை 7.30 மணி
இடம்: TRIANON
80 Bld Rochechouart, 75018 Paris.
Metro: Anvers

# நெதர்லாந்தில் சித்திரைமாலை

செஞ்சோலைமகளிர்பாடசாலைக்கட்டட நிதிக்காக, நெதர்லாந்து தமிழர் கலை, பண்பாட்டுக் கழகத்தினர் கடந்த சித்திரை மாதம் 22ஆம் நாள் 'சித்திரை மாலை' என்னும் கலைநிகழ்ச்சியைச் சிறப்பாக நடாத்தினர். தொடக்க நிகழ்ச்சியாக, எம்மின விடிவிற்காய் தம்முயிர் ஈந்த மாவீரர்களுக்காக, 2நிமிட அமைதி




வணக்கம்செலுத்தப்பட்டது.தொடர்ந்து வரவேற்புரைவழங்கப்பட்டது.

இதனையடுத்து செஞ்சோலை சிறுவர் பற்றியஉரையைஆற்றியசிறுவன்,தனது இனிமையான குரலில்விளக்கமளித்தமை பலரையும் வியக்கவைத்தது. அடுத்ததாக "காவடி தூக்கிய சிறுமிகள் நாங்கள்.."என்னும்பாடலுக்குசிறுமிகளால் ஆடப்பட்ட காவடிநடனம் பெரும் பாராட்டுதலைப் பெற்றது. தொடர்ந்து "குழல் ஊதி மனமெல்லாம்.." என்ற பாடலுக்கு இரு சிறுமிகளால் ஆடப்பட்ட நாட்டியம்சிறப்பாகஅமைந்தது.

நாட்டியத்தைத் தொடர்ந்து வடநெதர்லாந்தில் இருந்து பங்கெடுத்துக் கொண்ட சிறுங்குயில்களால் நடாத்தப்பட்ட வில்லுப்பாட்டு அரங்கில் வில்லூன்றி நின்றது. அடுத்த நிகழ்வாக 'டென்காக்கை'ச் சேர்ந்த பரதநாட்டிய மங்கையால் ஆடப்பட்ட பரதநாட்டியம் திறமையாக இருந்தது. இதன் பின்னணியில் "அழகு மயில் தோகை விரித்தாடுது.." என்ற பாடலுக்கு மற்றுமோர் நாட்டியம் ஆடப்பட்டது.

அடுத்ததாக "இந்தக் கடல் எங்கள் சொந்தக் கடல்.." என்ற பாடலுக்கு சித்திரைமாலைச் சிறுமிகளால் மீனவ நடனம்வழங்கப்பட்டது.

வரவேற்புரையைத் தொடர்ந்துமுதல் நிகழ்வாக மத்திய நெதர்லாந்தைச் சேர்ந்த இளைஞர் களால் 'ஞானசௌந்தரி' என்ற நாட்டுக்கூத்து மேடையேற்றப் பட்டது. ஞானசௌந்தரியின் சிம்மக் குரலை காணக்கொடுக்க மாட்டோமோ எனக் கேட்ட சபையோரிற்கு, அடுத்ததாக இடம்பெற்ற 'சோலோ'க் கச்சேரி செவிகளுக்குஇதமாகஇருந்தது.

தொடர்ந்து இடம்பெற்ற சிறார்களின் கோலாட்டம் சபையோரை மெய்சிலிர்க்க வைத்தது. மெய்சிலிர்த்த சபையோர் சிறுமியரின் கும்மி நடனத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். கும்மி நடனத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற 'பண்பும் பகட்டும்' என்ற தாளலயம் என்னும் நாட்டுக்கூத்து இடம்பெற்றது. இது சபையோர் எல்லோரையும் பரவசத்தில் ஆழ்த்திஇரசிக்கவைத்தது.

இறுதிக் கலைநிகழ்வாக நெதர்லாந்து இசைக்கலைஞர்களால் 'இசை அமுதம்' என்னும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது. நன்றியுரைவழங்கலுடன்சித்திரைமாலை இனிதேநிறைவடைந்தது.

# முள்ளுத் தடியெடுத்து முதுகு சொறியவோ!

இயந்திரம் பூட்டிய
இரும்புப் பறவைகள்
எங்களின் வானத்தை
உழுது செல்லும்...
ஆங்காங்கே ~ சில
பனைகளின் தலைகள்
பற்றிக் கொள்ளும்
தேன் நீர் சுமந்த தென்னைகள்
சிரச் சேதமாகும்
வியர்வை குழைத்துக் கட்டிய வீடு
கொடுமழை கண்ட குருவிக்கூடாய்
குலைந்து போகும்
இடிபாடுகளுக்கிடையில்
இரத்த சாட்சிகள் இருக்கும்


நாட்கள் சிலவாச்சே
நடந்தது என்ன...?
பலாலி வான்பரப்பு
பரபரப்பின்றிப் போனது எப்படி?
'அவ்ரோ'!
அதன் அரவத்தையே காணோமே
'புக்காரா'!
போய் எங்கே முடங்கியது?
வெண்முகில் விரிப்பில்
வெடிவைத்துப் போனவர் யார்?
வான வெளியை வளைத்து
பூட்டிவைத்தவர் யார்?
புலிகள்! போர்ப் பரணியில்
புதிய பகுதி யாத்தனர்
வில் வளைத்தெடுக்க,
ஆட்காட்டி விரலையே
அம்பு தைத்தது
மல்லாக்கப் படுத்து துப்பிய எச்சம்
மறுபடி வந்து முகத்தில் அறைந்தது
குண்டுகள் வீழ்ந்த குருதி மண்ணிலேயே
பகைவீட்டுப் பறவையை வீழ்த்திய பின்பு
தணல் பொதிகளைத் தள்ளிய கரங்களை
தேடிப் புலிகள் சேகரித்தனர்

எறிகணைகளோடு
இறைச்சியும் ஈரப்பலாக்காயும் ஏற்றி
இன்றோர் விமானம் வாராதா?
சிகரட்டும்,
சீமைக் குடிவகையும்
இனி எப்போது இங்கு வரும்?
பலாலியுள் இருந்து
படைவீரன் ஒருவன்
அடிக்கடி வானத்தை
அண்ணாந்து பார்க்கிறான்!

அன்றொரு சேதி
அவசரமாய் வந்தது
போர் ஒன்று வெடித்ததால்
பொருளாதாரத் தடை மீண்டும்
பூரணமாய் அமுலாம்.

நீண்டு பரந்த~ எம்
நிலப்பரப்பு மட்டுமல்ல,
நீலத்திரை சுமந்த
நீள் கடல் மட்டுமல்ல,
இப்போ ~ எம்
வானமும் மீட்கப்படுகிறது!
காலம் இன்னும்
கடந்துவிடவில்லை
இதய சுத்தியோடு வாருங்கள்
இருந்து பேசுவோம்!

*– சோதியா, நோர்வே.*






L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943


Printed by Observer Group Newspapers.